E 715 E 715

உ

சிவமயம்.

இஃது

ஸ்ரீ முற்கபுரியென்னும் உடையார்பாளையம்

# ஸ்ரீ பயறணீச்சுரர் ஸ்தலபுராணம்.

மேற்படியூர்

மகாகனம் பொருந்திய

மகா-ள-ள-ஸ்ரீ 23-வது சமஸ்தானாதிபதியவர்களாகிய

ஸ்ரீமது கச்சியுவரங்கப்ப காலாக்க தோளஉடையார்

அவர்கள் உத்திரவின்படி மேற்படி சமஸ்தானம்

ப்ரம்ம ஸ்ரீ ராஜாசாஸ்திரியவர்களால்

வடமொழியிலிருந்தெடுத்து

மேற்படி சமஸ்தானம் வித்வான்களிலொருவராகிய

வீரசைவம்

வாலசரஸ்வதி சுப்ரமண்யக் கவிச்சக்ரவர்த்தியின்

குமாரர் கம்பராமாயணப்பிரசங்கம்

கனகசபைகவிராயரால்

தென்மொழியி லியற்றப்பட்டது.

---

சிதம்பரம், பெரியமடம், வீரசிம்மாசனாதிபதியாயும் வித்வசிரோன்
மணியுமாகிய சென்னப்பநாயகன் பாளையத்திலிருக்கும்

ஸ்ரீலஸ்ரீ பச்சைக்கந்தையசுவாமிகள்

பார்வையிடப்பட்டு

சிதம்பரம்

ஸ்ரீ குஞ்சித சரண அச்சியந்த்ரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1912-ஆ ஜூலை-மீ 20-உ

Title page Printed at The LORD RIPON PRESS, Kumbakonam.

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

---

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்
மஹாமஹோபாத்தியாயருமாகிய ப்ரம்மஸ்ரீ
உ. வெ. சாமிநாதையரவர்கள் இயற்றியது.

எவரங்கமிவ ங்கத்திணையெனமன்னவரங்கமியையப்பெற்ற
நவரங்கமணிபணையவுடையார்பாளையத்திறைவனலஞ்சேர்கச்சி
யுவரங்கக்காலாட்கடோழமகிபாலன்மகிழ்ந்துரைத்தலாலே
தவரங்கக்கனகசபைபயறணீசன்புகழைத்தமிழ்வித்தானே.

தருமபுர வாதீனத்தைச்சேர்ந்த வித்வான்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகசுவாமிகளவர்கள்
இயற்றியது.

தா மன்னவர்கணுற்புலத்தானுவகையுறநகைமையன்றென், லவுறுசெவிப்புலத்துக்கறிவுறுத்தல்புண்ணியஞ்சேரியற்கையென்றே, சீலமுறுசிவசரிதங்கேட்டிருமைப்பயன்பெறனற்செய்கையென்னக், கோலமுறுசெங்கோல்கொள்கச்சியுவரங்கமன்னன்கூறக்கேட்டு.

சமுகமதினுறைவீரசைவகுலத்தினின்வந்ததமிழ்ச்சிங்கேறும், பமுகமதியிலக்கியமுமிலக்கணமுங்கற்றுணர்ந்தபான்மைமிக்க, சுமுகமதிக் கனகசபையெனும் புலவன்றென்மொழியாற் சொல்லவேண்டிக்; குமுகுமெனமணக்கும்வகைப்பயறணீசன் சரிதங்கொடுத்தான்மன்றே.

சிதம்பரம் பெரியமடம் வீரசிம்மாசனாதிபதியாயும்
வித்வசிரோன்மணியுமாகிய சென்னப்ப நாய்க்கன்பாளையத்தில்
இருக்கும் ஸ்ரீலஸ்ரீ பச்சைக்கந்தையசுவாமிகள்
இயற்றியது.

கல்லாதபேர்களிடங்கற்றவரைவேண்டியனகனகந்தந்து
செல்லாதுவாழ்விக்குமருமையுபெருந்தகமைச்சியமன்னன்
வல் ண்மையோர்வணங்கும்வல்லாண்மைமிக்கமதியந்திரியான
சல் பமானசமஸ்தானயுவரங்கேந்திரன்றனகுபேரன்.

# சிறப்புப்பாயிரம்.

காரிருக்குங் கரதலத்தானுமைபாகப் பயறணிநாதன்றன்காதை, சீரிருக்கும்வடமொழியைமொழிபெயர்த்துத்தென்மொழியிற்செப்புகென்னக், கூரிருக்கும்புலவரெல்லாங்கூட்டுண்ணுமதுரமொழுகுறவேயென்றும், பேரிருக்கும்படிமொழிந்தான் வீரசைவக்கனகசபைப்பெயரினானே.

சிதம்பரம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிம்மாசனாதிபதியான
குருநமசிவாயராதீனம் மாநேசரும் ஸ்ரீ சபாநாயகர்
காலசந்திக்கட்டளை ஸ்ரீமான் வெ. தில்லைநாயகமுதலியாரவர்கள்
மாணாக்கருமாகிய ம-ள-ள-ஸ்ரீ
ச. ஏகாம்பர ஐயரவர்கள் இயற்றியது.

பொற்கலையன்முதற்புலவோர்போற்றிசைக்குநடங்குனிப்பப்புகழ்ச்சிசான்ற; வற்கலையைவிரித்துடுத்திப்புற்கலையையேந்தித்தூய்வண்ணமாய, வெற்கலையைத்தரித்தபிரானைமதுபிரான்றிருவருளினெழிலேகொண்ட, முற்கபுரிமான்மியத்தைமொழிபெயர்த்திங்கியற்றிடென்மொழிந்தான்மன்னே.

அப்பெரியதகையுடையானுரிமை மிகுமத்தலத்துக்கரசனானோ,னொப்பறுசீர்புவரங்கமகிபாலனெனவிளங்குமொருபேர்பூண்டோ, னிப்புவியினடப்பெருமாற்கிரசிதவாகனமுதலவீந்தவண்ணல்; செப்பரியசெவிச்செல்வஞ் செல்வமெனக் கொண்டொழுகுஞ்சீரோனம்ம.

அம்மன்னனுரைசெயல் கேட்டிருவருக்கு மெஞ்ஞான்றும்மழகிதென்னச், செம்மையுணர்வானுகித்தந்நெறியைக்கடைப்பிடிக்குஞ்சீர்த்தியுள்ளோ, னிம்மெனுமுன்மொழுமொழுனத்தமிழ்ப்பாக்களிசைக்கவலவிளவேறன்னா; னெம்மையினும்புகழ்நிறுத்தக்கனகசபைக்கவிச்சிங்கவியல்வல்லோனே.

இப்புராணீகர் மாணாக்கருளொருவராகிய ம-ள-ள-ஸ்ரீ
சோமசுந்தரம்பிள்ளை யவர்கள் இயற்றியது.

கொடுக்கும்வகையறிந்தறத்தைப்பொருந்து புகழொன்றுறவேகுவலயத்திற், கொடுக்கவுரியோர்போலமற்றையர்க்குமதிப்புளதோகுணமுண்டேயோ, கொடுக்கும்வகையிலதுகரவொளிப்பாகுலோபியர்க்குக்கொடையினாலே;கொடுக்கக்காட்டுறவந்தகச்சிபுவரங்கேந்திரன்கூறுகென்ன.

# சிறப்புப்பாயிரம்.

ஆதிபிற்றில்லைபினிலம்பலத்தாடியாமையனோர்சதகமொழியு மையாமுக்குறாணிவிக்னேச்சுரனடஞ்செய்தானவன்வழிக்குருலி ங்கமே, நீதியிற்கிஷ்ணபாரதமொழிந்தான்வழியினிமலனாங்கந் தசாமி நிபுணனேயரியலூரரசன்முன் னெமகண்டநேர்ந்துரைத் தான்போனாஞ்; சோதிபெறுசுப்பய்யனேசாமிமலையினதுதூய்ப் புராணஞ்சொற்றனன் சுதனென்னும்வேலையன்சுப்ரமணியக்கவி ஞன்றாயபழூர்ப்புராணம், மோதினமையாலப்பரம்பரைவிடாம லேயுற்றசெய்கனகசபையாமொண்கவிஞனிந்தவுடையார்பாளை யப்புராணம்பலர்க்குதவினானே.

மேற்படி மாணாக்கருளொருவராகிய அழகாபுரம் ம-ள-ள-ஸ்ரீ
சோசியம் சுப்பாராய நாயுடுகார் இயற்றியது.

வாய்மைபொறையடக்கமிகு வண்மைகுணங்குலமரபின்றரு மம்வாய்ந்த; காய்மையெலாமோருருக்கொண்டென்னவருகுல திலகதனவானான: செய்மையெலாம்புகழ்மலிந்தகச்சியுவரங்க மகிபாலச்சிரோன், ஆய்மெய்தவித்தலத்தின் மான்மியத்தைச் செப்புகெனஅறிவித்தானால்.

என்போலப்பலருமறிதரக்கல்விப் பொருளதனையீயவல்ல, பொன்போலுஞ்சற்குணமுஞ் சிவபூசை நெறிமுறைமைபொரு ந்துமன்புந், தன்போலுநேரிலாக்கனகசபையெனும்புலமைத்த கமையுள்ளோர்; னன்போடும்பயறணிநாதன்புகழ்மைபரிமளிப் பவளித்தான்மன்னோ.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

## இந்நூலாசிரியரியற்றியன.

கெங்கைகொண்டசோளேச்சரத்தலபுராணம்.
குழூர்த்தலபுராணம்.
உடையார்பாளயத்தலபுராணம்.
பெண்ணையாற்றுத்தலபுராணம்
திருப்புன்கூர்த்தலபுராணம்
திருக்கள்ப்பூர்த்தலபுராணம்
பெரியபுராணச்சுருக்கக்கலிவெண்பா
கடம்பர்கோயிற்பிள்ளைத்தமிழ்
மணத்தட்டைப்பிள்ளையார்பிள்ளைத்தமிழ்
சிவஞானபாலையசுவாமிகண்மாலை
குருநமசிவாயமாலை
திருவேரகமாலை
தையனாயகிமாலை
கணக்கர்மாலை
தருமகர்த்தாமாலை
உதயனத்தம் சண்டீஸ்பரியம்மன்பதிகம்
சாமிநாதசுவாமிபதிகம்.
இலையூர் சுப்பிரமணியர் பதிகம்.
பந்தணைநல்லூரம்மன் பதிகம்

கணபதிதுணை.

# முற்கபுரிஎன்னும் உடையார்பாளையத்
# தலபுராணம்.

## காப்பு.

உலகமெலாம்படைத்தளித்தேயொருவுவித்தறனைவிளையாட் டெனவுஞற்று, நிலவணிவேணிப்பெருமான்வேறுதான்வேறெ னவேநிகழ்த்துவோர்முன், னலடீவியெம்பேரழியின் கையோ மூக்கோவெனவபேதநாட்ட, வலநெடுங்கைநாசிகொண்டசந் திரசேகரக்களிற்றைவணங்கிவாழ்வாம்.

## பாயிரம்.

கடவுள்வாழ்த்து.

### பயறணிநாதர்துதி.

பூமேவுமாதவனுமாதவனுமாதவரும்புகழ்ந்துபோற்ற [டி
வோமேவுமுதலவன்யானெனக்காட்டக்கடுக்கைமலருவந்தசூ
நாமேவுபாஞ்சுடராயெண்ணியவெலாமளிக்குநாதனுகித்
தாமேவுபயறணீச்சுரனடியையன்பினெடுதலைமேற்கொள்வாம்

### நறுமலர்ப்பூங்குழல்நாயகியம்மைதுதி.

சுழிமலரப்பயருக்கிபப்பயற்றைறக்கழியாக்கக்கணவனுக்கே, பொழிமலரச்சத்திபளித் தச்சத்தியாற்பெயரும் புனைவதாக்கி, வெழிமலர்மாமகளிர்தமை விருப்பமெலாமளித்தருளவிழியாக் கொண்ட, நறுமலர்ப்பூங்குழலென்னுநாயகிதாண்மலர்முடிபே ணண்ணவாழ்வாம்.

---

பிரணவத்தோடுகூடிய பஞ்சாக்ஷரம் போன்றது.
நரம்பும் ஐந்துஇதழுக் கூடியது கொன்றைமலர்.
சுழியென்பது, மினசு.

## சபாநாயகர் துதி.

மனமுய்யப்பொதுவினடமிடுவார்க்குப்பாரபட்சமருவாதென்று, மனகவடிகலவுமெனல்போற் கலகலென்றணிநூபுரங்களார்ப்ப, நினைவரியவெளியாலெச்சமயத்தாருங்கரைந்தேகின்றிறைஞ்சக்,கனகசபையினினடஞ்செய்யொளிக்கொளியாம்பேரொளியைக்கருத்துட்சேர்ப்பாம்.

## சிவகாமியம்மை துதி.

கோட்டிமைக்குமலரென்னமுகமலர்ந்துபல் லுயிருங்குலவும் வண்ணங்; கோட்டிவைத்துவினைக்கயிறுகொடுமண்ணும்விண்ணுமுறக்கோடியண்ட, மாட்டிவைப்பான்றன்னையாளுட்டிவைப்பனெனும் வன்மைக்கம்பலத்து, ளாட்டிவைத்துக் கூத்துக்கொள்சிவகாமசுந்தரிதாட்கன்புசெய்வாம்.

## தெக்ஷணாமூர்த்தி துதி.

மித்திருக்கறம்பொருளின்பென்பவையைமண்ணவர்க்கும் விண்ணவர்க்குஞ், சித்திரமாயளிக்குமொருமுழுமுதலேசனகாதிதெளிவிலோருக், கெத்தரையுமறிபொண்ணாவழியாதசெல்வத்தினின்பத்தைச்சின், முத்திரையின்மரக்காலாலளந்தபொருளாளிபதமுன்னிவாழ்வாம்.

## வில்வளைத்தவிநாயகர் துதி.

மல்வளைத்தவவுணர்புரம்வதைப்பவெழிற்சாணகிரியைமணப்ப மேருக், கல்வளைத்தவில்வளைத்தல்தம்பொருட்டலாற்பிறரைக் கருதியேயோ, சொல்வளைத்தபார்த்தனுக்காவுபகாரமிகக்கருதிச்சுரந்தவன்பின், வில்வளைத்தவிநாயகன்றாட்டாமரையையனுதினமும்வேண்டிவாழ்வாம்.

## சுப்பிரமணியர் துதி.

கருமையிலேறுறுமாலுங்கருமையிலேறுறுமாலுங்கண்டுகண்டே, யருமையிலேறும்படிக்குமருகன் மாமனை வணங்குமுறைமையன்றி, யொருமையிலேறிறைவன்றீங்கிருமையிலேறுவண்ணமிறைஞ்சிநிற்கும், பெருமையிலேறும்பெருமான் பெருமையிலேறும்பதத்தைப்பேணிவாழ்வாம்.

---

மரக்காலால் என்பது, கல்லாலவிருக்ஷத்தினிடம்.

## சரஸ்வதியம்மன்றுதி.

தண்கமலமயப்பொன்னிதனைத் தந்தோனெனும் பிறந்துசங்கத்தொட்டிற், கண்கமலமலர்ந்திருந்துகற்றவருள்ளினிடந்து காதல்கொண்டே, யொண்கமலநாதனுவுறைந்தென்னுவினினடனமுறுற்றுகின்ற, வெண்கமலத்தான்சிறந்த செங்கமலத்தாள்சிரத்தின்மேவவாழ்வாம்.

## திருநந்திகேஸ்வரர்துதி.

அந்திமாமதிபுனையுமண்ணறிருச்சந்நிதியினமைந்தன்றன்சீர், கொந்தலராமணந்திடக்கல்யாணபுரிவசவண்ணகுருவாத்தோன்றி, வந்துலகில்வீரசைவசமையநெறிவழாதளித்தவள்ளலானந் நந்திகேச்சுரனடியாநகைமலரையகமலரநண்ணிவாழ்வாம்.

## திருஞானசம்பந்தசுவாமிதுதி.

சேலாலேதிகழுங்கங்கைகடப்புறக்குகண்பாற்சென்று
போலாலேதம்பியென்றேயிழிவுரைபுகன்றோனுணக்
கோலாலேயன்றிமுள்ளிக்கிராய்க்கரைக்குறுகியங்கண்
டாலாலேகாவாய்போக்குந்தலைவன்றுடலையிற்கொள்வாம்.

## திருநாவுக்கரசுசுவாமிதுதி.

மூலமிதப்பமடவாரைமுயங்கிமனமிதப்பதன்றிமுதிர்கடற்கண், ணலமிதப்பவறியாதவ்வனந்தனமளித்துயிலையமர்ந்தோனுணக், கொலமிதப்பச்செய்ததைவெம்பவக் கடலைக்கடந்துநாவரசாக்கூற, மலமிதப்பச்செயப்பாடியவனடியென்றலைமிதப்பவணங்கிவாழ்வாம்.

## சுந்தரமூர்த்திசுவாமிதுதி.

கொங்கலர்மேவிஞனிம்முதுகிரிகுறுகியங்கண்
பிங்கலமிலாதிறப்பநிவ்றும்பிரமனுண
மங்கலையடையாதுற்றுத்தூய்ல்மைகயின்மன்னியுற்ற
செங்கலைப்பொன்னுத்தந்தான்றிருவடிசென்னிசேர்ப்பாம்.

## மாணிக்கவாசகசுவாமிதுதி.

நாதவோவென்றுபற்பனவியுழன்றடியரெல்லாம்
வேதைதமிக்குற்றேறயெம்மான்விரைமலரடிமேவுற்று

ரதியாம்பரனேபல்லற்பட்டடிபட்டுமாண்ட
வாதவூர்முதல்வன்பொற்றாண்மரைச்சிரமன்னிவாழ்வாம்.

## தண்டிகேசுரர்துதி.

பாப்பாடிப்பற்பலவெண்பாப்பாடியாக்கரந்தபாலையாட்டிச், சாப்பாடிலாமல்பொம்மல் சாப்பாடிலாதுவப்பிற்சபரிசெய்து, காப்பாடிப்புகழ்ந்தென்றுந்தன்றேளிலரனிடத்தோணணியாட, வாப்பாடியமர்ந்தவரைப்போய்ப்பாடி வினைக்குவிடையளித்துய்வாமால்.

## அறுபத்துமூவர் முதலடியவர்கள்துதி.

வேறு.

திருத்தொண்டத்தொகையுண்மெயவடியவர்செய்யதாளும்
விரித்தண்டர்புகழுஞ்சோமநாதர்தாய்விளம்பநின்ற
கருத்தண்டத்தொழும்பர்தாளுங்கருதுவெண்ணீற்றேடக்க
வுருத்தண்டார்புனைந்தோர்தாளுமுத்தமாங்கத்தின்வைப்பாம்.

## சப்தமாதர்கடுதி.

இணங்கருள்சேர்விழியாரையெமக்கன்றிவிழியாரையெளியார்க்காக்குங், குணங்கொள்ளுநடையாரைக்கோலவன்னநடையாரைக்குலாய்முத்தாலா, மணங்கொள்ளுங்குடையாரைமருவலருக்குடையாரைவாழ்வீவாரை, வணங்கொளுமாதரைவாஞ்சத்தமாதரையன்பின்வணங்கிவாழ்வாம்.

## மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ வீரசிம்மாசனாதிபதி பச்சைக்கந்தசுவாமிகள்.

நபதேசம்பரவுமல்விகார்ச்சுனமாம்பருப்பதத்தினன்குதித்துச், செபதேசாற்றேவியினுன்மரகதத்தின்கடகங்கந்திவைசிறந்தே, சபைநேசங்கொண்டவெம்மான்றுண்டவஞ்செய்தில்லைபெனுந்தலத்தில்வாழ்வுற், றுபதேசகுலகுருபச்சைக்கந்தசாமிபதமுளத்திற்கொள்வாம்.

## துறைமங்கலஞ் சிவப்பிரகாசசுவாமிகள்.

தவப்பிரகாசமோங்கிமுதுகிரிவாணர்தாளை
நவப்பிரகாசமாவுட்கொண்டுநல்காற்றார்மேவி
யவப்பிரகாசநீக்கிபருளிருபொருளளிக்குஞ்
சிவப்பிரகாசவள்ளல்சேவடிசென்னிசேர்ப்பாம்.

## ஆசிரியர்வணக்கம்.

துறையறியாவெளியேனுக்கிலக்கியமுமிலக்கணமுந்துலக்க மேவு, நிறையறிவுந்தமிழறிவுங்கவிஞர்கண்முன்சார்வுறாமிங்கெ றியுநல்கிக்; குறையகற்றியெனையாளுங்கோமானுயெழுந்தருள் செய்குருவாய்வந்த, மறையவர்சிகாமணியாஞ்சபாபதியைய ன்றிருத்தாண்மன்னிவாழ்வாம்.

## அவையடக்கம்.

நறுந்தமிழ்நூலுணர்ந்தநாவலர்பயறணீசற்
குறும்புகழுரைக்கமாட்டாதொருவுறுஞ்சரிதந்தன்னை
வெறுந்தமிழ்ப்புன்மைநாயேனறிவின்விளம்பலோர்சிற்
றெறும்புவான்றிரட்டிமுற்றுமிரைகொள்வனென்னலேய்க்கும்.

வேறு.

தானொருகருமமாற்றிற்றக்கவொழுங்குரைப்பர்
வானுறுமரங்கல்லுக்குமாங்கனியளிக்குமாபோல்
மானெறியறிவோர்நெஞ்சில்வைகியகேள்வியாவும்
யானறிவுறுமாறேயிக்காதையையறைகுவேனால்.

ஆற்றினின்மூழ்குவோர்களங்கணச்சேற்றையாயார்
பாற்றனைக்கொள்ளுவோர்கள்பயங்கொளும்பண்புபாரார்
நீற்றணிமேனியெம்மான்காதையினயத்தோர்பொன்
மாற்றெனக்கொள்வரன்றிவிடுவர்சொல்வழுக்குங்காலே.

என்னுரைசெய்தாய்மிக்கவிழுக்குரையென்றேயெந்தை
முன்னுரைத்திடுவனென்னின்முல்லைமல்லிகையோடொப்பப்
பொன்னுரையெனவெருக்கப்பூவொடுமத்தம்பூவை
மன்னுறப்புனைந்திலாய்சொல்லென்றுரைவழங்குவேனால்.

மூதுரையறிஞர்சூடுமாலைமுயங்குவேற்குத்
தீதுரையேனிசைத்தாயென்னவேயெம்மான்செப்பின்
வாதுரையாதநன்றுண்மங்கலமிகவிருப்ப
வாதிரைநாளென்கொண்டாயென்றெதிரறைகுவேனால்.

அன்பினிற்பாடுஞ்செய்யுளணிகுவனன்றியாக
வன்பினிற்பாடுஞ்செய்யுண்மருவுறேனெனவழங்கிற்

பொன்பொன்னாரத்தைநாகமணியினைப்புனைதலொப்ப
வெண்பிணாரத்தையேன்பூண்டாயெனவியம்புவேனால்.

மூடத்தின்மாமதியிலைந்தோன்மூதுக்குறைவாளரன்றி
மடத்தினின்மிக்காய்கேளேமெனுமொழிவகுக்குமென்னிற்
கடத்தினைமுதிருக்கக்கண்டுடன்சினிகிற்க
விடத்தினையேனயின்றாயெனவெதிர்விளம்புவேனால்.

வையத்தோரெனையிகழ்ந்துநகைக்கவுமாசுமீதா
யெய்தவும்புன்சொல்லாலேயியம்புவதென்னையென்னின்
மையறுகவிஞருக்குள்வல்லவர்வாய்மொழிந்த
தெய்வமாத்தன்மையானசெய்கையைத்தெரிப்பதற்கே.

கடகராசியினைமீனராசியையொருக்கால்காண்பாய்
குடிலத்திற்களங்கியன்றியொருபக்கங்குலவுசோமா
வடைவுடன்காண்பனென்றுமிருபக்கமமைவனாய்தாய்
விடுவெனக்குரண்டங்கூறலென்னவேவிளம்புவேனால்.

கஞ்சமேமலருகின்றகயத்தினிற்கொட்டியாம்பன்
மஞ்சியாம்புரிவமென்னமலர்ந்திடுமாற்றம்போலச்
செஞ்சொலாரணமுன்னானசெந்தமிழ்மிகக்கற்றுள்ள
விஞ்சையர்புன்சொல்விள்ளாரென்னவும்விளம்புவேனால்.

குற்றமேபார்ப்பதென்றுஞ்சிறியர்கள்கொள்கையாகு
மற்றமேபாராதாய்தல்பெரியவர்கடமையாமப்
பெற்றியையெண்ணிப்புண்டரீகமான்மியத்தைப்பேசு
லுற்றனன்பின்னுறாதவுக்கங்கொண்மறியையொப்ப.

பித்தளையேனுந்தக்கவகரத்தின்பெற்றியாலே
கைத்ததாவாக்குகின்றவித்தகர்கடமையேபோன்
முத்தளையிலார்தஞ்சொல்லாற்றாய்தாய்க்கிமொழிவரேனும்
பித்தளைநெஞ்சனாகியாசையிற்பேசுவேனால்.

வேறு.

வல்லாருநான்மறையும்பயறணீசன்புகழைவாய்மையாகச், சொல்லாமலென்செய்வமெனவறைந்தேமிக்கவனர்தொடங்கு வாரேல், கல்லாதவெள்ளறிவிற்புல்லறிவிற் புல்லறிவேன்கழறும்பான்மை, பல்லான்றபலகலையுமொருமூக்கன்பகர்வுறும்பான்மையாமால்.

பாரகசகாப்தமதோராயிரத்தியெண்ணூற்றிப்பதினொன்றெ ன்னுந், தேரகமாங்கரவருடச்சித்திரையின்றிங்கடனிற்சிறப்ப தாகச், சீரகம்பெற்றிடுமுற்கபுரியீசன்மான்மியத்தைச்செய்யு ளாக, வேரகம்வாழ்வீரசைவக்கனகசபைநாவலவனியற்றினு னே.

## நாட்டுச்சிறப்பு.

மூப்பெரும்புவனத்துள்ளுமொழிகுவருவமைவேண்டி
யிப்பெரும்பொன்னிநாட்டிற்கீடெனவிசைப்பவென்னிற்
செப்பரும்வனப்புமிக்கசிறப்பினையிற்றென்றீண்டுத்
தப்புரையாதுசெப்பத்தகுவதோசோழநாடு. (1)

பொன்னெனத்திருமாதுக்குப்புகலுவரபிதானத்தைப்
பொன்னிநாடென்றேயெந்தப்புலவரும்புகல்வரென்னி
லன்னியநாடொமெங்கமைவுறுஞ்செல்வமங்கண்
டுன்னியவளங்களெல்லாந்துறுவதுசோழநாடு. (2)

பூமிசைதிசைமுகத்துப்போதனும்பொன்னாட்டானு
மீமிசைக்கடவுண்மேவுமாலையமின்றிவிண்விட்
டோமிசையுறையும்பஃறுணங்களுமுவந்துபூசை
தாமுறைபுரியநல்குந்தரத்ததுசோழநாடு. (3)

இதந்தனைப்பெற்றவாழ்வுபலவற்றையீந்துபற்பல்
விதந்தனையளிக்கும்விண்ணாடென்னினுமகவின்வேட்கை
நிதந்தருந்தரத்தையல்லையென்னவேயுரைநிகழ்த்திச்
சுதன்றனையார்க்குநல்குந்தரத்ததுசோழநாடு. (4)

புண்ணியமீட்டினோவிசேடமேயன்றிப்பொம்ம
நண்ணியதனுபவித்துத்தோற்பதுநகையேயன்றோ
மண்ணியலறத்தினாலேவானாடனுபவித்து
நண்ணுவதென்பாலென்றுநகைப்பதுசோழநாடு. (5)

போகபூமியினிற்போகதனுவினிற்பொருந்தலாகர்
தேகமாமின்பசித்தியெனமறையியம்புமென்னின்
மாகமீதுள்ளார்க்கேதுமண்மிசைவருநருக்குத்
தாகமோடயிக்கமுத்திதருமெனுஞ்சோழநாடு. (6)

இந்திரனாடுநீயவ்விந்திரன்றிசையோவென்பால்
கந்தரமூர்வனுங்கோன்கந்தரம்வாழ்வதென்பா
லந்தரநாடுநீயென்றறைவரென்றமயநோக்கிச்
சுந்தரநாடியானென்றிகழ்வதுசோழநாடு. (7)

கடலுடையமுதமொன்றுங்கசைமாங்கண்டதில்லை
யிடலுடையைநிலத்தினமுதுமேமேவுவாய்கொல்
லடலுடைப்போலிப்பேரென்றமையவிண்ணாட்டைநோக்கி
யிடலுடையெனைநேராவென்றியம்புறுஞ்சோழநாடு. (8)

முகையிலாதலர்கடுக்கைசூழுமுதற்சோதிமேவும்
வகையிலாலயங்கடம்மின்மற்றையநாட்டின்கண்ணே
பகையிலாதுறைதன்முப்பானிரண்டின்மேற்பன்னாறென்பாற்
றொகையிலாதுறைவவென்னத்துலங்குறுஞ்சோழநாடு. (9)

அன்னவவாடைசுற்றுமவனியாமாயிழைக்குக்
கன்னிநாடாதியங்கம்பன்னவகண்டமெல்லாந்
தன்னுடையவயவத்ததாயினுந்தலைமைபற்றிச்
சென்னிநாடென்றோர்நாமஞ்செறிவதுசோழநாடு. (10)

பூவிரிசெல்வம்யாவும்பொலிவுறுமிதன்கணென்று
நாவிரிபுகழ்கொளெங்களையகக்கரிமுகத்தோன்
பாவிரிக்கொண்ணாதிங்குபயிலவேமுனமளித்த
காவிரிநாடென்றோர்பேர்கரைவதுசோழநாடு. (11)

அழிவிலாச்செல்வமேவவளிப்பதுபெருமையன்றி
வழுவிலாஞ்செல்வநல்கும்வளமொருபெருமையன்றே
யொழிவிலாதாகியென்றுமுதித்தொடுங்குறாதமுத்தி
பழிபிலாதளிப்பனென்னும்பான்மையிச்சோழநாடு. (12)

என்னகமாகத்தோர்வந்திறைஞ்சுவதென்பரன்றித்
தன்னகமென்பாலார்செல்வாரெனச்சாற்றற்பாற்றே
பன்னகவரசன்சென்னிபரித்துறவேகிற்பேறா
லென்னொடுநேரோமேனாடென்பதுசோழநாடு. (13)

வேறு.

இந்நாட்டிலறப்புறங்களெழில்பெறவியற்றன்மான
வெந்நாட்டிலுளதோவென்னவியல்பொடுமியற்றுவாரால்

யிந்நாட்டுச்சினகரத்துக்கியற்றிடும்விழாவைப்போலப்
பொன்னாட்டினுளதோவென்னப்பொலிவுறப்புகலுமன்றே. ()

பொன்னாட்டிக் குறழ்வைவேண்டிடன்பனுமாண்புதிதியற்றுந்
தென்னாட்டுக் குறழ்வைவேண்டிச்சோசிகன்செறியச்செய்வன்
கன்னாட்டுக்குறழ்வைவேண்டின்மன்னர்நெற்போரார்க்காண்ப
மிந்நாட்டுக்குறழ்வைவேண்டிவியற்றுவரெவரேயம்மா. (15)

வேறு.

சுற்றியதிரைசூழ்வைப்பிற்றொடக்குறுங்கருமம்யாவும்
பொற்பிரளன்றிபொன்றும்புரிந்திடாவாறுபோல்
மற்றயநாட்டுக்காங்காங்கொப்புமைவகுக்கவேண்டிற்
சற்றுரைப்பார்கொலிந்நாட்டெழிலினைத்தரிசியாரே. (16)

வேறு.

பயனுறுமுகில்விண்படர்ந்தநறும்பாற்பரவையினுருக்கொடு படர்ந்தே, வியனுறுநரியவாருதிமேவி வெள்ளியநித்திலங்கொழிக்கு; நயனுறுநற்சீவனமெனவயின்றேநண்ணுமக்கடலாவினைவாழ், வயனுறுகமலநறுந்துழாயணியுமண்ணவினுருவின்மீண்டனவே. (17)

மாவனமாலைபணிதருமாலைமகியினைப்புரப்பவனென்றே, யாவனீண்டுரைப்பன்கண்களிற்காணுமமைவுறுமர்கருமுளரோ, பேவனக்கடல்சூழ்லகினிற்சிறப்பும் பெருவளமிகுத்திடு பெற்றிக், சீவனமென்னலன்றியார்க்குண்டு தெரியினென்றேபொழிந்திடுமால். (18)

புள்ளிபாஞ்சையப்பொற்சிகரத்தாற்பொன்னுலகுக்குரித்தென்றே, வெள்ளிபாம்வடமிட்டீர்ப்பதற்காக விடுதல்போல் வீழ்ந்திடுந்தாரை; பெள்ளிபாம்விடினன்றோசெலுமிதனையிவ்விடையிருந்துவமென்று; வள்ளிநாற்றிசையும்பிணிப்பபோற்புவியிறுெழுகுறுமருவியினீட்டம். (19)

வேறு.

பெய்யுமாம்மழைவெள்ளநீர்பெருகுறலுற்றே
தூய்யவாருசெம்மணியினொடொழுகுசூயருவி
ஞ்சயமாமெனுப்புருடன்றன்னகலத்திற்றரித்த
செய்யகோடுமுத்தரீயத்தினைச்சிவணும். (20)

வேறு.

பொம்மலைப்படைத்தகொங்கைப்பொற்கொடியுமையையீன்ற
செம்மலைக்கண்டோர்பெண்பெற்றிருமையுஞ்சிறந்தானென்னும்
விம்மலைக்கண்டுவந்துயிளிர்மணிச்சையமென்னு
மிம்மலைபொன்னியென்னுங்கன்னியையீன்றதன்றே. (21)

முக்கணெம்பெருமானுக்குமூதுணர்ந்தோர்க்குமன்றிப்
புக்கவர்க்கெல்லாமெம்மோய்பொற்றொடியீயாளென்றே
தக்கவர்தகாரென்றெண்ணாதருளிவட்டந்தயானே
மக்கட்பேறடைவேனென்னமாதிரமீன்றதன்றே. (22)

நாவிரிபுகழ்கொள்கும்பமுனிகரபத்தினண்ணிக்
காவிரிநீழன்மேவும்புரந்தரன்கருதிவேண்ட
மாவிரிமுகத்தெங்கோமான்வாயசவுருவிற்றந்த
காவிரியானென்றோங்கிக்காதலோடலவுமன்றே. (23)

கதமிதுவென்றுகாட்டிக்கயலெனுங்கண்ணுதற்கண்
ணிதமிடுநுரையாங்காப்புமலைவளைநீள்கைக்காப்புஞ்
சிதமெனுமுத்தமூரற்சில்லரிச்சிலம்புசூழும்
பதமிதுவென்றுசெல்லும்பதத்தினிற்படருமன்றே. (24)

சையநாடொருவிமுல்லைத்தாவமார்நாடுநண்ணி
மையவாம்விழிசேராயர்பாடியின்வளைகளேந்திச்
செய்யவாய்மாதர்தம்மோடாடிச்சக்கரந்திகழ்ந்து
நெய்தயிர்பாலருந்திமாலெனநிகழ்ந்ததன்றே. (25)

வல்லநாயகியார்காணமறையநான்முகரியம்பக்
குல்லையாகத்துமார்பன்குழலிசைப்புறப்புலிக்கா
னல்லகத்தியர்வணங்கநந்திமாமுழவொலிப்பச்
செல்லுறுபொன்னிதில்லைத்திருநடச்செல்வன்போலும். (26)

வையைநாடிறைஞ்சப்பெற்றவளமலிதந்தேயோங்கிச்
செய்யினிற்கமலமல்குஞ்சேரநாட்டினையொரீஇத்தன்
மெய்யுறப்பலகாலற்போய்முதி*ரதிரேகமாக
நெய்தனாட்டரசைப்பேணுநேயத்தினிகழ்ந்ததன்றே. (27)

---

* அதிரேகம் ஆச்சிரியம்.

ளதிருயர்திணையைவல்லையஃறிணையியற்றியேனைச்
சதுரஃறிணையைமாற்றியுயர்திணையாச்சமைத்துப்
பதியர்விண்ணோராவிண்ணோர்பதியராப்படைக்கும்பொன்னி
மதுரைவந்தெழுந்தவெல்லாம்வல்லசித்தரையேமானும். (28)

வேறு.

திருமலைவதிந்தும்பெருமயிலேறித்திகழ்வடிவேலினைத்தாங்கி, யருமையிலாறுமுகமெழிலமைவுற்றணிகிளர்பன்னிருகையோ, டுரிமையிற்பொன்னேரகத்துறைந்தலர்ந்த கடம்பொடுவெட்சியையுற்றும், வருமகத்தியருக்கருந்தமிழளித்தும்வளர்நதிமுருகனைமானும். (29)

அரம்பையராடுமாடலையிமையாவாயிரங்கண்கணோக்கலமைத்தும், வரம்பிலசதமாமகத்தினைப்புரிந்தும்வெள்ளைவாரணமிசைவதிந்து, மிரம்புறுபொன்னிறைட்டிறையென்றுநீண்டகற்பகப்பொழிலினெழுங்கித், தாஞ்செய்மேலோர்க்குக்குணதிசையாகிச்சார்பொன்னியிந்திரன்றகுமால். [30]

மலையெனும்புருடன்றலையினைத்தடவிவைத்திடும்பொருளெலாம்வரன்றி, முலையினைக்காட்டிமுகத்தினைமினுக்குமுத்தத்தையேகொடுத்தாசை, வலையினைப்புகுத்தித்தாகமுற்றோரார்வரினுந்தம்மாவலைமாற்றி, விலைசொலித்தனத்தைக்கொடுத்திடாதளிக்குங்கணிகைபோன்மேவுமிப்பொன்னி. (31)

தேர்மதக்களிறுகலினவாங்குதிரைச்சேனையினோடெதிர்த்தவரைப், போரினைப்புரிந்துவாகையைப்புனைந்துபோகத்தின்மாதரைப்பொருந்திப், பாரினிலெவர்க்கும்வளனெலாமளிக்கும்பரிசொடுசக்கரவர்த்திப், பேரினைமருவியிணையிலாப்பொன்னிபெற்றிசேர்மன்னனிற்பெரும். (32)

இச்சிறப்பனமந்தவெண்டிரைநதிதானெய்தியபருவம்வந்துற்றே, நிச்சலும்பலகானடந்துகாமத்தானேடுவன்கணவனையெண்ணுக், கச்சணிதனமாஞ்செவ்விளநீருமுத்தமாமுறுவலுங்காட்டிச், செச்சையைப்புனைந்துவருணன்மார்புற்றேறதினைத்துவாழ்வுற்றென்றுந்திகழும். (33)

பெண்குடிமலியும்பெருங்குடியென்றேபேசுறற்பெரிதுமெய்யெனவே, கண்குடிகொண்டவனப்புமிக்குற்றகாவிரியென்றகா

ரிகைதான், றன்குடிகொண்டபலநதியானசங்கிதமையுநீஇத்
தலத்தில், வன்குடிகயமும்வயலொடோடையுஞ்சப்பந்தமாய்
வாழ்வுறுவாளால். (34)

மாலைகட்டுவரின்மிகக்கைபோயவர்பன்மலரிஞற்பறப்பல்வரு
ணை, மாலைகட்டுபுநாரியரகலத்தின்வனப்புறவனைகுவகென்னச்,
சாலவேயுழுனர் தாம்பலதிறங்கொள் சேக்கை யேரினிற்றனைந்
தே,யேலவேயுமருதப்பண்ணிசைத்தமையவெங்குமேயுழுகுவரிய
ல்பின். (35)

பொன்முடிமன்னரின்முடிபனைத்தும்பொருட்டெனப்பொலி
வுறலெல்லா, மென்முடிவனுத்தகாலையினன்றேவென்ஞநாற்றி
ன்முடியேற்றுச், சொன்முடிவில்லாமன்னர்கள் பைங்கூழ்கபூனி
யினட்டுறுந்தோற்றந், தன்முடிவில்லாக்களிப்பிற்பூமங்கைசா
ல்புளகரும்புதல்சாலும். (36)

வேறு.

சீருறுநாறுநட்டசெழும்பயிர்மிகவெளுத்துக்
காருறுநிறம்படைத்தகாட்சியின்கவினைநோக்கி
னீருறுமள்ளருள்ளமெமதுபோனிறம்படைத்துப்
போருறக்கறுத்ததன்மைபொலிவுறக்காட்டல்போலும். (37)

விளைநிலவயலிற்பைங்கூழ்கதிரொலாய்விசும்பினோங்கி
வளைதருநீரவாகிமருவியதோற்றந்தேங்கி
ளாவிளநீரைக்கோலப்பழுக்கொலையினையேகொய்யத்
திளைதருதொரட்டைக்கண்ணுஞ்செறிதரல்போற்றுலங்குப் (38)

நெல்லெனலொன்றேதேவர்க்கவியென்பர்நிலத்தின்மற்றப்
பல்லெனவுரைத்தபைங்கூழ்யாவுமென்பான்மையாமோ
புல்லெனவுரைக்கற்பாற்றுடபோதுமோவென்றுன்னுண்மை
சொல்லெனுஞ்சொல்லினந்தமலிந்தெங்குஞ்சூழ்ந்திலங்கும்.

இந்திரன்பண்டுமேகக்கொடியுடனீந்தகாலை
மந்திரிக்கிழுவன்வேளான்கொணர்தரவையமீது
சுந்தரக்கமுதகன்னறாயகற்பகங்களோடு
வந்ததுநானேகம்பாதிபகோலோவெனவயங்கும். (40)

அரிதருவார்கள்சாலிபமபக்கட்டாக்கலாலே
யிருநிலநெருங்கக்கட்டிபொங்கினுங்களப்படுத்தித்

திரிமருப்பாம்பகட்டிற்றெழித்துவைகளைந்துதூற்றி
வரிவரைபலவமைத்துமலையினுடாக்குவார்கள். (41)

ஆறிலோர்கடமைமன்னர்க்களித்துமற்றவையப்பண்டி
மாறிலாதுய்த்துத்தந்தமனைகளின்மருவச்சேர்ப்பா
ரீறிறென்புலத்தார்தெய்வம்விருந்துதானொக்கலென்று
மீறியவறம்புரிந்தேவிதிவழியொழுகுவாரால். (42)

வேறு.

நீரறுநதிகளெங்குநிதியறுமனைகளெங்கு
மோரறுவயல்களெங்குமிசையறுப்பாடலெங்கும்
போரறுலீலையெங்கும்புகழறுக்கவிகளெங்குந்
தேரறுவீதியெங்குஞ்சிவமறுச்சிந்தையெங்கும். (43)

திருவறுச்செல்வமெங்குந் திகழறுப்பணிகளெங்கு
மருவறுமாலையெங்கு மகவறுமனைகளெங்கு
முருவறுவளங்களெங்கு முயர்வறுவோரகமெங்குங்
கருவறுக்குடிகளெங்குங் கனமறுவாசரெங்கும். (44)

அற்புதமாலையெங்கு மணிமிகுமாலையெங்குங்
கற்பகச்சோலையெங்குங் *காவிலாச்சோலையெங்கும்
விற்பனவாலையெங்கு மிளிர்மகச்சுவாலையெங்கும்
பற்பலலீலையெங்கும் பரசிவலீலையெங்கும். (45)

தம்முலைக்கரிசியென்றேமுத்திடுந்தையலார்கள்
வெம்முலையிரண்டோடொன்றமிளிர்குடமொன்றமைத்தே
யெம்முலைபலவுஞ்செப்புக்குடமிவைசலசமென்றே
மும்முலைத்தடாதகைப்பெண்யாமெனமொய்த்துவாழ்வார்.

காண்பனகோடிகோடி கட்டுவகோடிகோடி
பூண்பனகோடிகோடி புகர்முகங்கோடிகோடி
சேண்பயிலமரர்கோடி செல்லுவர்திக்குக்கோடி
மாண்பொருள்கோடிகோடி மனைமணிகோடிகோடி. (47)

பன்மலர்க்கோதையெங்கும் பல்கனிக்கோதையெங்குந்
தென்மலர்ச்சீதையெங்குஞ் செய்யெலாஞ்சீதையெங்கும்

---

* காவிலாச்சோலை - சேலை.

பொன்மலர்த்தாதையெங்கும் புகலுமூதாதையெங்கு
மன்மதன்காதையெங்கும் வள்ளறன்காதையெங்கும். (48)

தொத்துறுபஞ்சகற்பகத்தினைச்சூழல்கொண்டே
கைத்துறுநாடிங்கென்க ணுற்ற*கற்பகத்தின்சோலை
யித்தனையென்றியம்பொ ணாமையையெண்ணியேங்கி
லெத்தனைபங்குயர்ந்தேதென்ன விந்நாடிசைக்குமன்றே. (49)

முந்துநாள்போகியந்நா டொருவியிந்நாட்டிற்போந்து
கந்தநாண்மலரற்சித்தவ் வானக்காவலனானே
விந்தநாட்டுள்ளோர்பொன்னா டெய்தியஃதியற்றினாரோ
வெந்தநாடுயர்வுநீவிரியம் புமினெனவுரைக்கும். (50)

பற்றுளாரெனினும்பற்றி லாதவரெனினும்பாங்கி
னுற்றவர்தமைவணங்கி யுவப்பொடுகனிகாய்வீயோ
டெற்றைநாளினுமிந்நாட்டிற் றருக்களீயுமென்னிற்
கற்றறிவாளர்செய்யுங் கடன்மையார்கழறவல்லார். (51)

வரம்பறுதிருவின்வைகும் வையத்தைக்காணவானத்
தரம்பையர்பலருமீண்டுற் றமைந்துமப்பெயரமைந்தே
யரம்பையர்குழுவாக்கண்ணுற்றதைமறந்தமருமென்னிற்
றரம்புகழுறவேசோழ நாட்டையார்சாற்றவல்லார். (52)

வேறு.

தேவராகமாதவர்களா கப்பெருந்திசையின்
யாவராகவாய்திறந்துரைத்திடற்கமைவாரோ
சீவராகமானுலகமுண் டறிந்தவன்றேர்ந்தும்
பூவராகராயிவண்வரிற் புதுமையார்புகல்வார். (53)

# நகரச்சிறப்பு.

வேறு.

நெடுவிநாயகனருளை நிரம்பியவிச்சோணாடாசேரிழைக்கிங்
குடுவிணாயகமென்னுமுயர்வதனை யெனக்கவிஞருரைப்பதன்றி
வடுவின்மார்பணிபதக்கமாநாட்டுள்பணிகள்பலமணிசூழ்வாகு
நடுவிணாயகமென்ன விளங்கிடுமிம்மூற்கபுரிநகரமம்மா. (54)

* கற்பகமென்பது வாழை தென்னமரம்.

பாலரணமிகின்மன்னர்நகர்க்கெல்லாம்வனப்புமிகப்படைக்கு மென்ற, நாலரணமதிலரணநீரரணங்கானரணநுவலுமெங்கு, மேலரணமுடையநக ரவைக்கெல்லாமொன்றிரண்டே மேவற் பாற்று, நாலரணமுஞ்சூழிந்நகர்க்கிணையா யெந்நகரைநவில்வ னம்மா. (55)

மடையாரும்வாளைகமுகிற்பாய்நீர்வளனுமெழில்வளனும்வா னத், திடையார்விண்ணவரரம்பைமார்காண வஃறிணையினெய் தியேபுக், குடையாராதவினக்காரணத்தினேபழமொழியாயுல கர்தாமீங்; குடையார்பாளயமெனிவிந்நகர்ச்சிறப்பின்பெருமை யையென்னுரைக்கப்பாற்றே. (56)

படையாருங்குடியொடுகூழமைச்சுநட்போடரணென்னப்படு வவும்பட், டுடையாருமிடையார்வெண்குடையாரீகைக்கொடை யாரோதுநூலி, னடையாரோதிமநடையார்—தம்மிலொருகுறை வின்றிநவிலுமெல்லா, முடையார்பாளயமென்றேயுயர்திணை யேற்றதற்குவமையுரைப்பார்யாரே. (57)

மலையினுளபொருளுநாட்டுளபொருளுங்கடற்கடமார்பொரு ளுமன்னிக், கலையுடன்பல்கலைபிறவுமிக்க மலியிந்நகரைக்கண் ணிற்கண்டோர்க், கிலையெனவோர்பொருளுமிலையென்னவுரை த்திடுதற்கேயிலையுமொன்றே, நிலைமையினுக்காச்சொலவுமொ ன்றிருக்கின்யாவரேநிகழ்த்தற்பாற்றே. (58)

ஆனந்தகானமெனக்காசிக்கோரபிதானமறைவர்யாருந், தான ந்தவிசுவநாதனைப்பிரிந்தகாலையிறைதன்னைத்தேடித், தானந்த முற்றிடவுற்றதுகொலெழில்காணச்சார்ந்ததுகொலோவிங், கா னந்தபாடியென்றோ ரூர்பழமைபுனைந்துரைக்கி னறைவதென் னே. (59)

அண்டமெலாம்படைத்தருளுமம்புயாசனக்கோயிலமரும்பெ ம்மான், றண்டவிளம்பிறையணிகொள்சுடர்வேணிப்பெருமா ன்றொடொழுதற்கெண்ணிக், கண்டநகராதவிறற்கணபணச்செ ஞ்சூட்டராக்காவலோனும், வண்டமிழிற்சொலச்*சேடனென் றிடிவ்வனப்பினையார்வகுக்கவல்லார். (60)

---

* அரம்பையர் வளத்தைக்காண அஃறிணையாய் வாழைமரமாய் வந்தனரென்க.

* சேடன் சொல்லும் ஆற்றற்குறைந்தவன்.

எப்பதிக்குமீசானத்திடையிலன்றிநனந்தலையிலீசன்மேவிலப்பதிக்கோர் குறையுண்டோ வீபர்தபெருஞ்செல்வமமையுமென்றே, அப்பதிக்கிறந்தொளிருஞ்சுடர்ப்பெருமான்முன்புசிறப்புஞ்சொற்றற்கேற்ப, விப்பதிக்கீசானத்தில்விருத்தகாசிப்பதியேவிளைசப்பதென்னே. (61)

தண்ணீரிற்காவேரிதார்வேந்த ரிறசோழன்சலதிசூழ்ந்த, மண்ணீரிலுயர்சோழமண்டலமிக் குடையதெனவகுத்தாரான்றே, றுண்ணுடிவிருநடுவான்மூப்பாவி னடுப்பாலேயூக்கமெய்துங், கண்ணுடிவேண்டுறுமோ கரத்துறுமோர்பொருடனையே காணுவோர்க்கே. (62)

செய்வீகந்தந்திசைபெட்டினும்விளங்கு மிப்பதியைச்சேருவோர்க்குப், பொய்வீகமெய்யாகஞானமடைதரத் தீர்த்தம்பொருந்தத்தந்துஞ், சைவாகமப்படியேசலசரமாந் தவனையாதியதணைந்துந், தெய்வீகம்விளங்குமெனிற் செப்பவேண்டுங்கொல்லோசிறபபையம்மா. (63)

சுமைத்திரண்மாதனங்கொண்டு மலர்மேயதிருமாதச்சதுரத்தி, னிமைத்துறுகண்மணியெனவே யிருப்பளம்மாதவன்விபுதரேத்தவென்று, மமைத்தவமுதுறைதரங்க மரங்கமென்பரவ்வுறியேயமைமையாரங்க, சமுத்திரமிங்குறைதலினுற் குடிகொள்வாழ்விடமெவனோசாற்றற்பாற்றே. (64)

மாமகளுயருமகளுஞ்சேரரென்றறிவினிசொன்மாற்றத்துக்காப், போமகளோரயபூவி ருப்பங்கொளுந்தேம் புண்டரிகப்போதன்பூசித், தேமகிழ்ந்ததன்மையினிப்பயறணீச்சுரப்பெயரையினைந்தெய்தி, நாமகளும்பிரிந்தேயெங்கேகுவளென்றே மகிழ்வினடிப்பளம்மா. (65)

பாத்தியமென்றிவரிருவருறைதலினிங்கிலகுபெரும்பதியைக்காணு, மாத்திரத்தெண்ணியதடைவரெனினெழிலிப்பதியுதித்தேவளரும்வீரக், காத்திரமுற்றோரடையுங்கலினுமிகுவளனுமுரைகலையுங்கூறச், சாத்தியமோதமியேனுற்றக்கவர்பல்லோரேனுஞ்சாற்றற்பாற்றோ. (66)

மூங்கருத்தமுரைப்பவேற்றிடமெவ்வளகையென்பதேவரேகாணோர், பன்னகத்தூக்கிறையுறையிற்பிவிற்றனுறுஞ்சேடனே

ணைப்பதாக்கமுற்றான், மன்னாறுவோரெழிலினோக்கி மதன்றேய்ந் தானந்தரந் தானென்றுவானோர், பொன்னகரும்புகலுமெனி லிந்நகருக்கிணையெவனோபுகலப்பாற்றே. (67)

நாடெல்லாமதன்றாணிக்காடெல்லாமதனாரிநளினநஞ்செய், யூடெல்லாமவன்குனிவின் மாடெல்லாமவன்படைகளுவைசோலைக், கோடெல்லாங்காகளம்வெண்கோடெல்லாமவன்முரசங் குணித்தவொர்க்கும், வீடெல்லாமவன்பூசல்கூடெல்லாமவன்ப ரியேமேவுமன்றே. (68)

தளமெல்லாமவிமலர்க்குந்தளமெல்லாம்வரியளியிந்தளமே பாடுங், குளமெல்லாம்பங்கயம்வகுளமெல்லாமருவுறவெங்கோ மான்கூடும், வளமெல்லாம்பதியுறக்கவளமெல்லாம்பசுபோத மாகிமன்ன, வுளமெல்லாமுண்மைதிருவுளமெல்லாந்தரும்பதி வேறுளதோவம்மா. (69)

வேறு.

பானிறமேவல்லானும்பதுமமேலுறைதலானு
நீனிறமேகங்கூந்தலென்முடிஞெமுங்கலானுங்
காணிறஞ்செம்மையானுங்கருதுநூல்பலவினானு
மேனிலைமாடம்யாவும்விழையும்வாணியைநேர்மேவும். (70)

பூவின்மேலுறைதலானுந்திசைமுகம்பொலிதலானு
நாவின்மேல்வாணியானுநாதற்பூசனையினானு
மூவினநூலினானுமொய்யனத்தானும்விண்ணிற்
றுவினமாடமோங்கிச்சதுர்முகன்றனக்கொப்பாமால். (71)

மிக்கொளிதுளும்புமாடமேனிலைக்கண்ணேமின்னைக்
க்குமாமணிப்பூண்மேயகாரிகையார்வாழ்தோற்றம்
பக்குவமான்வானத்தரம்பயர்பலருங்கூடித்
தொக்குறுவிமானமேறித்துலங்குறுங்காட்சிதோன்றும். (72)

பொருப்பெழில்காட்டுமாடமரகதப்பொலிவுபொய்மிக்
குருப்பிறங்கினாற்சாயல்குலாய்க்கருங்குழலார்தோற்றந்
திருப்பிறைவாணுதற்செஞ்சிலையெனும்புருவமேற்ற
பருப்பதமன்னனீன்றபார்வதியுருவொப்பாமால். (73)

மின்னிலைதுளும்புமாடமேனிலைக்கொடிகளாட
லுன்னியசுகமனைத்துமுணுறக்கமதேயென்பர்

இன்னிடமீயவுண்டோவிலைதரத்தருவனேற்கப்
பொன்னுலகேவாவென்றேபுகன்றழைப்பதனைப்போன்ற. (74)

பிள்ளைதான்பெறுதலின்றேற்பெற்றதிற்பயனென்றில்லை
யுள்ளியவரங்களீயுமுயர்குணமுனக்குண்டேயோ
வெள்ளொளிதுளும்புமூரவிருபுறம்விளங்கவிண்ணை
யெள்ளுதல்போலமாடவரிசைகளிலங்குமன்றே. (75)

கருபமுற்றோர்களைக்கங்காணுறக்கனகக்கும்பச்
சிகரிநின்றிலகுதோற்றஞ்செப்புறும்பாடிக்கெல்லா
மிகுதியாம்வளப்பந்துற்றமேன்மையின்வேலைசூழு
மகியிலிந்நகரத்துச்சிசூடியமவுலிமானும். (76)

நாகத்துக்களவுகோலாய்நண்ணியசிகரித்தோற்றம்
போகத்தான்மலியுமுற்கபுரியுறைபுனிதன்றனைத்
தாகத்தாலடைந்துவேண்டிந்தனிவரம்பெற்றுய்தற்கு
மாகத்தாரிறங்கவேறவைத்திடுமேணிமானும். (77)

கோபுரமென்றேவிண்ணுட்டினைப்புலவோர்குறிப்பார்
மாபுரத்தாரீங்கென்னையுரைப்பதுமதியீர்கொல்லோ
*வாபுரத்தாரையானேயுடைமையினன்மொழிப்பேர்
கோபுரமென்றிங்காருங்கூறுதலெனக்குலாவும். (78)

முறைப்பொருளுதவலானுமுதிர்மகத்தாதியானு
மறப்பொருளளித்துந்தூய்தாயனாதியிலமைதலானும்
பிறப்பிறப்பின்மையானும்பிஞ்ஞகன்றனக்கொப்பான
மறைப்பொருளுணர்ந்தநீதிமறையவர்மறுகைச்சொல்வாம். ()

அந்தணரென்பரெல்லாமறவர்மற்றனைத்துயிர்க்குஞ்
செந்தண்மைமிக்குறுத்தித்தேசிகோத்தமனாய்ப்பூவில்
வந்திடுதிசைமுகன்போலாக்குறும்வன்மைமிக்க
வந்தணர்பெருமைசொல்லவல்லனோவறிவிலேனே. (80)

வேறு.

இனக்குறும்பகற்றியேமாமகம்புரிசீர்மையாலவ்
வனற்கருந்தாமமிக்குற்றண்டமுற்றளவிக்காண்பான்

---

* அப்புரத்தாரையென்பது ஆபுரமென்று நீண்டுமகரங்குறைந்துநின்றது.

வனப்பெருந்தொடையன்மாயன்வாமனனுவளந்தோ
னெனக்குயேனெடியனேவென்றேங்கிடினென்சொல்வேனே.

வேறு.

இனையமாநகரின்வேதியர்பலருமிருக்குமுன்ஞூதியாமறைகள், கனவினுமறவாக்கருத்துளார் வேதங்கண்ணியதவஞ்செயக்கடவர், நினைவெலாமான்றவினுமுனையெல்லாநிருமலன்றுதியினுஞ்செய்யும், வினையெலாமவன்பூசனையினேமேவின்மேதகைவிளம்புவரெவரே. (82)

மறையவர்தாமுப்போதினும்வேதவரிசையின்வளரவிகொடுப்ப, நிறைதரவியற்றிமாதமும்மாரிநேர்ந்துறமகத்தின்றீவளர்ப்பர், தறையினிவிணையிலாமனைமாட்சிதக்கநன்மனைவியரான, பிறையெனுநுதலார்தம்மகம்வருநரகட்டினிற் பிறங்குதீப்பேர்ப்பர். (83)

தாலமீதிவர்கடவவொழுக்கும்விண்டலத்தவர்தவவொழுக்கமுமே, சாலவேநோக்கியன்றுகொல்முன்னந்தானவத்தலைவன்மாபலிதா, னேலவேயிவர்பால்விபுதரையடிமையாக்குறவெண்ணினுனிவர்பிர்ம், மாலையத்துறையுந்தேவர்களென்னில்யாவரேயளவிடற்பாலார். (84)

அவனியிற்பெய்யுமழையின்றேல்யாதுமிலைமகத்தவியினுலாமானவமுறுமகமுமந்திரமதினுனவினுமற்றனைத்துமேமறையாமுவமையின்மறையுமிவர்கள்பாலுறலாலோதுவர்பூசரரென்றேயிவரிலையேலெவ்வுலகமுமில்லையென்றிடலுண்மையீதாமே. (85)

## வேளாளர்வீதி.

வேறு.

ஐவருக்குமுன்னகரம்போலகரமேயமைந்த
தெய்வர்தாமுமிம்மன்னவர்தாமும்பல்சீரை
நெய்வர்தாமுமெஞ்சொல்லினுய்வாரெனநேருஞ்
சைவர்வீதியின்றரமிகுபெருமையைத்தகைவாம். (86)

வேறு.

வெள்ளாழர்தமைச்சேரார்விருதாவென்றவ்வைமுனம்விளம்புமாற்றந், தள்ளாமற்குட்டுவன்சோழன்செழியனென்றிவர்கடாமொருங்கே, விள்ளாதகுட்சிமிகுநண்மை மதியமைச்சரெனவிழைந்திருப்பி, னள்ளாதபேருளரோகம்பரேரொழுபதினைநாடுங்காலே. (87)

கங்கைமரபுதித்தமையாற்றிங்களெனுங்குணத்தர்வழுக்காளு தாலே, பொங்குறும்வாய்மையர்புகழ்க்குமறத்திற்கும்வழியெ னப்பூரித்தளித்தே, யங்கயற்கேதனத்தார்க்குப்பிணைகொடுத்தே புருகூதனளிக்கப்பெற்ற, தெங்கரம்பைகமுகுகழைநெல்லொ டைந்தும்பெற்றவர்சீர்செப்பற்பாற்றோ. (88)

நூலென்றுறுகெடுஞ்க்ஷத்திரியரமர்புரியநோல்வரென்றாங்; கோலென்றாற்குடியனைத்துங் கொள்ளைபோமெனவவளே கூறி ஞளேல், பாலென்றமொழியாண்முன்பகர்ந்ததுவும்பழுதாமோ பார்த்திபர்க்கு, நாலென்றகாராளரமைச்சரெனத்தகுமலது நவில்வர்யாரே. (89)

நேர்பெற்றகவிவலர்க்குப்பொன்னலங்கறனையளித்துநேர்ந் துநீண்ட, பார்பெற்றவூர்க்கும்புற்றாவிற்கைபிட்டும்பரிவினு லே, மார்பெற்றேறனைக்கொடுத்துமெழுபதின்மருயிரளித்து ம்வள்ளற்றன்மைப், பேர்பெற்றார்சீர்பெற்றாரார்பெற்றாரோ பெற்றார்பெற்றிதானே. (90)

நட்டாலுமிவர்போலநட்புறுவருளர்கொல்லோஞாலமீது, தொட்டாலு முடிப்பரிய காரியமுமுற்றுவிக்குஞ் சூட்சிமிக்கா, ரிட்டாலுமருமையறிபெருங் கொடையரேயனையரிலெவரோனு ரைச், சுட்டாலுமினியொருக்காற்றேன்றுவண்ணம்மெளிதிற் சூடிப்பாரால். (91)

பூவசியர்தனவசியர்கோவசியரெனத்தக்கோர்புகன்றிட்டாரம்
மூவசியர்தம்முளுமேமுதல்வசியர்நடுவரெனமொழியப்பாலா
மாவசியமாக்கூடலமர்ந்தபிரான்மாமணிகொண்டமயவிற்றன்
மாவசியரோமற்றைவசியரோகற்றுணர்ந்தார்வழங்கப்பாற்றே.

வசியென்றாற்கூர்மைக்காம்வசியமொன்றால்கூர்மையரென்றே வகுப்பர், சசிகதிரையரவுபற்றும்போழ்துதுலாத்தானமதைத் தரணிமன்னர், சசியுறவேதரும்வேலைதுலாமுண்ணேக்குறவின் ரோர்சூட்சியென்னில், வசியர்கடம்பெற்றிதனைவகுத்திடவல் லவரோநாவலர்பல்லோரே. (93)

பொன்வேண்டிற்பொன்னளிப்பர்பொருள்வேண்டிற்பொரு ளளிப்பர்புவிகாமுற்று, மண்வேண்டின்மன்னளிப்பர்மணித்தர ளம்பணிவேண்டில்வரைவிலீவர், பின்வேண்டின்முன்னளிப்ப

ரொன்றுகேட்டிடிற்கோடிபெறுகவின்ன.மென்வேண்டுமென்ப
தன்றியிலையென்னுமாற்றமொன்றுமிலைபன்னூர்க்கே. (94)

மின்னிலங்குமணியாரந்தருதலினூற்சங்கமதேய்தலினன்மே
லாம், பொன்னெடுவெண்கலையுதித்துப்பொதிந்துநவநீதமல்கி
ப்பொதிதலாலே, மன்னுறுமாயரக்கலநாற்றிசையினின்றுமரு
வலினன்வதியுமோதை, துன்னுறலாலிவ்வணிகர்செல்வம்பா
ற்கடற்கிணையாத்துதிப்பரம்மா. (95)

வேறு.

காவலர்க்குரித்தானவர்மறுகினைக்காணின்
மாவலாளர்கண்மலையெனப்பகர்வுறும்வாகார்
சேவகம்புரிதிறமையர்செப்புறிற்பதியை
நாவினாடைவாரன்றிநவிலுவர்யாரே. (96)

வாவிதானகுப்பாயத்தர்வடித்தெடுத்திட்ட
நூலிதாமெனுநுண்மையர்நோன்மையர்புனையு
மாலைவேய்ந்திடுவாகையர்வரிகொள்வல்லியத்தின்
பாலைவேண்டினுமக்கணமளித்திடும்பாலர். (97)

துவர்க்குமிஞ்சியசெய்யவாய்மதர்விழித்தோகை
சுவர்க்கமிஞ்சியபோரினும்போரினுந்தோலா
ரெவர்க்குமிஞ்சியவயிலொடும்படைகளையேந்தி
யிவர்க்குமிஞ்சினரெங்குளரென்னவேற்றிடுவார். (98)

கொங்களாவியவாகைவேய்கோவினுக்குரிய
மங்களாகரம்புடையன்றிமற்றுமொன்றுளதோ
தங்களாலிதுபாளயமெனப்பலர்சாற்றி
னெங்களாற்பகர்வதிவிறும்பூதுதானென்னே. (99)

கறுவினூலமர்புரிதிரிமருப்பயங்கண்டு
முறுகுசெய்யசூட்டெழில்கொள்வாரணத்தமர்முயன்றுந்
தறியையமோதுறுந்தகர்திியின்போர்கண்டுஞ்சார்ந்தும்
பிறிவிலாவுலப்பிலருறைவிடமெங்குமிறங்கும். (100)

## செங்குந்தர்வீதி.

வேறு.

செங்குந்தர்மறுகுதோறுந்திகடந்துநேராயோட [ரூர்
லெங்குந்தம்முற்றோர்செம்பொன்விழைந்துளோர்கல்வியேற்

தங்குந்தம்பினத்திறனோர்பாற்சார்ந்தவரயலாரின்றே
ரெங்குந்தம்போலொழுங்கரெனச்சான்றாயிருத்தலெய்க்கும். ()

பின்னூலாம்வெண்ணூலோடுசெந்நூலும்பலநூன்மேவ
னன்னூலேயன்றியெங்கணுபகனளினவாய்ச்சொன்
முன்னூலவ்வழிநூல்சார்புநூலெனமொழியத்தக்க
வெந்நூலுமொருங்குதேறவடைவரீங்கெனவிளங்கும். (102)

பனவரேமுதலானோர்க்கும்பண்ணவர்தமக்குமுந்நூ
லெனையரேயியவல்லாரேந்திழைமாருக்கெல்லா
மினையுமங்கலநாணுஞ்சினகரக்கொடியுநேர்வோ
ரினையரென்றொட்டக்கூத்தரிசைத்திடினிசைப்பதென்னே. ()

முப்பதின்மூவராம்புங்கவராகமுனிவராகத்
தப்பதெத்துணையுஞ்செல்லாத்தருமாதிநான்குஞ்சேர
வொப்பதின்றென்னுமுத்திநிலைக்குளம்பழுக்காவோதி
னிப்பதியன்றியெங்கும்பழுக்காவென்றொன்றியங்கும். (104)

நூலினினுள்ளயாவும்வரிப்பமோர்தொகையிலாத
கலையினைப்புரிவோமொன்றுகேட்டிடிற்கோடிகாணென்
றலைவினையுறுதளிக்குமலகையாரளப்பர்யாங்க
ளிலையெனின்மானங்காப்பாரெவரென்பாரியல்பின்னேய்ந்தார்

வருமயிலேறுவான்சேர்தரனெனமகிழின்மீது
பெருமையிலேறிநிற்பர்கலையெலாம்பேணிநிற்ப
ரிருமையிலேறுஞ்செய்யசடையினரெம்போல்வாருக்
குரிமையிலேறுவார்தம்பெற்றியையுரைக்கப்பாற்றே. (106)

## தாசிமார்வீதி.

### வேறு.

ஆடவர்கண்மனம்புறம்பிற்செல்லாதுமாயையுருவமைந்துநின்ற, வீடிலாச்சருவிகாட்டுறுங்கண்விலைமாதர்தந்தமிதயமெல்லாங், கூடுறுந்தம்புணர்ச்சிதனைக்காட்டுறுவானெனியத்தாற்கூறுவானப், பீடுபெறச்சுவரின்பாறீட்டுவார்மறுகினெழில்பேசலுற்றாம். (107)

ஒருபண்டமளித்துமற்றிங்கொருபண்டப்வாங்குதலோர்சம
த்தோர்வுன்னிற், றருபண்டமளிக்காமலனைத்தும்வாங்குற்றுறு
தல்சமத்தோவென்று, திரிபண்டந்தமைக்காட்டிச்செப்புமடி
மையராக்கித்தேடுந்தம்மில், வருபண்டமனைத்தும்வாங்குறுவ
மெம்போல்வல்லவரார்வழங்கென்பாரால். (108)

சினைதக்கலமாயிரமுள்ளாரென்னினுமேகுறவளிப்போந்தே
யத்தெந்த, மதத்திலுறுவோரேனுஞ்சத்திமதம்பெரிதெனுஞ்
சம்மதத்தில்லைப்போந், தனைத்திமாமணிமுடிகொள்வேந்
தராயுற்றிடினுந்தாளினாலே, யுதைத்துவாங்குவமெம்போலுள
ரோவுண்டென்னிலிவணுரையினென்பார். (109)

மாலாகுஞ்சமயவிசேடத்திற்றுமற்றுதிருவாணஞ்சென்னி;
மேலாருந்திருவடிதீட்சையவென்ப பொருளாளிப்போர்விரும்ப
மூன்றெம், பாலாகுமெனத்தனித்துங்கைதொடவுங்கலையவிழ்
க்கப்பார்த்துமின்னு; நாலாகுந்திருவடிதீட்சையும்புரிவோரெம்
மிணையாநவிலற்பாற்றே. (110)

தாகமுற்றோர்யார்வரினுந்தந்தைமகனெனுமுறைமைசார்வு
றுகிங், காகமுற்றேயவரவர்கள்களிப்புறவீந்திடுதவம்போலா
வன்மாற்றிப், பாகமுற்றவாடிதனதிடத்தமைத்துக்காட்டுதல்
போல்பரிவுகாட்டி, மோகமுற்றேமுத்தமிட்டுப்போகம்விற்பா
ர்மறுகையெவர்மொழிவரம்மா. (111)

கைப்பொருளைத்தாங்கவரத்தானுண்ணத்திசைமுகமுங்கண்
டலாலே, புட்பதுமன்றனைப்போலும்வசையென்னுமண்வாயி
ற்போட்டதாலே, யிப்புவிமண்ணுண்டமாயவன்போலுங்கையி
லோடியவேந்து, மப்பரமசிவன்போலுமாக்குமவர்வன்மையெவ
ரறியவல்லார். [112]

இன்னவளச்சிறப்புமிக்கமாநகரிலரசபுரியிறைமைகொண்ட,
மன்னவர்கண்மன்னரெனவாழ்வுறுவனுலகமெலாமகிழ்வுபூப்ப,
பொன்னினமையொளிபோலும்பூவினமைமணம்போலும்புறக
லத்தின், மன்னிடுநல்லுயிர்போலுமன்னுயிரைத்தன்னுயிர்போ
ல்வளர்ப்பவாழ்வான். [113]

தேனமருமலர்மங்கைகவிமங்கைபுவிமங்கைசெயமாமங்கை [ன்
தானமரும்புகழ்மங்கைதருமங்கைவந்தனுற்றமைழக்குங்கையா

வானமருமமரர்பணிகுருநமசிவாயரருள்வாய்க்கப்பெற்று ஞானமிகும்நல்லநாயகனென்னும் பெயர்வாய்ந்தநரபாலன்பின்.

வேனில்வேளெனவனப்புவாய்ந்தசிகாமணியனையான்விசும்புறுங்கார், மேனிமாயவன்வேண்டமூவடிமண்ணளித்ததனைவியப்பிற்சொல்வார், தானிதனுக்கிணையோவென்றிடக்கோடிகோடியடிதான்கொள்ளென்ன, டானியங்கள்பொருளுடனேவரைவிலாதனபலர்க்கும்வழங்கிவாழ்வான். (115)

நன்கச்சிரதிபதியெம்பெருமானைப்பரவியுருநண்ணினன்போல், பொன்கச்சுமுலைமடந்தைமடலெழுதும்பொற்புமிகுபொருப்புத்தோளான், றென்கச்சிமாநகரினின்றிங்குவந்தரசுசெய்யுஞ்செம்மல், மன்கச்சியுவரங்கமகிபதியாய்க்குலம்விளக்கவந்தமன்னன். (116)

சினகரத்தின்சிகரியெழிற்கொடிமண்டபந்திருக்காமாக்ஷிசேர்ந்து, நனியுவக்குமண்டபமும்படித்துறைமண்டபமோடுநனிநீராழி, யெனுமொருமாமண்டபந் தீர்த்தந்தருமண்டப முதலாயியற்றிவைத்துத், தினகரத்தனொளிபோலப்புகழொளியாயுலகமெலாந்திகழ்ந்தானம்மா. [117]

செய்யவள்சேருரத்தனெனுஞ்சீனிவாசகப்பெருமாள்சினகரத்திற், சய்யமெனுஞ்சிகரியொடேயரங்கர்மண்டபம்வரதராசர்சார்ந்த, துய்யதிருமண்டபமீக்கொடிமண்டபம்மணமண்டபஞ்சுற்றெங்கு; மையறுமண்டபஞ்சன்னிதானமண்டபம் பலவும் வாய்ப்பக்கண்டான். (118)

தில்லைநடராசருக்குக்கனகச்*சடாரியொடுசிறந்தபல்பூ, ணெல்லையிலாதளித்துச்சிக்காலைக்கட்டளைக்காகவிளங்கும்பூரை, வல்லையினிலீந்துபல்பூண்செயங்கொண்ட சோழபுரவள்ளலுக்குங், கொல்லைபலதோட்டமிரசிதச்சிவிகைபல்பூணுங்கொடுத்தானம்மா. (119)

கச்சிக்கல்யாணரெங்கேந்திரனெனவேயொருமன்னன்கருணைமிக்கா, னுச்சக்கல்யாணகுணவுபேந்திரன்போலுதித்தமையானூங்கெவர்க்குஞ், சச்சுக்கல்யாணமல்கிப்பல்லவர்க்குப்புரிந்த

* சடாரி யென்பது கவசம்.

றத்தைத்தழைக்கப்பெற்ற,மெச்சுக்கல்யாணமழைபொழிந்திடு வன்புகழ்மையெனவிளம்பற்பாற்றே. (120)

அன்னவர்கள்குலக்கச்சிபுவரங்ககாலாட்கடோழனை, யன்னவர்கள்புகழுமன்னன் வாய்மைபொறைசீலமொரு வடிவமாகு, ணிந்நிலத்திற் சிவபணிக்குங்கவிஞருக்கு மிரவலர்க்குமீகைவாழ் வோன், முன்னவர்கள்புகழிணைமின்மினியாக்கிவெற்றிபெற்றே முழுதாள்வானால். (121)

அவ்வரசன்முற்கபுரிமான்மியத்தைவடமொழியையாய்தல்க ண்டு, செவ்வியதிராவடத்தின்செய்யுளாப் பாடுகெனத்தெரிப் பக்கேட்டே, நவ்விவிழிநறுமலர்ப்பூங்குழலம்மையருட்பெருக் கர்*னவிரமுற்ற,திவ்வியஞ்சேரகஸ்தியர்சம்மிதையிலுற்றகாதை யினைச்செப்பினேனே. (122)

நகரச்சிறப்பு முற்றும்.

---

# நைமிசாரணியப்படலம்.

வேறு.

மைம்மையாமடவரற்றுனும்வாயுரை
செய்ம்மினென்றன்பினிற்கேட்கிற்செம்மலே
மெய்ம்மையினளித்திடும்வீறுபெற்றிடு
நைம்மிசாரணியச்சீர்நவிலநாடுவாம். (1)

பார்திமாமதிபுனைபவளவார்சடைச்
சோதிமாமலரடிதொழுமுளத்தினர்
தீதெனப்படும்பெருங்கடஞ்செகுத்திடு (2)
மாதவமெனப்படும்வயிரவாளினர்

நன்றெனப்படுவனயாவுநண்ணுற
வன்றெனப்படுவனவனைத்துமல்குற
வென்றெனக்கருளுவீரெனவிறைஞ்சிடிற்
கன்றெனக்கருணைசெய்கபிலைக்காட்சியார் (3)

வேயைவென்றிட்டதோண்மெல்லியாரனு
சூயையாதியர்தமையடைந்துதொக்குறு

---

* நவிரம் பொதியமலை.

சாயையென்றெண்ணியேதணப்புறுதூறு
மாயையென்றகற்றியவயிர்த்தநெஞ்சினார் (4)

அரியெனப்புகல்பவனண்டங்காக்கைக்கே
யுரியனென்றுரைப்பராலுபமன்யப்பெயர்க்
குரியவனுணர்வினுக்குணர்வுறுத்துநின்
பெரியவரியற்கையைப்பேசற்பாலவோ (5)

குடையினர்முஞ்சிநூன்மார்பர்கோலஞ்சேர்
சடையினரக்கமாமணியெனத்தகுந்
தொடையினரனமிலாதிருந்துஞ்சோர்விலா
நடையினர்மறையெனுநடையினார்பலர். (6)

வெண்டிருநீற்றணிமேவுமேனியர்
பண்டிருவினையினைப்பாற்றுஞானியர்
மண்டிருமையுமெனமதிக்குமானியர்
தொண்டிருமையுமூப்பான்முடிந்தகுனியர் (7)

காசிபரத்திரிவதிட்டர்கண்ணுவர்
கோசிகர்பிருகுதென்குன்றமாமுனி
மாசிலாமணிப்பரத்துவசமாதவர்
நேசியாவொருவர்மாட்டொருங்குநேர்ந்தனர் (8)

யாமெலாமொருமருங்கிருந்தருந்தவ
மாமையாப்புரிதருமாற்றநன்றிதற்
கேமமேதருமிடமியம்புவீரென
வோமுலாநெஞ்சினருசாவினாரரோ. (9)

கேட்டலுமுவகைமீக்கிளர்ந்தநெஞ்சினார்
வேட்டலுண்டெமக்கெலாமெனவிளம்பினார்
கோட்டலரெனமுகவன்னைகூய்முலை
காட்டலுங்களித்திடுங்குழவிக்காட்சியார். (10)

அன்னதுகேட்டலுமருந்தவத்தினார்
இந்நிலத்தரிப்பரிப்பார்க்கியைந்திடும்
பன்னகமணியினைப்பரிட்சைபாரெனச்
சொன்னதுபோலுநஞ்சூட்சியென்றனர். (11)

பிள்ளையின்குணமெலாம்பெட்பினீன்றிடு
தள்ளையர்க்கன்றிமற்றோர்க்குச்சாருமோ
வுள்ளவண்டங்களை யொருங்களித்திடும்
வள்ளறன்முகற்கன்றிமதிக்கொணுதென. (12)

மாதவரனைவருமகிழ்விற்சூழ்தர
மீதவமெனப்படும்யானமீதுறீஇ
யாதவன்றன்னின்மிக்கொளியமர்ந்திடும்
போதவனுலகிடைப்புக்குளாரரோ. (13)

தன்னமென்பவையெலாந்தணப்பமேலவாய்
சொன்னவையாவுநந்தமைத்தொடங்குற
முன்னவன்றனைக்கணுஞெக்கமுன்புயா
மென்னமாதவம்புரிந்தனமென்றேமுரு. (14)

மாதவரனைவருமலரயன்பதப்
போதமைதரவிழிநீர்பொருந்துறப்
பாதவமெனவிழுந்தடியிற்பன்முறை
நாதமும்புறத்துதிநவிறன்மேயினர். (15)

வேறு.

கருணையேபொழிதருவிழிக்கஞ்சனேபோற்றி
யருணயந்தண்டமனைத்துமேயாக்குவாய்போற்றி
பருணிதர்க்கருள்பழமறைப்பண்ணவாபோற்றி
தருணமுற்றவர்க்குதவுறுஞ்சதுமுகபோற்றி. (16)

மூவரைப்புகலுறின்முனமொழிபவாபோற்றி
சீவரைத்தலைவரைத்தருதேவனேபோற்றி
யாவரையுனக்கிணையென்பமாரியாபோற்றி
தேவரைத்தமக்கடிமையாச்செய்பவாபோற்றி (17)

என்றுபோற்றிஞேர்வதனங்கஞெக்கியிண்டையிஞே
னின்றுவந்தனஞ்செய்துரைபுகன்றிடலெல்லா
நன்றுவந்தனநண்ணியதென்னையோநம்பால்
துன்றுசெஞ்சடைத்தூய்த்தவரேயெனச்சொற்முன். (18)

வேதநாயகவிபுதர்கணுயகவுந்திச்
சாதநாயகயாங்களோருழியினிற்சார்ந்து

போதநாயகன்றனையுள்ளித்தவத்தினைப்புரிய
மாதவக்கடற்றெரியவந்தனமென்றூர்மகிழ்வின். (19)

அன்னவாசகங்கேட்டலுமன்னகேதனத்தா
னன்னமில்லவரயர்வினைநோக்கியுள்ளாய்ந்தே
யின்னநீர்தரவிருந்தவம்புரிதரவிம்ப
ரின்னதானமென்றிடமனத்துவகையையியைந்தான். (20)

நீவிர்சொல்லுமுன்யானுமவ்வண்ணமேநினைந்தேன்
காவிரித்திருநாட்டினீர்குசையினைக்கரத்தா
லேவிரித்திடும்பருதியாயுப்பனீரிதன்பின்
போவிரென்றனன்புண்டரீகத்தில்வாழ்போதன். (21)

எனமொழிந்திடுதிசைமுகனேமியொன்றியற்றி
யனமிவர்க்கெலாங்காட்டெனவிடுப்பமற்றதுவு
மனகமாமிடமுற்றதிரேகத்தினமைந்தே
மனமெனும்படிவல்விரைவுற்றதுமண்ணில் (22)

தவத்தின்வன்மையின்வேகத்தின்பின்னரேசாரச்
சிவத்தினுற்றிடுநெஞ்சினர்விரைவொடுசென்றோர்
நவத்திரோர்கொடிக்குட்பலகாவதநடந்தே
யெவற்றையுங்கடந்திறுத்துழியெய்தினரன்றே. (23)

பொய்ம்மைமாறியதவத்தவரங்ஙனம்பொருந்தி
மெய்ம்மையாயுறநேமியால்விளங்குறுநாம
மிம்மையேயெழுபவத்திரோய்க்கருமருந்தென்ன
நைம்மிசாரணியப்பெயர்புனைந்தனர்நல்லோர். (24)

வேறு.

ஆதலாலவ்வனத்தினமர்ந்துதாங்
காதலாற்றங்கருத்தின்படிக்கெலா
மாதவத்தினையாற்றமகிழ்ந்தன
ரோதலாவதென்னேவனத்துண்மையே. (25)

அன்னசீர்த்தியொருவரறைந்திடக்
கன்னங்கேட்டிடினுங்கதைகற்கினு
மன்னதானப்பயனடைவாரெனின்
பன்னலாவதெய்யான்மையதோவம்ம. (26)

படியின்மற்றைவனத்திற்பலயுகங்
கொடியதாகக்குயிற்றியபேரெய்து
நெடியமாதவம்யாவுனொழுங்குவோர்
நொடியினெய்துவரென்னநுவல்வரே. (27)

செப்புமவ்வனர்தன்னிற்சிறந்தவ
ரப்பெருந்தவமாற்றவினாலன்றோ
முப்பரம்பொருளுக்குமுதல்வரென்
றொப்பவேயுயர்ந்தாருரைப்பார்களே. (28)

இத்தவப்பெருங்கானிடையெய்தலான்
முத்தரானவர்யாருமுதிர்தவச்
சித்தராயினரிவ்வனச்சீர்மைபோ
லெத்தராதலத்தும்மிணையில்லையே. (29)

அலரினானினுமவ்வரிதன்னினுங்
கலைகொள்செஞ்சடைக்கண்ணுதலானினு
முலைவிலைம்பெரும்பூதத்தினுமுயர்
தலைமையாளரென்பார்கள்சரதமே. (30)

வையவுமிவர்வாழ்த்தவும்வாய்ந்துளார்
மையில்வானத்துறைந்திடும்வானவர்
செய்யரானவர்சீர்மையிலாதவ
ரையவெண்ணவலகுமுண்டாங்கொலோ. (31)

ஆயமாதவர்குழுமடவியி
னாயனார்சடிலப்பெயர்நற்றவன்
சேயகன்றுக்குப்பாறருந்*தேனெனத்
தாயனார்மிருகாதலிற்சார்ந்தனன். (32)

சாந்தமாகுந்தவமலையாகிய
தீந்தமிழ்க்கிறைசேவடிபோற்றியே
யேந்துமாதவர்யாவருமிங்கயக்
காந்தமாமெனக்கண்ணுறக்கண்டனர். (33)

சாந்தமேவுதடமலைமாதவ
வாய்ந்திடுஞ்சிவலீலையைவாக்கினா

* தேன் பசு.

லாய்ந்திடும்படிக்கேயடியோமெலாந்
தோய்ந்திடும்படிச்சொல்லுமென்றாரரோ. (34)

பொங்குகாதைபுகன்றிடுமென்னவே
திங்கள்சூடிசெவ்வேணிகொடேவனுந்
தங்கணுயகன்றனிணையுள்ளியே
சநகரன்கதைசாற்றுறன்மேயினன். (35)

ஆய நூல்கள்புராணங்களாகமந்
தோயுநெஞ்சிற்றுகளறச்சாற்றியுந்
தேயுநுண்ணிடைச்செல்வியின்பாகன்வாழ்
வேயும்பஃறலச்சீருமியம்பினன். (36)

வேறு.

தலங்களின்சரிதங்கள்சாற்றக்கேட்டனு
நலங்களினுயர்முற்கபுரியினுதன்சீ
ரிலங்கிடவிரித்தெமக்கியம்புவீரென்றார்
மலங்களையொருவினன்வழுத்தலுற்றனன். (37)

வேறு.

அன்னமாவனந்தன்னிலகத்தியர்
சொன்னகாதையைத்துய்யவருக்குளே
கன்னச்செல்வம்பெற்றோங்கிக்கருணையே
மன்னினனப்பெருந்தவவள்ளலே. (38)

குடிலமேவுகுறுமுனியென்பவர்க்
கடியராகியவார்வமாணுக்கருட்
கெடிலம்போலருண்மிக்கக்கெழுமிய
சடிலம்பெற்றசடிலப்பெயரினன். (39)

தவருரைக்கவகல்தியர்சம்மிதை
பவமகற்றிடும்பூருவபக்கமாந்
திவளொளிப்பிரமாபுரிச்சீர்க்கதை
யெவளவாயினுமேமறப்பில்லையே. (40)

மண்டுசீரவ்வனத்தையொருவியே
தண்டுவண்குடைதாங்குந்தவரொடு
மண்டுசெஞ்சடைமாமுடிமாதவன்
பண்டுறும்பஃறலமும்பாவியே. (41)

தில்லையென்னுஞ்சிதம்பரஞ்சேறலு
மல்லறீர்ந்தசிதேந்திரியாகிய
தொல்லையோகவட்டாங்கத்துணிவினு
ரெல்லையில்லவர்தாம்வரவேற்றனர். (42)

வந்தமாதவர்தாளைவணங்கினூர்
நந்துறுததவத்தரெந்நாளுமே
யிந்துசேகரன்றுளிணையிண்டையைப்
புந்தியான்மறவாதபுனிதரே. (43)

மருவருக்கியபாத்தியமாற்றத்தைப்
புரியுந்தன்மையினன்பிற்புரிந்துமே
யுரியபீடத்திருத்தியுறுவர்கள்
விரியுநன்முகமன்கள்விளம்பினூர். (44)

வேறு.

புத்திக்கடலேகுணக்குன்றேபனுவறனக்குவைப்பிடமே
முத்திக்கரசேயொன்பதிரட்டியபுராணமொழிந்துள்ளாய் [எப்
சித்திப்பொருளேயருமையதாங்காதையொன்றுதெருட்டுகெ
புத்திக்கமுதைவடித்தெடுத்ததெனவோர்சரிதம்புகலுவான். ()

எழுமைநோய்க்குமருந்தினையேதமிழ்ச்சங்கத்திலேந்தியே
யொழுகுறுமற்காதெனும்வாயதனிலுள்ளமொன்றவே
வழுவுறுமல்புகட்டுவன்யான்மகிழ்வினுண்டுமலமென்னு
நழுவுறுதபிணிவிட்டுமென்றூர்குருவாய்நண்ணினூர். [46]

நைமிசாரணியப்படலம் முற்றும்.

# முற்கபுரிகேழ்விப்படலம்.

மயர்வுக்கெல்லாமருந்தென்னமலையமுனிவனெனும்வரதன்
பயிருக்கெல்லாமுகிலென்னப்பகர்ந்தசரிதந்தனையின்னே
யயர்வுக்கெல்லாமிக்ககளிப்பாக்குவிக்குமன்றியே
யுயர்வுக்கெல்லாமுயர்விதெனவுரைக்கலுற்றானுத்தமனே. [1]

வானமுந்திசையும்பொங்கும்புகழ்மையன்வானம்பேணு
ஞானமும்பொறையுங்குன்றுநன்றியுமுலகின்மேன்மைத்

தானமுந்தவமுஞ்செய்தவரிசையன்சாற்றொணாத
மானமுமிறையும்பெற்றமன்னவர்மன்னரேறே. [2]

இந்திரன்கரத்தைதமார்பிற்பின்னியேயிறைஞ்சிநிற்பன்
சந்திரன்பருதியோராதியரவன்றயவைக்காண்பர்
செந்திருமார்பன்வாணிகேள்வனன்னான்சீர்செப்பில்
கந்துகொல்களிறன்னானுக்குவமையார்கணிக்கப்பாலார். [3]

வலிக்குமேன்மைக்குஞ்சீர்த்திவாய்மைக்குமருவலாரைக்
கெலிக்குமாண்மைக்குமின்னான்கிடைத்திடும்வரங்களுக்கு
மொலிக்குநீருலகினேராயொருவருண்டேயோவோதில்
புலிக்குநேரெலிமுருக்கிற்புலியெனப்புகறல்போலாம். [4]

திருப்பிறைவாணுதற்செஞ்சிலையெனப்புருவமேருப்
பருப்பதமெனுஞ்சுவர்க்கத்தரம்பையர்பாடியாடும்
விருப்புறுமரங்கமல்குமேகமீப்பனிபெய்யுற்ற
பருப்பதராஜனென்னப்பார்த்திபனொருவனுண்டால். [5]

அன்னவன்மனைவிமேனையெனப்பகர்பெயரமைந்த
மின்னனாள்கற்பினாற்றெற்கெதிருறுமீனொப்பாள்காண்
முன்னைநாள்புரிந்தநன்மைப்பயனெலாமுளைத்ததென்ன
வன்னையாயுலகமீன்றவம்பிகையவள்பாலுற்றாள். [6]

கருவினால்வருந்துறாமல்கண்கவர்வனப்பின்மிக்க
வுருவினங்குழவியைக்கண்டெடுத்துடனுச்சிமோந்தே
யருவியாய்தனத்தின்பால்பீரிட்டிடவார்வம்பொங்கிப்
பொருவிலாக்களிப்பென்றிட்டபுணரியிற்புக்கினாளால். [7]

மக்கண்மெய்தீண்டலென்றுமுடற்கின்பமென்னுமாற்றந்
தொக்குமுன்செய்ததூயபுண்ணியத்தொடர்பின்மேவச்
சக்கரைப்பாகுபாறேனளவியதகைமைசாலு
மக்கயிரவங்கறுக்கும்வாயுரையன்பின்மிக்கார். [8]

வாளொளியிலகத்தன்பால்வான்பிறைவளர்ந்ததென்ன
நாளொருவண்ணமாகப்பொழுதொருமேனிநண்ணத்
தாளினாலுதைத்தும்வாய்நீர்சரிவுறப்புரிந்துமெல்லா
மாளுறுமன்னைதன்னையாளுறவளர்ந்தாளங்கண். [9]

கருமலர்க்குழல்புனைந்துநளினங்கட்கிணையாங்கச்சி
னுறுமுலைகடிக்குமங்கைப்பருவம்வந்தொன்றுமுன்னங்
குறிகுணங்கடந்தப்பாலாக்குலவுமெங்கோமான்றன்னை
யறிவினுக்கறிவதாக்கண்டருந்தவம்புரிவதானாள். (10)

பொன்னகமயக்கம்பெண்பான்மயக்கம்பூமயக்கம்பூண்டோ
ரின்னகமருவுறுமலெங்கணும்யாகசாலை
தன்னகம்யோகசாலையறச்சாலைசாருமெம்மோய்
பன்னகசாலையின்கண்பரிவொடுமேயினாளால். (11)

தேயுறுமிடையிற்சீரைபுடுத்திக்காய்சருகுதின்றே
வாயுவைநிறுத்திச்செல்லுமனத்தினைநிறுத்திவம்பிற்
பாயுறுபொறிநிறுத்திப்பகர்வுறும்புலனிறுத்தித்
தூயதாஞ்சோதிதன்னைச்சுகத்தினிற்கண்டிருந்தாள். (12)

உருப்பமிக்குறுகாலத்துமழையினுமூதையானு
மெரிப்புறலுற்றபஞ்சாக்கினியிடையினிலியைந்தும்
பருப்பதப்பனியினாலும்படருறுதினிதமர்ந்தே
யருப்பமிறவம்புரிந்தேநின்றனளம்மையம்மா. (13)

யாவராலெனுங்கணைக்கான்மரகதக்கொம்பனாள்செய்
நாவராத்தவத்தின்மேன்மைநாவலர்சொல்லப்பாற்றோ
தேவராலொண்ணுமோவெத்தேவர்க்குந்தேவரான
மூவராலொண்ணுமோவென்றதிசயத்தவமுதிர்ந்தாள். (14)

மண்ணியலறமியற்றமகிழ்ந்திருநாழிநெற்கொண்
டெண்ணியமூன்றுபத்தினிரண்டறமியற்றிநின்றா
ளுண்ணியமத்தனுட்டானப்படியுஞற்றிநின்ற
புண்ணியதிகட்கேற்றபூசனைபுரிந்துநின்றாள். (15)

கொம்பிரண்டேந்துமோர்பூங்கொம்பெனும்படிவத்தெம்மோய்
தம்பெருமானைக்காணத்தவத்தினிற்றாழ்ந்தகாலைத்
தம்பிராட்டியைப்பிரிந்துதனித்துற்றவலக்கனுற்றே
யெம்பெருமானேமாணிப்படிவத்தோடெய்தினானால். (16)

போதினான்முகன்மாறேடும்புங்கவன்மாணியாகி
யாதிமுன்னூலான்யானென்றவனணுகுற்றபோழ்தின்

ருதிபற்கூந்தலெம்மோய்தகுபொறையோடுதாழ்ந்தே
சாதியாதனத்திருத்திச்சாற்றினன்முகமனங்கே. (17)

அருக்கியபாத்தியாதிகடன்மையையன்பிற்செய்து
திருக்கிளர்முளரியன்னவனத்தாள்செவ்விநோக்கி
முருக்கிதழ்மடந்தாய்நின்னகத்தினைமுதிர்தவத்திற்
கருக்கியதென்னுத்தேசங்காரணங்கழறுகென்றான். (18)

அறுத்திடுங்குசையெனும்புல்லணையின்மேற்பள்ளிகொள்ள
விறுத்திடுமிடைதள்ளாடவின்னலானுடன்மெலிந்து
வெறுத்திடுமுருப்பமிக்கவெயிலினில்வெதும்பக்கல்விற் ளே.
பொறுத்திடுங்கொல்லோமென்பூப்படினுங்கன்றிடும்பொற்றா

வெளித்துறுமுருப்பத்தாலும்வெய்யவன்வெப்பத்தாலுந்
துளித்துறுமழையினாலுமலகிலாத்துயரத்தாலென்
றொளித்துறுதிரைப்பையென்னவுத்தமனுசாவும்போது
களித்துறுதமருந்தோகைகரைந்திடநாணிநின்றாள். (20)

உழையெனுமருண்டபார்வையுள்ளத்தைச்சருவிகாட்டக்
கழையெனுமென்றோட்டேசடிக்காரிகையார்களெல்லா
மழவிடைப்பாகன்றன்னைமணந்திடமகிழ்ந்தாளென்றார்
குழகனுமெந்தைதிண்டோள்குலுங்குறநகைத்துக்கூறும். (21)

அவனியிற்புருடர்க்குள்ளகுணங்குறியமைந்துளானே
தவநியமத்தானுன்குசாதியிற்சார்ந்துளானே
நவநிதிபெற்றானேவாருநவனேநாரியோர்கள்
சிவனையும்விரும்புவாரோவசித்தமென்னேழையென்றான். (22)

கடம்படுதுதிக்கைமாவினீருரிகலையாக்கண்டு
படம்படுமரவணிந்தேயிமத்திற்பள்ளியுற்ற
மடம்படுபூதங்காக்குமந்தரவாழ்க்கையானிங்
கிடம்பொருளேவலானோவேழைமதியென்னென்றான். (23)

பித்தனைப்பிள்ளையூன்றின்றெங்குமேபெயருவானுன்
மத்தனைப்பேயோடாடியொருதொழிலிலாதவாழ்வன்
பத்தனைப்பிறகுகட்டுப்பரித்தென்புபரிப்பான்றன்னைச்
சுத்தனையெண்ணப்பாற்றோதூயதுன்சூட்சியென்றான். (24)

சேப்புறுங்கொள்ளிக்கண்ணென் றன்றியேதிவாவிலொன்றி
ராப்பிறடருங்கண்ணென்றுவெவ்வேறுஙியநாட்டத்தான்
மூப்புறுமுதியன்கூனன்முறிபட்டனையவெறுண்டி
மாப்பிள்ளைவனப்பின்றன்மைமாதுகண்டிலையோவென்றான். ()

தந்திமாமுகமகற்குத்தாரமொன்றியற்றுகில்லா
வெந்தநாளினுங்கையோட்டிவிரந்துணுமியற்கையென்பர்
கந்தநாண்மலரின்மேயகடவுண்மாலளகையாளி
யிந்திராதியரிருக்கவிவனெண்ணமடையென்றான். (26)

என்றுரைத்திடவுங்கேட்டவெம்பெருமாட்டிநோக்கங்
குன்றினைப்போலச்சேந்துகுறுகுறுப்பெய்திநோக்கி
யின்றுறும்பூதியக்கமணிகொளுமிறைநீயேனு
நன்றுறுஞ்செய்கைநின்பாலிலையெனநவிலுற்றாள். (27)

வானக்கண்ணோருநான்குமறையுமாலயனுமற்று
மேனைக்கண்ணோருங்காணுவென்றசையையுபநிடத்து
ஞானக்கண்ணோர்கள்காணுநல்வர்க்கன்றியென்று [ள்.
மூனக்கண்ணோர்க்குக்காணவொண்ணுமோவுரைப்பையென்றா

அறிவுமேசிவமுமேயொன்றறியாதாரறிவிலாரென்
றறுதிபாரியாகள்பேசும்வாய்மொழியுணராய்கொல்லோ
வறிவினையறிந்தோரெல்லாமண்ணலையறிந்திருப்பா
ரறிவினையறியாரெல்லாமண்ணலையறியாரன்றே. (29)

அறிவுடையார்தாமெல்லாமுடையாரறிவிலார்க்குப்
பிறிவறவென்னிருக்கும்பயனென்னேயென்னும்பெற்றி
யறிகிலையறிவினும்பாரனையேயவமதித்தே
நெறியிலாநெறியேசொற்றாயெனச்சினநேர்ந்துற்றனாள். (30)

மின்னுருவத்தையென்றவிளங்கிழையப்பாலென்றான்
பொன்னுருவத்தையென்றகடுக்கையன்புறம்பினேகி
யின்னுருவத்தைத்தேவரேத்துமான்மழுக்கையேந்தித்
தன்னுருவத்தைக்காட்டிநின்றனன்றடபிரானே. (31)

அவ்வுருக்கண்டபோழ்தினுற்றவுநாணிநாளாய்க்
கவ்வையுற்றவள்செங்கையைக்கரத்தினிற்கடிதுபற்றி

யவ்வைநீயியற்றலானம்முளமலியுவகையுற்றோங்
கவ்வையின்றாகவுன்றன்கருத்தெனக்கரைந்தான்மன்னோ. (32)

இன்னநீபெறும்வரங்களென்வேண்டுமிசைப்பையென்ன
முன்னவன்விளம்பலோடுமுழுமுதல்வதனைநோக்கி
யென்னுடைக்கொழுநனாகவியன்மணமிபற்றுகென்றா
ளன்னதாமென்றுசென்றானாயிழையவளுஞ்சென்றாள். (33)

கலைமதிருடிலப்பெம்மான்கயிலையங்கிரிக்கண்ணுற்றுத்
தலைமதியாளராரைச்சாருறச்செய்வமென்றிங்
கிலையெனவிவர்க்கியம்பானெனச்சத்தவிருடியோரை
மலையரசன்பாற்சென்றுமணம்பேசவரித்துய்த்தானால். (34)

எழுமுனிவருமற்றையிருடியர்பலரிருக்கச்
செழுமலரோன்மால்மேகவாகனன்சிறந்தோர்நிற்க
முழுமுதனமையுத்தேசித்தேகுறமொழிந்தானென்றே
யழிவிலாக்களிப்பென்றிட்டவன்னவமாழ்ந்தகன்றார். (35)

சென்றவரிமயமென்னச்செப்பிதானமுற்ற
குன்றவன்முன்புசெல்லக்குரிசில்கண்டெதிர்கொண்டேத்தி
யின்றுநீவரவேயானிங்கெத்தவமுயன்றேனென்னா
நன்றுறுஞ்செய்யபாதநளினங்கணமஞ்செய்தானால். (36)

இனப்பெருந்தேவர்மூவரிருடியரேனையோரு
மனக்குறுமுறுகணீக்கவந்தனம்புரிந்துவாழ்த்தும்
வனக்கிளர்வேணிக்கோமான்மாமணாராகவந்த
வுனக்கிணையாரைச்சொல்வோமுத்தமவெனவுவந்தார். (37)

வேறு.

பொன்னைமாதரைப்பூமியையுற்றிடப்புவியின்
முன்னையோரெலாமுழுத்தவமியற்றியேமுயன்றா
ரன்னையாகியவத்தனைமருகனாவுடைய
வென்னமாதவஞ்செய்தையோவிமகிரியிறையோய். (38)

பணந்தனிற்சகஸ்திரவிறைபுகழ்ந்திடுபயன்கொள்
குணந்தனிற்குறிப்பறிந்திடலாற்றவுங்கொண்டா
ளிணைந்தமாக்குயக்கொடியினையிறைவனுக்கீயு
மணந்தனக்குநாள்வகுத்தனனிமமலைமன்னன். (39)

வந்துமாதவர்வள்ளலுக்குரைத்தலும்வானத்
திந்துசேகரன்றங்கணத்தாரொடுமேக
வுந்தியோன்முதலாகியவும்பருக்குணர்த்த
நந்திநாதனுக்குத்தரமருளினனம்பன். (40)

தூதரோடியேயண்டங்களனைத்துமேசொற்றார்
பூதரோதரம்புக்கெனப்புகல்களிப்பென்னு
மோதரோதமாங்கடலிடையொருங்கழுந்துற்றே
மாதராடவர்யாவருந்தத்தமைமறந்தார். (41)

அண்டத்துள்ளனவத்திரிபிருககஸ்தியரே
மூண்டநெற்றிக்காபாலிகாசிபரெனுமுனிவர்
தண்டமுற்றகோதமர்பாராசரர்கவுச்சரரே
மண்டுசீரவுத்தாலகர்முதலினர்வந்தார். (42)

வதிட்டர்கோசிகர்மகிழ்சமதக்கினிவரையர்
சதுட்டயத்துப்போதாயனர்சனகாதியர்கள்
பதிட்டைசெய்திடுசம்புகும்போதார்பலரு
மிதிட்டமென்றடங்காவியப்போடும்வந்திறுத்தார். (43)

மூத்தராவெனப்படுநகையல்குலார்முதிர்ந்த
பத்தரானவர்தமக்கெலாம்பலகலைவாய்மை
சித்தசுத்திநற்செல்வமீந்தருள்மிகச்செழிக்குஞ்
சத்தமாதரென்றிடுமெங்கடாயருர்வந்தார். (44)

குண்டையேறுவோன்றன்மணங்காணவேகுழுமி
யண்டங்காறுமோரடியெனவளர்ந்திடுமடியார்
துண்டந்தோறும்வெண்ணீற்றணிதுலங்குவோர்துதித்தே
யண்டந்தோறுமுற்றிடுமரிக்கணங்கள்வந்தமர்ந்தார். (45)

குட்டுறுமலேசிரந்தொறுங்கரங்களைக்கூப்பித்
தட்டுறுமலேசதுர்மறைப்பேரொலிதழங்க
மட்டுக்கண்மரைமலரினிலுறையுளார்வசிக்கு
மெட்டுக்கண்ணும்விட்டெரிக்குநான்முகக்கணமிறுத்த. (46)

அலகிலாதபல்லண்டத்திலமரர்தம்மரசர்
குலவுகின்னரர்கிம்புருடாதியர்கூறுந்

தொலைவில்சித்தர்கண்முத்தர்கள்சாரணர்தொகுதி
யுலகிலவ்வவர்தம்மடந்தையரொடுமுற்றார். (47)

பழுதிலாதபண்ணிசைதரும்வீணையிற்பாடுங்
குழுவெனப்படுங்காந்தருவாதியர்கூடு
முழுமதிக்கிணையாமுகமடந்தையர்முற்றும்
வழுவிலாக்கணத்தவர்களெண்ணில்லவர்வந்தார். (48)

மற்றைவைரவராதியர்மடவாரோடு
மொற்றையாழியானெனுந்திவாகரன்சசியுடனே
பொற்றையுற்றிடுமாதவர்மானிடர்புவிக்கீ
ழுற்றநாகர்களியாவருமொருங்குவந்துற்றார். (49)

பலரும்வந்துறப்பணைபெலசம்பரவையினார்ப்ப
வலரும்பொற்கவின்கடுக்கையோன்விடையிவர்ந்தருளித்
தலருந்தேவரும்போற்றப்பூமாரிகடயங்க
வுலருங்கோடுகள்தளிர்த்திடவிமகிரியுற்றான். (50)

உற்றவெல்லையினுத்தரந்தாழ்ந்துதெற்குள்ள
பொற்றையாதிதாவரங்கள்மிக்குயர்ந்ததுபுகலி
னொற்றைக்கோவணத்திணையெனவுள்ளனவுய்த்து
முற்றுமேதலைகீழதாய்நிற்றல்போன்முன்னும் (51)

அலைகள்யாவையுங்குழவியிற்குடித்திடுமவனி
மலைகள்யாவையும்பழகுமாறுண்டிடும்வயிற்றி
னிலைகள்பெற்றிடும்பூதமாப்படையெலாநெருங்கிச்
சிலைகள்பற்பலநடந்துவந்தனவெனச்சேர்ந்த. (52)

வந்தவெள்விடைப்பாகனையிமகிரிமன்னன்
முந்தியேயெதிர்கொடுவணங்கப்பெருமுகமன்
சிந்தையார்வமோடுரைத்துமண்டபச்சிங்காதனத்தில்
வந்தெழுந்தருளுறப்புரிந்தகமிகமகிழ்ந்தான். (53)

அனையதன்மையைநோக்கியேயமரர்களயரு
நினைவையெண்ணினன்கூடநினைத்துணையெனநிவர்ந்த
சினைகொளுங்குறுமுனிவனைநினைந்தனன்சேர்ந்தான்
முனைவர்நாயகன்முகத்தைநோக்குற்றொன்றுமொழிவான். (54)

தினைத்தனைத்துணையெனக்கடவினைப்பெறுசினையோ
வெனைத்தனைத்துணையானவனியலாதில்லை
மனைத்தனைத்துணையாகவேசென்றிசைமருவி
னினைத்தனைத்துமேசமமதாயேகுவையென்றான். (55)

அன்னவாசகங்கரைதலுமமரர்நாயகனை
முன்னநோக்கிநின்மணத்தினைக்காணவேமுயன்றேன்
கன்னநோற்றிடும்பேற்றினைக்கருதிநோற்றிலேயோ
வென்னபாதகம்புரிந்ததோவென்னிருவிழியே. [56]

கோதிலாணுரைத்திடலுங்கல்யாணத்தின்கோலம்
வேதவாரணியத்தினிற்காட்டுதும்விரைவிற்
போதியென்றவற்புகறலுமறுத்துரைபுகலா
னாதலாற்சென்றானவனியைச்சமனிலையாக்க [57]

வேறு.

கறுவாற்றவுறும்விந்தையெனுங்குன்றமேருவெனக்களிப்
புந்தோங்கி, நெறிமாற்றிநின்றதனைக்குறுங்கரத்தைநீட்டிப்பாத
லஞெழுங்க, விறுமாப்பினெவ்வளவுங்குளதோவவ்வளவினி
றிவரென்னுங், குறிகாட்டியிதைப்பார்த்துக்கோடிரெனச்சென்
றானங்குரவனம்மர். [58]

பூவிரியாராமமலிசோணாட்டிட்பொலிகாழிப்புரியினுற்ற, கா
விரியாராமத்தானந்தனமிக்கோங்கவிநாயகனைக்கண்டு, பாவிரி
வாற்றுதிபுரியக்கமண்டலத்தினன்னீரைப்பாரோருய்யக், காவி
ரியாற்றையுங்களிப்பினோடுதவிச்சென்றானகலசக்கோமான்.

திருவிகற்பமுற்றபிரான்கரஞ்சிரத்துமணியொடுவெண்ணீ
றணிந்தே, யுருவிகற்பத்திருநாமமணிந்துவனமாலைவனைந்துள்
ளேசென்று, குருநருகற்றலமெனமாதவன்கோயிலைப்பெரு
மான்கோயிலாக்கிப், பெருவிருப்பினொடுமுனிவன்விடையன்வி
டைதந்தவிடைபெயர்வுற்றானால். [60]

எங்கணுமேபுவிமாதுசமமாகிமுன்னிருந்தவியல்பையெய்தப், பங்
கயனுண்மறைமுறையின்றுறைவழியேசடங்கிபற்றப்பருப்பதத்
தா, ணங்கைமலர்ச்செங்கையினையெங்கள்பிரானங்கையிலேநல்
கலோடு, மங்கலந்தந்திடும்வண்ணமங்கலநாண்புனைந்தளவில்ம
கிழ்வுற்றானால். [61]

உம்மைமயிலேசாதியினுயர்வுறுமோமறையவனேயுவந்தளித்த, கொம்மைமுலையகலிகையாணடையிழிவிற்கல்லானாள்குலச்செம்மான்மான், செம்மைநடையினினுயர்ந்தாளாதலினீநன்னடையிற்சிறப்பையென்றே, யம்மிபதத்தான்மிதிப்பித்தருந்ததிகாட்டிப்பழம்பாலயின்றிருந்தான், [62]

பாலங்காட்டியகண்ணினன்பகர்ந்திட்டபடியே
ஆலங்காட்டியவுருவினன்விடையின்மேற்றோன்றிச்
சீலங்காட்டியதிருமறைக்காட்டினிற்சிறந்த
கோலங்காட்டலுங்குறுமுனிபெருங்களிகொண்டான். (63)

வேறு.

பாசுமம்மலைத்திருமணமியன்றபின்பரிவான்
முரசியம்பிடமூனுணர்ந்தோரெலாமொய்ப்பச்
சாசமாங்குயிலெனுமொழித்தையலாளோடு
மிரசிதக்கிரியடைந்தனன்விடையிவரெம்மான். (64)

தெருடிரண்டுறுசிந்தையர்செஞ்சடைமுடியர்
அருடிரண்டிடுநாயகனடித்துணைக்கமலம்
வருடிவேண்டியவரம்பெறுவாய்மையர்வந்த
விருடியாவருந்தலமெலாந்தரிசித்தற்கெழுந்தார். (65)

இறந்தகாலையின்முத்திதந்திடும்பதியிறைவன்
சிறந்ததன்னுருவாகியபருப்பதஞ்செழுமை
பிறந்தகோகன்னமாம்பதிபிறங்குகண்ணப்பர்க்
கறந்திகழ்ந்தகாளத்திரிமுதலனோக்கமைந்தார். (66)

அன்னந்தேடியமுடிமலைபழமையாமசல
நன்னயம்பெறுகச்சிமாயூரமேநடிக்குஞ்
சொன்னவம்பலங்காழிவேளூர்நடர்ச்சனமே
பன்னுறுங்கந்துகாபுரிபணசையைப்பார்த்தார். (67)

பஞ்சபூதத்தினப்புவினுருவெனும்பதியுஞ்
செஞ்சுடர்க்கதிர்மாணிக்கவரையொடுதிகழுந்
தஞ்சமாயெண்ணெண்டிருவிளையாடல்செய்தலமு
மஞ்சுறும்பலமற்றுளபதியெலாம்வணங்கி. [68]

உள்ளெலாமறைமந்திரத்துறுவர்களொருங்கே
புள்ளெலாமிகுவிலங்கெலாம்பகையறப்பொருந்துங்
கள்ளெலாமல்குபொழிலெல்லாநிறைந்திடுங்கவினார்
முள்ளெலாமலராயுறுமுனிமொழிமொய்த்தார். [69]

கும்பமாமுனிசிற்றடிக்கோகனகத்தை
நம்பினாரெலாம்பரவியேமுகமனைநண்ணிச்
சம்புநேரெனவிவ்வுழியெழுந்தருடலைவ
வெம்பிரானுனையன்றியேகளைகணேதென்றார். (70)

தம்மனச்சங்கைவினவுறத்தமிழ்முனிமுகத்தை
யிம்மையுற்றிடுதுறவினரேவருநோக்கிச்
செம்மையாமுண்மைப்பிரமத்திலொன்றுறச்சேரா
தெம்முளாஞ்சலிப்புற்றிடுநிமித்தமென்னென்றார். (71)

காற்றின்முன்னுறுஞ்சுடரெனக்கலங்குவதன்றி
யூற்றமென்பதெட்டுணையுமில்லாதருறுவேம்
வேற்றுமைப்பட்டேயல்வழியுற்றதென்மேலா
மாற்றமெந்தமக்கருளெனப்போற்றினார்மன்றே. (72)

நண்ணியப்பெருந்தமருரைத்தமையைத்தங்கருத்தி
லெண்ணியாவுமுக்காலமுமுணர்வுறுமியல்பின்
புண்ணியத்தலங்காணுறாசழக்கினற்புலன்கள்
மண்ணின்மாழ்கினீரெனக்குறுமுனிவழங்கினனால். (73)

வாழிநண்பரேமாதவர்யாவராயிடினுந்
தாழ்வுகொள்வரோநெறியினிலேகுவர்தலத்தைத்
தாழக்கண்டிடாராயினற்றவங்கெட்டுத்தக்கன்
றேழுஞ்சேர்ந்துதாசீனமெய்துவரெனச்சொற்றான். (74)

அடியராலயமாறன்றிப்பக்கத்தினமரின்
படியினோர்சென்றுபணிந்தருள்படைத்திடல்பான்மை
மடியினால்வழிப்படினும்போய்வணங்குறாராயின்
கொடியர்தம்முளேயிவரன்றிக்கொடியர்யார்குறிப்பீர். (75)

மலையெலாமமரென்குருநாதற்குமதிக்கும்
விலையெலாம்பெறுவேல்வனைசெண்டருள்விமலன்

வலையெலாம்பொறுத்திடுதிருப்புயத்தன்றாள்வணங்காத்
தலையெலாஞ்சுவரெழுதியவோவியத்தலையே. (76)

பொய்யிலாதவர்கழலினும்புனிதன்றாளினு
மெய்யினலர்ச்சைபுரிந்திடுசெயல்விரும்பாராய்
தையலார்கருங்குழலினிற்றதைமலர்சூட்டுங்
கையெலாம்புக்கையுலக்கையிலுறுங்கையேகாண்பீர். (77)

வேலைநேர்விழியுமையவளோடரன்மேவு
மாலயத்தினைத்தினம்வலம்வந்திடற்கழைப்பின்
றூலையென்றுரைத்தற்றெருபாணின்றிச்சூழுங்
காலையேமரக்கால்கொடிக்காலெனக்கரைவர். (78)

அண்ணலார்திருவுருவினைக்கண்டதிரேக
கண்ணலான்மலவிருளகன்றிடுமெனநவில்வர்
மண்ணெலாமிறும்பூதெனமற்றவைநாடுங்
கண்ணெலாம்புன்கண்ணோவியத்தெழுதியகண்ணும். (79)

நான்முகத்தனும்புகலொணாதகமுனிநவில
நான்முகத்தினோரனைவருநோக்கியேநோற்கும்
பூசன்மையுற்றதாயெம்மனம்யாவையும்பற்று
மேன்மைவாய்ந்திடுதலமெதுவிளம்புகவென்றார். (80)

ஏந்தமுள்ளத்தையீர்த்திடும்பதிப்பெயரெவனே
சந்தமுற்றிடுதலத்திறும்பூதென்னேசரித
மூந்தியைந்திடுதீர்த்தத்தின்மகிமையென்மொழிந்து
வந்தமையலையொருவுவாயென்னவாய்மலர்ந்தார். (81)

அந்தலத்தினிற்சபரியையியற்றினரமைவைக்
கைத்தலத்தினிற்பெற்றவர்கதியடைந்தவரார்
மெய்த்தலத்தினிலுற்றவெம்மான்பெயர்விளங்க
வித்தலத்தினிலெமக்கருள்புரிகெனவிசைத்தார். (82)

பாவிரிக்குமெய்வேதியர்பரிவிற்கேட்டலுமே
காவிரிக்குமுத்தரத்தொருயோசனைகாணுங்
கூவிரிக்குமெய்ப்பயனுறுதில்லையின்குடபான்
மூவிரிக்கும்யோசனையுளவப்பதிமொழியின். (83)

முதுகுன்றத்தினுக்கிரண்டரையோசனை மூன்று
நொதுமலுற்றிடுதென்றிசையதின்கணே நோற்றுப்
பதுமபீடத்தன்சபரியைப்பயன்பெற்றபண்பி
னிதுமுதற்பெயர்பிரமபுரிப்பதியென்பர். (84)

மாமைமிக்கவங்காரகன்மல்லியதலத்திற்
சேமமுற்றிடச்சிவபிரான்றிருவிழியெனச்சேர்ந்
தோமமுற்றவுமியற்றியேயுறுசபரியினு
ளேமமென்றுமங்காரகன்புரியெனநவில்வர். (85)

அறந்தயங்குறவயோத்தியிலமரருக்காகப்
பிறந்திலங்கையர்மன்னனைப்பெரிதும்வென்றிடவே
திறந்தெரிந்திடுபூசனைபுரிந்திடுசெயலாற்
சிறந்ததாசரதிப்பதியென்னவுந்திகழும். (86)

பார்த்தன்பூசனைபுரிந்திடுபயனெலாமருளு
மூர்த்தமாதலினவன்பெயர்ப்பதியென்றுமொழிவர்
சேர்த்திடுங்கதிப்பொதியினைப்பயறதாச்செய்த
நேத்தியால்முற்கபுரியெனவொருபெயர்திகழும். (87)

கைத்தலத்தினிலாருகந்துடையன்காமுற்ற
வத்தலங்களிற்சிவதலமுயர்வுளதரன்சே
ரத்தலத்தினுமையலாலீர்த்திடுமியல்பி
னித்தலத்தினுக்கீடெனவெதையியம்புவதே. (88)

மாதலங்களைப்பற்பலபரவிவந்துற்றீர்
தீதிலாத்தலமூர்த்திதீர்த்தமெனச்சிறப்புற்
றோதலாவதோர்தலம்பரவுறுமல்வந்துற்றீ
ராதலான்மயலடைந்துவந்தீரெனவறைந்தான். (89)

ஈர்த்தமாமதிபுனைகுடிலத்தவற்கினிய
தீர்த்தமென்மையைச்செப்புறத்திசைமுகனுக்கும்
வார்த்தையொண்ணுமோமலரவனைவகுத்திட்ட
தீர்த்தமொன்றுளததனையார்தேர்ந்துசெப்புவரே. (90)

பார்த்தனர்ச்சனைப்பரிவொடுபுரிந்துநற்பயனை
யார்த்தியாகப்பெற்றவன்கொடுமரத்தினினமர்ந்த

தீர்த்தமொன்றுளததிற்சல்சரஞ்செறிதவளை
வார்த்தைக்கேனுமுற்றிடுங்கொலோபகர்வதென்மகிமை. (91)

ஏழுதீவினிலுற்றவர்வீந்தவரென்பை
யூழியூழியாயதனிடையுய்ப்பதொன்றேனுங்
கேழுறக்கணுற்பார்த்திடக்கிடைக்கிற்றிடுமோ
வாழுமுத்தியோவனங்கொலோவாவதார்வகுப்பார். (92)

வந்திடுங்கதிப்பொதிவினைப்பயறெனவகுத்தும்
பிந்தியப்பயற்றைக்கறியாக்கியும்பெருமை
யந்தமில்லனபுரிந்ததிரேகஞ்செய்யமைவி
னெந்தைபேர்திருப்பயறணீச்சுரனெனவிலங்கும் (93)

கறிமலர்த்திடுபயறெனப்புரிந்துமக்கறியாய்ச்
செறியவப்பயற்றினைப்புரிந்துற்றதுந்தேவற்
கறியினென்சத்தியன்றியேதெனச்சத்தியாக்கு
நறுமலர்க்குழலுமையகியம்மையினுமம். (94)

வகுளமாவனத்தினுமெந்தைசன்னிதிமருவித்
திகழுவுற்றிடுந்தீர்த்தத்தினுந்தாஞ்செறியி
னிகழுவுற்றிடுந்தீவினையர்வுமேநீங்கி
மருடமன்னலுய்வாழ்ந்தினிதிருப்பார்கள்மன்றே. (95)

இத்தனைத்தலங்கள்கண்டுயிரிவருமையலிங்க
னத்தனைக்கண்டுநீங்கிற்பெரிதெதுகிறிதெதாமால்
கர்த்தனையயலாரொக்கிற்கமலத்தைதமறுபூவொக்கி
னத்தினையிப்பியொக்கிற்பதிக்கினைநண்ணுமன்றே. (96)

என்றுசொன்முனியுரைப்பவிருடியர்மிகக்களித்தே
நன்றுநன்றுங்கணுதனளினநாயகன்றனக்குத்
துன்றியபழியென்வந்திப்பதியிற்பூசித்துச்சூழ்
வன்றொழித்திட்டகாதையமைறகெனவறையலுற்றான். (97)

முற்கபுரிச்சேழ்விப்படலமுற்றும்.

# பிரமாபூசித்தபடலம்.

இம்பர்மாமுனிவர்க்கெல்லாமனத்தினையீர்த்தலாலே
கும்பமாமுனிவன்சொற்றதலத்தின்சீர்குறித்துரைத்தும்
வம்புலாம்பொழில்சூழ்முற்கமாநகர்வாதற்போற்று
மம்புயாசனத்தோன்காதையறிந்தவாறறையலுற்றாம். (1)

கொங்கலர்கமலமாலைகுலவுறுகுவவெண்டிண்டோ
ளெங்களாற்சொல்லொணாதசத்தியலோகத்தேந்தல்
மங்களம்பாடலுற்றவாணிதன்மருங்கிருப்பச்
சிங்கவாசனத்தின்மீதுசிறந்தினிதிருந்தான்மன்னோ. (2)

மந்திரர்மருங்குசுற்றவானவர்வணங்கியேத்த
விந்திரனருளைவேண்டியெதிர்விழிநோக்கிநிற்பச்
சந்திரன்பருதியேனோர்தந்தலைபரவிநிற்பக்
கந்திருவர்களோடார்ந்தசித்தர்கள்களிப்பிற்சூழ (3)

மாயிருமரமுங்கோவுங்குழவியும்மணியராவும்
பேயிரும்விரும்புமென்னிவியலிசையறியாப்போக
ணாயினுங்கடையரன்றோவெனவிபஞ்சியிற்பண்ணூட்டி
வாயினும்பாடவல்லநாரதர்மகிழ்விற்பாட [4]

கின்னரரெந்தமக்குப்பரிமுகங்கிடைத்ததன்மை
யெந்நரர்தமக்குச்செய்தகுற்றமோவியம்புகென்றே
முன்னரவ்வுழியினிற்பத்தவத்தினின்முடிவுபெற்ற
விந்நார்பலருஞ்சூழ்ந்தேயியம்பிடுமுகமனேத்த. [5]

ஞானவைராகநன்காமொழுக்கமேநவில்முக்காலாய்
மோனமுற்றிடலானுற்றமுழுமதியாம்பிருங்கி
யானமாதவன்வதிட்டரகஸ்தியர்சனகனாதி
மானவரென்னவந்தமாதவர்வாழ்த்தெடுப்ப. [6]

பொன்னையுற்றுள்ளோர்சில்லோரிலர்பலராப்புவிக்கண்
மன்பணதயோர்க்கும்யார்க்கும்வன்றலைவரையுமாபோ
லுன்னையென்னிடங்காட்டாதேயுனக்குக்கைகாட்டுவேன்யா
னென்னைநீயறியாயோவென்றம்பையராட்டிசைப்ப. (7)

உன்றனாவினிலெஞ்சத்தியுறையவுள்ளுதிப்பதெல்லா
மெந்தம்பாலாகுஞானிக்கெவ்வண்ணமெழுதுவாயிங்
குன்றன்*வாலினையென்பாலாட்டாமனாற்றிடுவாயுன்பா
லெந்தம்வாலாட்டுவோங்காணெனமாதிருவாலாட்ட. (8)

இவ்வணஞ்சிறப்பக்கும்பமுனிவன்மைத்துனனிருந்தான்
செவ்வணத்தேவபாடைக்கவியினுந்தென்சொல்லாலு
மவ்வணச்சிந்தைபாடலளப்பிலபுலவராராய்ந்
திவ்வணமென்றுவண்ணம்பற்பல்பாவிசைத்துள்ளாரால் (9)

ஆன்றவர்முதியர்பாடுமவையுறுவாரைநோக்கிச்
சான்றவராம்விண்ணோருந்தவத்தருமுசாவவெண்ணி
நோன்றவர்தமக்குமூவர்தம்முளேறுவனுமுத்தி
யென்றளிப்பவரார்சங்கையிலாதெமக்கியம்புமென்றார். [10]

அவரவர்பெரியர்வாக்காலடைவதுகடன்மையென்று
தவரெலாம்வணங்குமுக்காற்பிருங்கிமாதவனைநோக்க
வெவரெலாமெமைவகேட்டாலுமியம்புவன்மேன்மையென்னுங்
கவர்சடைமுனிவனாங்கோர்வினாவிடைகழறலுற்றான். [11]

வேறு.

சாலோகஞ்சாமீபஞ்சாரூப்பியத்தாலயற்கு
மேலாகுமரிக்குமென்றுசுருதிகள்விளம்புமன்றி
நாலாகும்பதவியின்றாரளித்தனரெனநவின்ற
நூலாராய்ந்தவர்களுண்டோவுண்டெனினுவன்மினென்றான். []

புடையாருவோர்கள்போகதனுவினாற்பொருந்தியென்று
மடையார்களின்பசித்தியாகமேயழியுமாற்றால்
சடையாரும்பரமனன்றிச்சாற்றுமிலழியாத்தன்மை
யுடையாருக்கில்லையாயினுதவலென்னுரைமினுண்மை. (12)

வேறு.

ஒன்றினுக்கொன்பதாகவுரையுளான்பெரியனன்றி
யொன்றினுக்கொன்றேயென்றிங்குரைப்பவன்பெரியனோதா
னன்றியாம்பிரமாவாதிரவவுருவடைவனீச
னன்றியொவ்வோருருக்கொண்டவனாயானைறவதென்னே.

---

* வால் பரிசுத்தம்.

ஈசனூர்கோயிலென்றுமேனையோர்கோயிலென்றுந்
தேசமாமூலசோர்வாக்கேவேதவாக்கென்னச்செப்பி
னீசனுமந்தணருக்கேற்றதிங்கிதையுணர்ந்தால்
பாசமற்றார்க்குமுத்திதருந்தலைவனைப்பார்ப்பென்னே. (14)

வேறு.

ஆதலாலின்பசித்தியருளுதலரனேயன்றிக்
காதலாற்றருவாரென்றுகட்டுரைப்பார்களுண்டோ
வோதலாற்பயனென்னென்றேயுரைத்திடலோடுங்கஞ்சப்
போதலாலுறையான்மூண்டசினத்தொடும்புகலலுற்றான். (15)

மைப்படிவிழிகுலாவும்வல்லியையவணங்குறாது
செப்படிவித்தைக்காரன்போலவளியுருவிற்சென்றே
யெப்படிநீத்திட்டாயோவப்படியெமைவிலக்கி
யிப்படிப்புகலாதேயென்றுரப்பியேயியம்பலுற்றான். (16)

அழிவதுநமக்குண்டேயோவளிக்குநம்பதவியாவு
மொழிவதென்றுரைத்திட்டாய்நீபடைப்பினிலுற்றிருந்து
மிழிவதுபுகன்றாய்நந்தம்பெருமையையின்னேதேறப்
பிழிவருதுளவோன்றன்னைக்கேளெனப்பேசினானால். (17)

அவ்வழியையத்தார்களனைவருங்கரங்கள்கூப்பித்
தெவ்வழிதரவேயாழிச்செங்கரச்செம்மறன்னைப்
பொய்வழிச்செல்லாவாய்மைப்புண்ணியாவருவாயென்றே
செவ்வழித்தாகவெண்ணிச்சிந்தனைசெய்திருந்தார். (18)

கருவிறைகாணாரெல்லாங்கருதிப்போற்றிடினுங்காணா
மருவிறைதுளபமாலைமனத்துறமேருமீது
வருமுறைமுகிலுற்றென்னவொளிர்சிறையுவணமீது
திருவுறைமார்பன்வந்துசேர்ந்தனன்றிகழவன்றே. (19)

கண்டனர்கண்ணினாலேகரைவுறுமுருவையெல்லா
முண்டனர்போலநோக்கியுத்தமாங்கத்தினாலே
மண்டினர்வணங்கிநின்றுதோத்திரமனத்தோடொன்ற
விண்டனர்முகமன்கூறிவிழிகணீர்வழியநின்றார். (20)

நீவிரென்றனையழைத்தநிமித்தமென்னிகழ்த்துமென்னக்
காவிரிநாடெல்லாநுங்கண்ணினுண்மணியாங்கண்ணா

பூவிரிகமலன்றானோபுராரியோநீயோபேச
நாவிரியாதமுத்திதருவதாரெனநவின்றார். (21)

பூவுலகத்தில்யார்க்கும்பொருந்தியவையத்தாலே
தீவினையேமேவிட்டுக்காலங்கள்செல்லலுற்றார்
நாவெனுந்துலைநாவிட்டெடம்மையமுதமாய்வந்த
மூவெனும்பதத்தான்சொல்லுந்தூக்கிநீமொழிவையென்றார்.

என்றலுமுளமகிழ்ந்தேயிருடியர்தம்மைநோக்கி
நன்றுநன்றுங்களெண்ணநவின்றையந்தீர்ப்பனென்றுஞ்
சென்றுசென்றணுவாயுள்ளந்தேய்ந்தவாறிவர்செப்பின்
குன்றுபோற்றடித்தநெஞ்சத்தார்க்கெவர்கூறுகிற்பார். (23)

பணங்களினரவப்பூண்கொள்பரசிவனுதிபார்க்கிற்
குணங்களினுயர்ந்தார்தம்மைத்தெய்வமாக்கொள்ளற்பாற்றாங்
குணங்கள்சற்றில்லாதாரைக்கொள்கையினுயர்ந்தென்குன்றாப்
பிணங்கலையன்றியற்றென்பேசுவன்பெருமவென்றான். (24)

நீமகாராசனென்றெல்லோரையுமிகழ்த்தல்போல
வாமுல்லாசத்தினாலேயறைந்திடுநம்மைவேத
நாமெல்லாமவர்க்குள்பட்டபசுபதியென்னுமந்த
வோமெல்லாமானன்முத்திதருவனென்றுரைக்கும்வேதம்.(25)

என்னலுமிகக்களிப்புற்றெண்ணத்தினையநீத்துப்
பின்னல்சேர்முடியார்யாரும்பிஞ்ஞகனென்றேகொண்டார்
செந்நெலும்பயறுங்காதல்செய்திடுந்திசைமுகத்தா
னின்னலுற்றெழுந்தீப்போலியம்பினனெவருங்கேட்ப. (26)

அரியின்றுசொல்லுமாற்றமுண்மையோவடிகளண்ட
வெரியன்றுசொல்லுமாற்றமுண்மையோவிரண்டும்யார்க்குஞ்
சரியன்றுபழைமையோர்கண்டதுசான்றுதானென்பார்க்குக்
கரியின்றுகாட்டவல்லார்யாரெனக்கழறுவானல். [27]

பூக்குமுன்காய்களேதுகனியேதுபுவனமெல்லா
மாக்குமுன்னரியேதக்கிங்கானேதுக்கன்னையாகித்
தூக்குநாயகனுதலான்முனம்புகல்வனென்னைக்
காக்குநாயகன்வேறுண்டோவென்றனன்கமலப்புத்தேள். (28]

எனைவிடப்பாலனஞ்செய்திடுவதாரெனதுமுத்தி
தனைவிடப்பேரின்பத்தைத்தருவதார்சாற்றுங்காலை
முனைவிடமாட்டாதுற்றுப்பிறந்திடுமுக்கணனென்
றனைவிடப்பெரியனோதான்றனையனேயன்றோவென்றான். (29)

வேறு.

என்போடுபணிவரவைக்கரஞ்சிரத்துங்கயத்தோலையிடையிற் சேர்த்துத், தென்போடுவெதியுமயற்கூட்டத்தோடி டுகாடுசேர்ந் தேயாடும், வன்போடனுசாரம்வாய்ந்துதயோகுணத்தோடுமரு வுவானிங், கன்போடுதுதிப்பவருக்கலதுதுட்டர்க்கருள்பவனோ வண்ணலம்மா. (30)

நன்னுதனிராங்காரன்*மகவாகிவல்லாளன்சுதனானான்; னின்னு தனுந்தசரதற்குமேனையர்க்குமிகமூயோனித்தழும்பேற், றுன் னுதற்குச்சிறுவனாயுற்றேனவ்வவரெம்மிலுயர்வுண்டேயோ,வுன் னுதவிலவன்வரவுநீதெளியுமாறன்றோவுயர்வென்னென்றான். ()

வெண்ணிறமேமிக்குடைத்தாய்சுகத்துக்குஞ்ஞானத்தின்விளக் கத்துக்குந்,திண்ணிடமாயுறைவதுசத்துவகுணமென்றேபத்துச் சிவபுராண, நண்ணிடுமால்யோகிகட்குநமக்குமேஞானோபதேச னென்றும், உண்ணிறமேபளிங்குருவினுறங்காதந்தணர்பதியா யுறுவனீசன். (32)

கருநிறமிக்குடையதுதாசினவுருவங்கூடகிர்த்தியங்கண்டு, மரு வுறுநித்திரைசோம்புமிக்குறுமாவஞ்சனமேதமம்வகுப்பி, னரி புராணங்களொருநான்குரைக்குமனந்தன்மேற்றுயிலமர்ந்துங், கரையறுபத்தரைமோகிப்பிப்பவன் செங்கண்ணனெனக் காண லாமே. (33)

சிவந்தநிறமுடைத்தாகித்துக்கத்துக்கிடமாச்சஞ்சலரூபஞ் சேர்ந், தவந்தனதென்றுரைத்தசெயலானவையிராசதகுணங் களாமால், சிவந்தநிறமுடையவனாய்ச்சஞ்சலரூபம்பெற்றேதி கழும்வேத, தவந்தனைச் செய்வோர்க்கருள வவனருளால்மு ன்னிற்பின்சாற்றலென்னே. (34)

* அல்லமாப்பிரபு அவதாரம். வல்லாளமஹாராஜன் மகன் அவதாரம்.

இராசததாமதசாத்துவிதமென்னமுறையானவிவையோர்த
ற்கே, விராவுபிரமாவிண்டுருத்திரனென்றிடநடுவின்மேவுவேன்
யான், றராதலத்தினிவையறியார்முற்குணமாதவனென்றுசாற்
றிவிங்கு, விராவுமுறைபிறழ்ந்துவிண்டுருத்திரன்பிர்ம்மாவென
யார்விளம்புவாரால். (35)

அன்றியுமாமறையின்முன்பின் பப்பாதிபவருக்காமப்பாதிக்
கண், டென்றுமயனாதிபலரையுஞ்சொல்லுமவற்றுள்ளுநடுத்தோ
ன்றுற்றே, னென்றுமறையுணர்ந்தவருக்கேதெரியும்யான்முத
லாவேனையோர்க்கு, நன்றிதருஞானோபதேசியார்நானெவர்க்கு
நவின்றிட்டேனே. (36)

விஷத்தையயின்றவனென்றிங்கிகழ்தலினாற்பயனென்னேவிரி
யண்டத்தை; யொழித்திடுமிக்குரூப்பமுற்றதாலவையுங்கருவ
டிவாயுறுத்தியாவு, மழித்திடவாட்டுறும்போழ்தெம்மால்முடி
யாதெனவயின்றானிலையேல்யார்க்குங், கழுத்திடுமங்கலமேது
காமேதிங்குலகேதுகரைவையம்மா. (37)

தலையோட்டிவிரந்துண்டானென்றாய் முன்படைத்தவோர்ச
தூர்முகத்தான், மூலைகாட்டுமாதர்மயலானிறுமாப்புற்றதனால்
முன்னங்கிள்ளித், தலைகாட்டினான்காணென்றிறுமாப்பின்வடிவி
தெனத்தடித்தேமேருச், சிலைகாட்டுங்கரத்தனைச்செப்புவதில்
வருங்கதியென்னேதெளிகிலேனே. (38)

பித்தனெனக்கரைபவர் கடாம்பித்தரல்லாது பின்னுண்டே
போ, வத்தமதிலயன்றலைவைத்தென்னிறுமாப்பினையகற்றவனி
னுதற்கண், குத்தியதினெழுகுசோணிதங் கொண்டானிதைக்
கொண்டேகூறுவார்கா, ணித்தலத்திற்கெடுங்குழியுள்ளார்புக
ல்வாரலதெவரேயியம்பற்பாலார். (39)

என்மகாரிருவரினின்றலைகொண்டுமாரனையுமெரித்துக்கோபி,
வின்மையாக்கினனவன்பாற் சினங்கொள்ளிலெட்டுணையுமேகா
தென்றுந், தன்மகார்தமைப்புரிவனெனிவிவர்கடாந்தகப்பன்
சாமியென்றே; *மென்மையாயினரின்னங்கெடுங்காலக்குழியாக
விளம்பலென்றான். (40]

* மேன்மையென்பது மென்மையென்று குறுகியது.

தன்னிருகண்கரந்ததிவ்வுலகிருண்டவிழித்திடவாள்தயங்க
லுற்ற; வென்னிருகண்ணுறங்கவிருளேலவருக்கோர்குறையிதனு
விறைமைதேர்வா, யென்னைவிடவும் பத்துப்பங்குயர்வனன்று
னென்றியம்பச்சான்றோ, புன்னுமிலிப்புவியினுறைசிவத்தலங்களை
லகுகளேயுரைக்குமம்மா. (41)

முன்னமட்சத்தென்புகமடத்தோடு கிடிகோடுமாட்சிங்கத்
தோன், மன்னும்வாமனத்துரிமற்றயவுருவினருச்சனையாய்வாங்
கிக்கொண்டே, பன்னவதாரத்தினிறுமாப்பொடுக்குவானென்
னில்ஞானத்தெம்மான், றன்னிபறத்துவமசிவில்வாதிதவிமல
னையார்சாற்றவல்லார். (42)

பரமாத்மாசீவாத்மாவெனவிரண்டுபகுப்பெனவெப்பான்மை
நானு, முறையாற்றல்யானுணருமாறுசனகாதியரென்றுதித்த
ன்றனைக், குருவாக்கியமறியாமாணுக்கராயுபதேசங்கொண்டகா
தை, விரவானதறியாதா ரறியாதார் தமக்கென்னே விளப்பு
மாறே. [43]

அவனருள்பெற்றிடு சனகரெண்வயதாயூழிதொறுமமருவா
ரால், தவநனிமார்க்கண்டர்முகனூழிதொறுமவ்வவற்றுய்ச்சரிப்
பரென்றும், எவனினிபால்சொல்வனெமக்கேயிறுகிடைத்திடு
மன்றனுக்கீறே, தவனினையாரைப்புகல்வனுருதாரத்தின்மே
லருற்றாரே. (44)

சுகர்விபீஷணாசுபத்தாமரனுமாராதியோரைச்சொல்லி
னகரவிவர்சிரஞ்சீவிகார்க்கடனீருள்ளவரைநல்கலெல்லாம்
பகரவயன்கற்பத்தின்மடிவாகுக்தோற்றமெலாம்பாழாமந்த
வகரமுதலாயினன்மெஞ்ஞானமருளுறினென்றுமழியாதன்றே()

இதயகமலாலயத்தில் யானவனையிருத்திப்பூசனையியற்றிப்,
பதவிபெற்றதா லாரூர்தனிற் கமலாலயமென்றே பகர்வர் நல்
லோர்; பதியதனிலனந்தமுளயானருச்சித்தாழியருள் படைத்
தல்காட்ட, மதியணிந்தான்பூசித்தானென்றியம்பவொருதல
மும்வழங்காதன்றே. (46)

எத்தலத்தும்யான்மாலைக்காலமவற்பரவுதலுக்கேகலாலே
யத்தலத்துஞ் சினகாத்துளக்காலமெனக்கியற்ற முன்னூர்

காண், கைத்தலத்துளமருநெல்விக்கனிபோல நூல்சான்ருய்க் கழறுமாற்ருல், கொத்தலர்த்துங் கடுக்கைபுனைகுழகனுர்பெரு மையையாங்கூறப்பாற்ரே. (47)

அவனருளையணுவேனுமெவர்பெருவிடினு மவர்க்கருளுருவா மவனருளையடைந்தமையினனைத்துயிருமேயமாராதியாளு, ரவ னருளையடைவமையினரும்பொருளையடைந்து முத்திபடைவ ரென்று,மவனருளயன்றிநம்மாலொன்றுமிலையாணையினமாணை யாமே. (48)

என்றுபலமுறைபகர விபுதர்முனிவரர்யார்க்கு மெம்மான் ஞானக்,குன்றனையான்பாவனுதீத திரிகுணரகிதக் குழகனென் றே,யன்றுணர்ந்துசிவபெருமானடியவருக்கடியராயினரதிக்தும் பின்றுணையிலாப்பதுமன்கஉலவேற்றுமையின்மதம்பெரிதுற்ரு னல் (49)

வேறு.

மாயையானுமமதையினுனுமே
நீயைய ‹ சொலனீதியன்ருமெனுத்
தீயையோம்புமுனை வருந்தேவரும்
வாயைநோவவழுத்தினர்மன்னவே. (50)

ஊழித்தேவனையெள்ளுதியுண்மையை க௦ரீ
யாழித்தேவனுரையுமறிகிலாய்
கோழித்தேவனினங்குட்டலாமெனத்
தாழித்தார்மிகத்துற்பழிதோன்றவே. (51)

ஆர்க்குங்கேடுவருமென்றறிகிலார்
பார்க்குண்மிக்கப்படைப்பர்மமதையிவ்
வூர்க்குளும்பகைகொள்ளுவருன்னுமிற்
போர்க்குவம்மெனவேபுகல்வாரரோ. (52)

ஓங்கினுன்றருக்குற்றமமதையிற்
றீங்கெலாமொருங்காகச்சிறந்துளான்
ருங்குசத்தியலோகத்திற்றள்ளுற
நீங்கினுன்பிரட்டநீண்மலர்நேயனே. (53)

என்னகற்றிருந்தாலுமிவ்வூழ்வரு
முன்னமேயறிமூதுணர்ந்தாருண்டோ
வன்னகேதனவேதனறிகிலா
னென்னிற்பின்னரெவரையிசைப்பனே. [54]

தெய்வத்தன்மையிற்றள்ளுந்திசைமுகன்
பையுளுற்றுப்படைக்குந்தொழில்விட்டு
மையலாலுறுவாழ்விழப்பார்க்கெலாங்
கையிற்புண்ணெனக்காட்டினன்சான்றரோ. (55)

அந்தச்சத்தியலோகமகற்றியே
வந்துற்றுனிந்தவையகத்தின்கணே
யெந்தத்தேவனெனினும்விதியினை
முந்தித்தள்ளமுடியவொண்ணாதரோ. (56)

வேதநாதன்வெருவுற்றுநீங்கவே
பேதமாகும்பிரளயமென்னவே
வோதவெலைமுன்னாகவுரைபஞ்ச
பூதம்யாவுங்கலங்கிப்பொருமிற்றே. (57)

கந்தமாமலர்மேயகடவுடா
னந்தியவ்வயினீங்கவு*நாணிலா (*மங்கிலியம்)
விந்துசேர்முகவேழையரென்னவே
யந்தலோகம்வனப்பிலதாயிற்றே. (58)

பெருக்குஞ்செல்வமுங்கல்வியும்பெற்றுழி
யிருக்குமீதென்றறிந்தவிறையையு
முருக்கிவிட்டதெனின்மூதுபாரினிற்
றருக்கின்மேன்மையைச்சாற்றுவர்யாவரே. [59)

அன்னதன்மையைநோக்கியனைவரும்
பின்னரவ்வுழிநீங்கிப்பெயர்ந்தரோ
வென்னகாரணமோவென்றிரங்கியே
பன்னுந்தத்தம்பதிபுகுந்தாரரோ. (60)

அறிவுளாருக்கறஞ்சுகமார்த்திடு
மறிவிலாருக்குறுவதவதியென்
றறிவினார்சொலுமாற்றத்தமைதியை
யறிவினாற்கண்டனர்தவத்தன்பரே. (61)

வேறு.

திருவெல்லாமலியுஞ்சீர்சால்மனை தொறுந்திங்கண்மேவி
யுருவெலாநமவென்றென்றியுயர்ந்துவப்போடுமேவுங்
குருவெலாமலிந்தமாடமாளிகைகுலவுற்றோங்குந்
தெருவெலாமெழில்சேர்மாயாபுரியென்றோர்நகர்சிறக்கும். (62)

மெய்ப்பதுமாசனத்தான் விண்டுவிண்ணோர்களாதி
மூப்புவனத்தார்தம்மை முற்றுமேவிழுங்கிமீண்டுந்
துப்புறல்செய்பாமாயை சொல்லுமோர்நகரமாகி
யப்பெயர்புனைந்திருக்கிலனைந்தனுமறையப்பாற்றே. (63)

அந்நகர்தன்னிற்செங்கோனீதியினமைந்துநின்றான்
றுன்னலர்தம்மையெல்லாந் துகளுறச்செற்றதோளான்
மன்னவர்மன்னனான மணிமுடிவயங்குசெம்ம
லுன்னிபராசசூடாமணியெனவொருவனுற்றான் (64)

அன்னவன்செங்கோலோச்சி யம்புசூழவனிகாத்து
மின்னிடுமுகில்கண் மாதமும்மாரிமேவிப்பெய்யத்
துன்னியபறவைபல்ல விலங்கொருதுறையிற்சூழ
மன்னியதெவ்விலாது வாழுறவாழுநாளில். [65]

மறையவர்குலத்துக்கெல்லாஞ்சிகாமணியாய்வதிந்தே
நிறைவுறுமகங்கள்யாவுநெறிமுறையியற்றவல்ல
துறையினினல்லொழுக்கத் தொன்மையிற்றலைமையாகி
யுறைசுதவித்தனென்னுமந்தணனொருவனுள்ளான். [66)

மனையறமாட்சியில்லாளிலையெனின்மண்ணின்மீதே
யெனையறமாட்சியேனுமிலையெனவியம்புமாற்றால்
மனையறம்யாவுமேயோருருவெனவந்தமங்கை
புனையறம்பூண்டவேதவதியொடும்பொருந்தியுற்றான். (67)

பொன்னுறுகதிரைப்போலும்பூவினின்மணத்தைப்போலு
மின்னுயிருடலைப்போலு மின்றமிழ்மதுரப்போலுந்
துன்னியகருங்கொடிக்குத்துணைவிழிமணியைப்போலு
மன்னியமனைவியோடுமறையவன்வாழ்ந்திருந்தான். (68)

இருவருமகவிலாமலியம்பருமறமியற்றிப்
பொருவருமகங்கள்செய்தபுண்ணியவியற்கையாலே
மருவருமுல்லைவேய்ந்தமனை வயிற்கருப்பம் வாய்ப்ப
வொருவுசத்தியலோகத்தானுற்றனனவதரித்தே. (69)

ஈன்றிடுமருமானைக்கண்டிறிலாவோகையுற்றே
யான்றமுன்செய்வினைக்கேயமையவேநாமஞ்செல்வந்
தோன்றுறும்போகம்வாய்க்குமென்னவேசொல்லற்கேற்ப
வென்றுறநாமம் வேதநிதியெனவியம்பினால். (70)

அவ்விதமகவுந்திங்கட்பிறையெனவளர்வுற்றங்க
ணெவ்விதநூலுமின்னுனன்றியேதெனவியம்ப
விவ்விதவுருவினெல்லாக்கல்வியுமெளிதிற்கற்றே
செவ்வியபெயருக்கேற்பச்சிறந்தினிதிருந்தான்மன்னோ. (71)

தன்னொடும்பிறந்ததம்பிபதின்மர்கடாமெல்லோரும்
பொன்னொடும்போகந்துய்ப்பார்புந்தியின்களிப்புப்போல
மின்னொடுசிரிக்கும்போதும்வேதம்வாய்விள்ளும்போதும்
பின்னொடுமுன்னொடென்னும்போழ்தினும்பிரியாரன்றே. (72)

எனையவர்தமக்குமேலாமறையவர்குலமிளையந்தான்
முனையவர்தங்கட்கெல்லா முதுணர்வுடையானை
வனையவர்விவாகமுற்றே யங்கனைமார்களோடு
மனையவர்பலருமிக்கவரைவிலாமகவுபெற்றார். (73)

சிலமகப்பெற்றபேர்கள்செல்வம்பெற்றினிதுவாழ்வர்
பலமகப்பெற்றபேர்கள்பாரிற்றுன்பெய்துவார்க
ளுலகினிலதற்குச்சான்றாயும்மறைநிதியர்தாமு
மலகிலாமைந்தர்தம்மைப்பெற்றனராண்டொன்றாக. (74)

இலைகொள்வேலிராசசூடாமணியெனுமிறைவனீன்ற
சிலைகொள்வாணுதற்கருங்கட் சித்திரரேகையென்னுந்
தலைமடந்தைக்குத்தக்க மணம்புரிசமயஞ்சார
மலைநிகர்திணிதோண்மன்னன்யாவனோ வானென்றெண்ணி. ()

வாரணவாசியாளுமன்மகன்மங்கலத்தைத்
தாரணஞ்செய்யமாற்றஞ்சம்மதங்கொடுத்துமற்றை

யேரணமில்லாமன்னர்க்கெழுதியமுடங்கலேவிப்
பூரணக்கலசமாதிநகரணிபுதுக்கினரால். (76)

பார்த்திபர்பலருங்கூடிப்பணையொடுமுரசொலிப்ப
மாத்திகழ்துரகந்தேர்காலாளொடுமருவிச்சூழ
மூர்த்தநாள்குறிப்பித்தங்கண்மணமகன்முதியரெல்லா
மேமத்திடவந்துமாயாபுரியினையெய்தினரால். (77)

இரவினின்மூர்த்தம்வைத்துச்சடங்குகளியற்றுங்காலை
வரனெனவந்தகாசிமன்மகன்றனக்குமாலை
புரமுறச்சூட்டுதற்கெவ்வளவேனுமுள்ளமின்றிக்
கரவுசித்திரரேகைப்பேர்க்கன்னியுங்கவற்சியுற்றாள். (78)

கன்னிதன்சேடிமார்க்குக் கருத்துறுகவற்சியாவும்
பன்னிடவெண்ணிவப்பி னென்றழைத்தேபடர்ந்து
மன்னியதுடைவைசென்று மயிலினைக்குயிலினைக்கண்
டன்னிடமின்றியொக்கலாய்விளையாடினரால் (79)

குமிழினைமூக்கென்றெண்ணிமுளரியைக்குயமென்றெண்ணி
யிமிழ்தருமுல்லைதன்னையெழிலுறுதசனமென்ன
வுமிழ்மதுக்கோடறன்னையுபயமாங்கரங்களென்ன
வமிழ்தமாமொழியார்கொய்துசரிப்பர்களா ¶ ராமத்தின் (80)

இபக்கர்தங்குலத்துதித்தவெழில்கொள்சித்திரதன்மைந்தன்
மபக்குறுமுருவம்வாய்த்தமணிகொள்சித்திரவீரன்று
னயக்குறவிண்ணினுற்றுச்சரித்தனனங்கைதன்னை
முயக்குறவெண்ணியெண்ணிநெருங்கினன்முகமலர்ந்தே. (81)

மண்ணியல்மடவராலென்றிடுமீனைவெளவும்வண்ணம்
விண்ணியன்றிடுவன்றானும்விழியெனுந்தூண்டிவிட்டான்
புண்ணியச்சிறகுபெற்றேபொலிதருபுருடப்புள்ளைக்
கண்ணியினுட்படுத்தக்கண்ணுறக்கண்டுநின்றாள். (82)

---

* ஏரணம்—கணக்கு.
¶ ஆராமம்—சோலை.

கண்டனன்கமலமாதோகற்பகமாதோகாமன்
கொண்டிடுரதியோநாககன்னியோகுவலயத்திற்
பண்டருகிளவிமாதோபார்த்திபன்கன்னியோவிவ்
வொண்டொடியாள்யாரென்றேயுவகைமேனுவகைபூத்தான். [ ]

அன்னவடானுமின்னோன்மாரனோவயில்வேற்செங்கை
மன்னவமுருகனோவெள்வாரணமன்னன்றானோ
பொன்னமாளைகையாளும்புட்பகவூர்தியானோ
கன்னிதன்னுளங்கவற்றுங்கவினுளான்யாவனென்றாள். [84]

மருவருமைம்பாலோதிமாதர்கட்கரசியானும்
பொருவரும்வனப்பின்மிக்க பூஞ்சிலைக்கரசன்றானு
மொருவரோடொருவர்மற்றோருழியினிலோடாவண்ண
மிருவரும்பாசத்தாலே பிணித்தனராயிருந்தார். [85]

அடல்கெழுகல்வியிக்கோரேனுமைம்பொறியடக்கி
விடலரும்புலன்கள்வென்றமெய்த்தவமுனிவரேனுந்
தொடலுறிற்போதுமென்றே சூழுநீங்காதகாதற்
கடலினிமிறங்கினனக்காவினிலிறங்கிக்கண்டான். [86]

மாயையேயுருவாய்முன்னும்பின்னுமேவனப்புவாய்ந்து
வாயையாயிரத்தருக்கும் வழுத்தொணாமயிலேமானே
மாயிரும்புவியோவானோமலர்கொலோவாழூரென்ன
நீயெவன்மகணின்றேமமென்னதுநிகழ்த்துகென்றான். [87]

என்னனுமாற்றமொன்றுமியம்பிடாளிதயந்தன்னிற்
அன்னியபலகவற்சிசூழினுஞ்சொல்லற்பாற்றோ
பன்னுறநாணினாய பாவைவாளாவிருந்தாள்
கன்னியிவ்வூராள்மன்னன்காதலியெனவறிந்தான். [88]

மடக்கொடியார்கணெஞ்சம்வானினீளமுமிவ்வாரிக்
கடற்படுமாழ்ந்தானுங்கண்டதாரென்றுசொன்ன
திடக்கலைசமேயின்னான்வாயினாலிசையாளேனு
மடக்குமோகண்ணுந்தன்மையறிந்தனனறையலுற்றான். [89]

மாமைசேர்தருயிபக்கர்வழிவந்தமன்னன்யானுஞ்
சேமவுன்றனைக்கலந்துதிளைத்திடற்குவகையுற்றே

னைமுறுகின்றகாமரசவல்லியெனைச்சேராயேல்
காமபாணத்திறந்தாற்கடும்பழியுனக்குண்டாமால். [90]

எனவுரைத்திடவுள்ளத்தினெழுகடலினுமிதந்த
கனியுறுமுவகையுற்றாளாயினுநவிலுறாளாய்த்
தனியளோர்கன்னியென்னைத்தீன்முயங்குறுவனன்றி
வனிதையர்பூக்கான்முன்னமருவுவருளரோவென்றாள். (91)

இத்திரேகைசெப்பச்செப்புவான்விசித்திரத்தால்
முத்திரையுளதோவென்றுங் காந்தர்ப்பமுற்றுமாகி
னைத்துறுவோர்தமக்கே நன்மணமியற்றுவிப்ப
அத்தயமன்னர்க்கீதலறமெனவுரைத்திட்டானால். (92)

காந்தர்ப்பமணமியற்றல் காவலர்கன்னியர்க்கே
யாந் * தற்பமாகுமின்னேயன்னமேயிம்மணத்தை
வேந்தைக்கேட்டிடுதலுண்டோவிரைவினிலணைவையென்றே
சார்ந்தாற்றுமயக்கினைத்தையலுஞ்சரசமுற்றாள். (93)

துரிதத்திலிருவோரைத்தோகையைவிமானத்தேற்றிச்
சரத்தைத்துய்ப்பதற்குச்சொல்லுமுன்செல்லுமெல்லை
விரதத்திற்சந்திசெய்துமீள்வேதநிதிதான்கண்டு
சரதத்தையிட்டுச்செல்லேனில்லெனத்தடுத்தானம்மா. (94)

புகலுறுஞானிறலே போமானநிற்றலோடு
மிகலுறுமியக்கர்வேந்தனிருக்குவேதியனைநோக்கி
நகிலுறுகொடியன்றனைநான்கொண்டிங்கேகும்போது
மிகலுறநிற்கச்செய்தகருமமென்விளம்புகென்றான். (95)

வேந்தர்தம்பொருளைச்சோரர்விருப்பமுற்றுங்குவெளவின்
மாந்தர்கண்டிடினேவாளாவிடுவரோமண்ணின்மீது
சாந்தணிகுவவுக்கொங்கைத்தையலைக்கரந்துகொண்டு
போந்ததிற்றடுத்தேனென்றுபூசுரன்புகன்றிட்டானால். (96)

காவிநேர்விழியினளைக் கரவடனாகச்சொந்தத்
தேவியாக்குறவேயின்றன்றிருக்கினிற்செல்லலுற்ற

---

* தற்பம்—வலிமை.

பாவிநீயாதலாலிப்பாவையைவிடுகவன்றன்
றாவியைவிடுகவென்றான்மந்திரமறிந்தவையன். (97)

சாபத்தைப்புரியவல்லன் சதுர்மறைமந்திரத்தா
லாயத்தைப்புரியவல்லனங்கணுமணிக்காகத்தன்
கோபத்தைப்புரிந்தனன்றன்செல்லாவணஞ்சாயைகொண்டே
* யூபத்தாற்பிணித்தான்யாரையிவற்கிணையுரைக்கப்பாற்றே. ()

சாயையைப்பிணித்தலோடுந் தடைபடுமியக்கர்மன்னன்
வேயிருந்தோளினண்மேல் விழைவினிற்செய்தானென்று
மாயையால்மன்னன்பெண்போல்வனப்புமிக்குற்றாளாகிப்
பேயையுய்த்திடுவதென்னவுய்த்தனன்பிரட்டில்வல்லான். (99)

ஆயிரபானுகோடியுதயமாமாறுபொலச்
சேயிழைதானும்வேதநிதிமுனஞ்சேரலோடு
மாயையென்றறியான்வேந்தன்மகளெனப்பிணித்திருந்த
சாயையைவிடுத்தானன்றன்போயினன்¶சர்ப்பவென்றே. (100)

அம்மகாவடிவின்வந்தவங்கணையருகிலுற்றுப்
பொம்மைசேர்முலைநேடும்பூசரன்மடியிற்புக்குக்
கைமலையொன்றுமத்தக்கைமலையொடுங்கலக்க
மம்மலையடைதல்போலத்தழுவியேமருவினாளால். (101)

தனித்துறல்சமயநானேதழுவுறல்விசேடஞ்சார்ந்து
கனித்துவர்வாய்த்தேனுண்டுகலைநெகிழ்த்திடல்நிர்வாண
மெனத்திகழுபதேசத்தையியற்றிடும்யானேயீயின்
மனத்தினிற்கைப்போகொள்ளுவாயெனமகிழ்ந்துரைக்கும். ()

வாரிணைக்கிழித்தமேருமலையெனுந்தனத்தைமார்பிற்
சேரணையென்றபோதுஞ்செங்குமுதத்தேனூட்டிப்
பாணினியென்றன்லீலைப்பகுப்பெனப்பகர்ந்திட்டாலு
நாரியைக்கூற்றுவெண்ணிநண்ணிடவஞ்சினானால். (103)

---

* யூபம்—ஸ்தம்பனமந்திரம்.
¶ சர்ப்ப—சீக்கிரம்.

வேறு.

வள்ளற்செங்கோன்மன்னவனீன்றமகளானாள்
பிள்ளைத்தன்மை யிழைத்தாணம்மேற்பிழையன்றே
கள்ளர்க்கேகடனங்கடனலவென்றேகையாற்
றள்ளத்தள்ளத்திராண்மடியிற்றங்குற்றாள். (104)

அன்றியுமின்றிவளுக்கொருமணமீண்டமைவாலே
துன்றுகருங்குழலாள்செயல்கண்டுசொனுமுன்னே
கொன்றிடுவானெனவச்சமுளத்திற்கொண்டானாய்
சென்றிடுவாயென்றெள்ளித்தள்ளல்செய்தானே. (105)

யாரேனுந்தானாகவிதைக்கண்டறிவுற்றால்
* கீரேனுநம்மூரேனுந்தான்கேட்பானே
வாரேனென்றாலெனைவிடுவானோமாய்ப்பானால்
சேரேன்சேரேனென்றுயிரஞ்சிச்செப்புற்றான். (106)

என்னவெருண்டும்மகலானதியருகிலையுற்ற
கன்னியினோடுறுவாதமியற்றிடுகாலையினில்
வன்னியினேவலர்காவியும்வாவியுமருவுற்றார்
கன்னியைநாடுறுமன்னவனேரிற்கண்டானே. (107)

கண்டிடவவன்மடிமிசையினிருந்தகருங்கூந்தல்
பண்டருசொல்லியையத்திருநதியின்பாறள்ள
விண்டவன்போலவண்வீழ்ந்துயிர் வியந்துமிதந்தனளால்
பெண்டிரின்மாயமதார்சொலவல்லார்பேசீரே. (108)

என்னைச்சேர்வாயென்னிற்சேராதிவணுற்று
யுன்னைக்கொல்லச்சொல்லுவன்யான்பாருங்கென்றே
மின்னுக்கொப்பாள்வஞ்சனையன்னான்மிசைவைத்தே
கன்னக்கோலைத்தந்தெனவீய்ந்துகழிந்தாளே. (109)

கண்டுதளர்ந்துமனத்தொடுசோகங்கரையின்றிக்
கொண்டுளயர்ந்தொன்றுந் தெரியானாய்க்கோவேந்தன்
மண்டனில்வீழ்ந்துபுரண்டுமயங்குபுமானத்தீ
யண்டினனாபிங்குழவான்வீழுவனழுவானால். (110)

* கீர் - சொல்.

மறந்தனனாகியிருந்திடுமன்னன்மதிமாழ்கி
யிறந்தவனானன்பின்னரிருந்ததெவன்கொல்லோ
பிறந்தனனென்றுமெழுந்தனனாகிப்பெயர்கில்லா
னறந்தனையெள்ளியிதென்செய்தவாறென்றலமந்தான். ([illegible])

கொல்வேனென்றேதங்கையின்வாளைக்கொட்புற்றே
பல்வாய்மென்றேகட்கனல்சிந்தப்பார்த்தானால்
நெல்வாலளவுமறுப்புண்டுயிர்விடினேமிக்குள்
சொல்வாரந்தணர்தம்பழியாமெனச்சோர்வுற்றான். (112)

தேசனருந்தவமாமகளென்றேதேறுமல்
மோசமிகப்புரிவுற்றதுமன்றியுமொய்நீரி
னாசுறுத்தினைமறையவர்நைந்திலவொன்றேமுன்
கோசிகனட்சத்திரனெனவுய்த்தான்கொடியோனே. (113

கோவமிகுந்தவன்மந்திரிமாரைக்கூவுற்றே
தேவனெனப்படுவானிவன்வந்தித்திரையாற்றி
லாவியிழக்கத்தள்ளினனாதலினாலன்ன
பாவியையானென்செய்குவமென்னப்பகர்வுற்றான். (114)

நூலாராயுமன்னவர்யாருநுவலுற்றார்
வேலாமென்னுங்கண்மடமானும்விளிவுற்றா
ளேலாவிவனைக்கொன்றிடினுமிங்கென்செய்வான்
வாலாயத்தின்வந்திடுமோநம்மகவென்பார். (115)

பாலாநூறுகொன்றிடிலெய்தும்பழியெய்து
மேலாமோர்வேதியனைக்கோறல்வேதியர்நூ
றாலாகியபழியோர்மடமாதுக்கதினூறு
கூலாஞ்சிசுவைக்கொல்பழியென்னச்சொல்வாரே. (116)

வேறு.

ஈரமின்றியிவன்செய்தவாறெலாஞ்
சீரின்செல்வப்பெருக்கின்செருக்கெனாக்
காரம்வெளவிப்பலவுநங்கைக்கொண்டிவ்
வூரைவிட்டுத்துரத்தலுளமென்றார். (117)

தாயினோடிவன்றந்தைகிளையையிந்
நாயினோடுபின்செல்லநடத்துற

வேயிருமெனிலெவ்வெவர்கேட்பினுந்
தூயதாமனுநூலெனச்சொல்வரே. (118)

மன்னுகின்றவமைச்சர்வழங்கலு
மன்னதன்மையினையிவ்வரசனுஞ்
சொன்னவண்ணந்துரத்திடச்சொற்றனன்
றன்னவேதநிதியினைத்தண்டித்தே. (119)

மற்றுமுள்ளானமன்னவர்மன்னரைக்
கற்றகேள்விக்கவிஞரைக்காவல
னுற்றமைந்தமுகமனுரையினை
தெற்றெனச்செலவுய்த்தனன்செல்லவே. (120)

புராட*முற்றுச்செல்லுற்றனும்பூசரன்
கிராட||மாகியதேசங்கெழுமியே
சுராட§மேவித்தம்மிட்டத்தர்சூழுற
விராடதேசத்தைமேவினரென்பவே. (121)

வேறு.

ஒருவர்க்காயிருவர்க்காவுண்ணுறுமுணவாதிகொண்டு
தெருவர்க்கம்வருதல்போற்றம்மீட்டத்தார்சேர்ந்துசூழ
வருவர்க்கத்தாருக்கெல்லாம்வேண்டுறும்வகையிரந்தே
யொருவர்க்கத்துறையுநாளிலொற்கமேவுற்றாரன்றே. (122)

அந்நீர்மைதன்னாலெங்குந்திரிந்திரந்தமருநாளிற்
பன்னீராண்டொற்கமேவப்பரிபவமிகவுண்டாகித்
தன்னீர்மைகுறைந்துடுத்தக்கலையின்றித்தாமருந்த
வெந்நீர்மையனமுமின்றி யியங்கியூர்தொறுமிரந்தார். (123)

ஒருவர்பாலாமமற்றிங்கொருவர்பாலுப்பேயாயின்
கிருவர்பாலாம்பிரங்கொண்டெண்மர்பால்கறிகாயாதித்
தருவர்பால்மற்றுமுண்டத்தரத்தனகொண்டுண்பாராய்
வருவர்களொன்றுமேல்கீழிலையெனவாங்கியுற்றார். (124)

* புராடம்—சஞ்சாரம்.
|| கிராடம்—ஓர் தேசம்.
§ சுராடம்—சூரியஉஷ்ணம்.

வேறு.

ஒன்றென்றேயொருவனுண்டேற் கின்றுருரிக்கக்கற்று
ளார், பொன்றென்றேயொருவனுண்டேல் முழுதுங்கவரும்
புத்தியார், மூன்றாயிரம்பின்னாயிரங்கை மூளைக்காக்குதற்கே
துயருறுவார், பன்னாயிரம்விடிரந்துறும்பாத்திரம்போலெங்கும்
பாப்பாரால். (125)

பல்லெலாம்விளங்கக்காட்டிப் பரிபவம் வந்தனங்கூட்டிச்
சொல்லெலாஞ்சொல்விநாட்டித் துணைக்கரம்விரித்துக்காட்டி
நெல்லெலாம்பலர்க்குந்தீட்டி நேமமென்பதனைவிட்டி
யில்லெலாமிரத்தறீங்கென்றிழிவைக்காட்டினர்பாராட்டி. (126)

கொடியதுபார்க்குங்காலைக் கூறிபவெவற்றினுக்கு
மிடியதேகொடியதாகுமெய்ந்நோயைக்கொடியதென்னிற்
படியினில்யார்நோயாரோவவாளவன்றிப்பார்க்கில்
குடிமுழுதினுநோய்சேராதாதலாலெதுவோகுற்றம். (127)

வடிவொடுதனங்கெடுக்குமனமொடுகுணங்கெடுக்குங்
குடியொடுகுலங்கெடுக்குங்கொற்றத்தோடமர்கெடுக்குந்
துடியொடுகல்விமாதர் சுகமொடுங்கெடுக்குமாற்றல்
மிடியதைவிடவுந்தீங்கிங்குண்டுகொல்விளம்புமாறே. (128)

நேற்றுநாகரின்கண்ணின்றிலையெனநேடிச்சென்றுஞ்
சோற்றினுள்ளாவியற்றுச் சுகமற்றுத்துணியுமற்றே
யேற்றிடும்போதும்பிச்சைகிடைக்காதென்றியம்புநல்லோர்
மாற்றம்பொய்யாமோவென்னவருந்தினர்மறையோரெல்லாம்.

பக்கணந்தோறுமேவிப்பாடிகள்டோறுஞ்சென்றும்
முக்கணெம்பெருமானுக்கத்தருளின்றி முதிர்ந்ததுன்பந்
தக்கணத்தக்கணத்துக் காவனவயின்றயின்றே
நெக்கன்றேயழற்றுரென்செய்வார்தேய்ந்தாரம்மா. (130)

வையைநாட்டுறையுமன்னன்மகிழ்தண்ணீர்ப்பந்தல்வைத்துக்
கையைக்காட்டுற்றபோதுங் காவிரிநாடன்சேனை
யுய்யத்தான்மனமுமுண்டோ வொருங்கவிந்தார்கள்போல
வையையோவன்னமின்றித்தன்னைத்தாயவிந்தாரம்மா. (131)

ஒருவர்முன்னாளில்வீய வொருவர்பின்னாளில்வீய
விருவரோடன்னாரில்லார் மகவனமிலாதிறந்தார்
றிருவருகின்றவீமகவியினாலங்கதேச
னொருவினன்போலப் பின்னோர்தம்மையுமொருவினால். ()

கிரியைகடமைநடத்தக் கிடைப்பருந்துயராகி
யுரியதினியற்றித்தன்காதலியொடுமூளையொடும்போம்
புரியதினில்லாள்வீயப் புகல்குழவிகளினோடு
பெரியதுன்பத்தனாகி முனூன்றம்பெயர்வுற்றனால். (133)

மழலைவாய்க்குழவிதானுங்குதலைவாய்மைந்தர்தாமு
மழலைவாரித்தன்னெஞ்சுள்ளகத்தினிற்பெய்தவிந்தார்
கழலைவாய்ந்திடுநோய்முற்றிக்கலங்கியேயனாரடைந்தா
னழலைவாய்மெழுநேபோலுள்ளமுருகினனயர்ந்தானம்மா. ()

செய்வனகிரிகைசெய்யச்செப்பருந்துயரமுற்றே
னைவனவெல்லாங்கேட்டுமனநலிவுடையனாகி
மைவனசத்திலைக்கண் வனமெனத்தத்தளித்துப்
பெய்வனவனைகபுரிந்தே பெருந்துயர்க்கடலுள்ளாழ்ந்தான். (135)

வீராவுறுமன்னமின்றிவிக்கல்மிக்குடையராகித்
தூரதலமெங்குற்றாலுந்தன்வினைதுடரவெய்த்தே
யாரவணையமலராமகணையினாலனைத்துமற்ற
வீராவணன்போலயாவர்தம்மையுமிழந்தானன்றே. (136)

வேறு.

தவதூழனைபுரிந்தே வந்துசனித்தேதரைமீதி
லவபூஷணமாயேயிவனந்தோகொடிதந்தோ
நவபாழணமயின்றார்மிகநலிந்தாரெனநலிந்தான்
இவதூழனையதனாலுறுநவியாவையுந்தெரிந்தான். (137)

அவபூஷணம்புரிந்தோன்படுதுயர்கேட்டிறுமந்தோ
நவபாஷணமுதல்யாவையுநைந்தேயுருகிடுமால்
தவதூஷணம்புரிந்தேதிரிந்துழறுபிணுந்தாழ்வாய்
இவதூஷணஞ்செய்தான்படுந்தீங்கென்னைசெப்புவதே. (138)

செத்தார்க்கணுவேனுந்துயர்சேராதெனத்தெரிந்தே
யித்தாரணிதனில்யானிருந்தென்செய்வனென்றெண்ணா
முத்தாநதிதனில்வீழ்ந்துயிர்முடிவேனெனுமளவிற்
றத்தாத்திரையப்பேர்த்தவத்தலைவன்றனைக்கண்டான். (139)

அயனாரொடுமரியாரொடுமரனார்தமைத்தவத்தில்
வியனாநிலமதிற்புத்திரரெனவும்மெனவிழைந்த
சுயனாமெனமகிழத்திரிமனையாமனசூயைக்
கியைந்தாரணனிவனாமென வெண்ணத்தினியைந்தான். (140)

கருவாசவினாற்றொலதுகடையாமெனக்கருதாத்
திருவாசகஞ்சொலிச்சந்திகள்செய்போதருக்கியத்திற்
றுருவாசமதென்றேசொலியரனார்வருதோற்றத்
துருவாசமுனிச்சோதரனென்றேவருதொல்லோன். (141)

மலராளும்வெண்மலராளும்மலையாளுமகிழ்ந்தே
யலராயுறவேநாரதர்க்கமைவாயக்கடலை
மலராமெனச்சொலவேகவைத்தருள்புண்ணியவதியா
முலாரப்புகழனசூயைமுன்னுதவுந்திருப்புதல்வன். (142)

மாதேவியெனச்சொற்றிடுமாதின்மகற்கண்டு
மூதேவியின்மகனாமடியேனென்றுமொழிந்தே
தீதேவடிவாய்வந்தவனன்னானடிசேர்ந்த
போதேவிழுந்துருண்டான்மனமருண்டான்மிகப்புரண்டான். ()

கண்ணாயிரமுற்றான்முதல்யாருமிவற்காணின்
மண்ணாயிரமுறினுமிறுமாப்புற்றிடுவாரோ
வண்ணாவிரங்குற்றேயெனக்கேதேனுமிங்கருளென்
றெண்ணாயிரம்வணக்கம்புரிந்திளைத்தான்மிகக்களைத்தான். (144)

முனிபுங்கவன்றிருநீறுருத்திராக்கமுமியங்கும்
பனிவார்சடைமுடிமாதவப்பண்பன்முகம்பார்த்தே,
சனியார்தொடர்தரவந்தவனெவனின்சரிதத்தைக்
கனிவாயுரைத்திடுவாயெனவினவுற்றிடக்கரைவான். (145)

மாயாபுரிதனில்வந்திடு மாயாப்பொறியுடையேன்
வாயாலழிவுறுகேணியின் வாயாலழிவுற்றேன்

வேயார்தடந்தோள்மெல்லியடன்சொல்லினைபிதாதான்
பேயாயினள்மடிந்தாளதிற்பிழையுற்றனனென்றான். (146)

வேறு.

மறையவர்குலத்துவேதநிதியெனவந்துளேன்யான்
முறைபெறுதம்பிமார்கள் பதின்மரோடுதித்துமொய்த்தே
னிறைமகவுடையேம்யா மெக்காலமுநியமமுற்றேங்
குறையதொன்றின்றியிக்கக்குறுகலமண்டந்தேமைய. (147)

புரவலனிராசசூடாமணிதரும்புதல்விதன்னைக்
கரவடமாயியக்கன் கவர்ந்துகொண்டேகுங்காலைத்
தருமமன்றெனவேயெண்ணிச் சபித்திடலுற்றேனென்றான்
மருமலரோதியாளைமண்ணினிட்டுவிடுத்துச்சென்றான். (148)

தடித்தெனுமருங்குலாளென்மருங்கினிற்சார்தலோடு
முடித்தலைநிருபனன்றன்மனத்தினைமுன்னிநின்றான்
படித்தலைத்தேடியுய்யானத்திடைப்படர்ந்தானன்றிற்
குடித்தனங்கெடுக்கக்குப்புற்றுயிர்விட்டுக்கலைந்தாளன்றே. ()

தாரைவிட்டமுதத்தாரைத்தலைவனன்றனைக்கண்டே
மேரைவிட்டொழுதரும்பானுவின்வெய்யிலால்வெம்
பாரைவிட்டொருதகீடம் படுந்துயமனைப்படுத்தி
யூரைவிட்டகலச்செய்தானொருவினன்குடும்பத்தோடே. (150)

கேட்டினையுற்றேற்கெங்குங்கெழுமுற்றேயுழன்றேம்பற்ப
னாட்டினையுற்றேன்வந்தோர் நாளொன்றுக்கொருவராக
வீட்டினையுற்றாரொற்கத்தழுங்குதீவினையேன்பட்ட
பாட்டினைச்சொல்லவென்றால்யாவரேபகரப்பாலார். (151)

ஆதலாலென்செய்கேனென்றழுங்கியிவ்வாற்றுண்பேவி
வீதலேசுகமென்றெண்ணி வீழ்ந்துயிர்வீயுங்காலை
யோதலாலடங்காவாய்மை யுத்தமாவுன்பதத்தைக்
காதலாற்கண்டேனென்றுக்கரைந்தனன்கரையிலாதான். (152)

கருணையேயுருவாய்வந்தான்கமலநாயகன்றனக்கிங்
கருணனிகரந்தேயியுந்தரபெண்ணியலவ்வந்தோர்க்குத்

தருணம்பார்த்தளித்தலன்றோதயவெனமுதுகுரைதவத்
திருணனிகெடுத்துத்தூய்மையியற்றுவலஞ்சவென்றான். (153)

அவ்வணஞ்செய்யநீரையாசமனித்துவிண்ணைச்
செவ்விதினுத்தரத்திசைமுகநோக்கிநின்று
கவ்வையிற்பரமன்றனைக்கருதியேநீயுமிவ்வா
றிவ்வயினிருவென்றேவியெண்ணினனெண்ணமிக்கான். (154)

ஒளிதுளும்புறுவிடங்கவிமானமொன்றுற்றதங்கண்,
களிதுளும்புறவேநோக்கிலதனிடைக்கலவிக்கேற்ற,
வளிதுளும்புற்றகூந்தலனங்கனுண்மேல்கைபோட்டே
களிகொடத்தாத்திரேயர்தமையருச்சித்தல்கண்டார். (155)

அற்பகலாக்குஞ்சோதி யவிர்மணியமைதலாலே
பொற்பகமுறுவாவிக்கண்பொன்மயக்கமலமெல்லா
மெற்பகமலர்ந்திருப்பவெண்டிசையினுமணப்பக்
கற்பகவிருக்கத்தோடுங்காளையனிருப்பக்கண்டார். (156)

அனகவிச்சித்திரப்பொற்குகையிலங்கனையினோடு
கனகவிப்புருடன்கூடிவிளையாடுகவினைப்பெற்றுந்
தினகரனொளிசேர்மாலையெனவொளிசிறந்ததானு
கனகமாமலையிற்பல்லசிங்கங்கள்களுலக்கண்டார். (157)

கலவினைச்சடையணிந்துநீறுமணியணிந்து
வலமுழுமழுநுதற்கண்வாழ்வருணீலகண்டங்
குலவுறவரியணைக்கண்கோடிபானுவுக்கொப்பாக
வலகில்பன்னகங்கள்சூடியரசவீற்றிருப்பக்கண்டார். (158)

இருவரும்வணங்கியேத்தி யிருகணீர்த்தாரைபொங்கத்
திருவருளளித்தானைச்சிந்தையுட்சிந்தித்துற்றே
யொருவினர்நெடுந்தூரஞ்சென்றுதகஞ்சூழ்நகரைக்கண்டே
வெருவினர்சலவழிக்கண்ணீணெறிமேவினாரால். (159)

ஆசையினுருவம்வாய்ந்தவண்டமொன்றமையக்கண்டு
பேசருமிறும்பூதெய்திப்பிறழ்நவக்கோளைக்கண்டு
தேசுளவேணியோர்நாப்பணிற்பரசிவனைக்கண்டு
மாசிலாமணியைப்போற்றி மகிழ்ந்தவணகன்றான்றே. (160)

மற்றுமோரண்டம்போனாரவணுறுமகிமையாவுஞ்
சுற்றினர்கண்ணிணோக்கியுவந்தனர் துறந்துசென்றுந்
துற்றிடும்பலவண்டங்கடொடர்ந்தனர்நோக்கியப்பால்
வெற்றிடங்கண்டிருட்டுக்குகையினுண்மேவிச்சென்றார். (161)

வேறு.

ஆவ்விடைநான்முகரனேகருக்கெலா
மெவ்விடையினுஞ்சழக்கேற்றதன்மையா
லிவ்விடைதலைந்தொருதொழுவத்திட்டெனா
நொவ்விடவிலங்கிட்டசெயலைநோக்கினார். (162)

ஆயிரந்தலையினீராயிரம்விழி
யாயிரங்கரத்தொடுமாயிரப்பத
மாயிரஞ்சூலமுமாழியுங்கொண்டே
யாயிரமகிமையையங்குகண்டனர். (163)

அருகினிலுமையவளஷ்டசித்திகண்
மருவுறவெண்குடைவயங்கிநிற்றிட
வுரையறுவிண்ணவரொருங்குதோத்திரம்
பரவுறலுற்றதைப்பார்த்திறைஞ்சினார். (164)

விதிக்குறுமிவையெலாம்யோகமேட்டிமை
றதிக்குறக்கண்டனர்விழித்துநோக்கலுங்
வதிக்கண்யாதொன்றுமேகண்டிடார்முத்தா
நதிக்கரைநின்றவர்நவிறன்மேயினார். (165)

மாலெனவருதத்தாத்திரயர்மாமுகஞ்
சாலவேநோக்கியித்தகமையாவுமே
யேலுறும்வகையெனக்கியம்புகென்னவே
நூலெலாமறிந்தவனுவறலுற்றனன். (166)

செயலுறுமந்தமாருதங்கொள்சீர்த்தரு
பொயிலறமியற்றியபுண்ணியத்தர்வாழ்
வியலிடமிரசிதவொளிவிளங்கிய
கயிலையங்கிரியெனக்கருதலாகுமால். (167)

கம்பொடுபெருதிகொள்கரத்தனுடைய
னும்பர்கள்வருணருக்குத்தரஞ்சொலு
நம்பன்பொற்பிரம்பொங்நந்திமேவிடஞ்
சம்புவினவையெனச்சாற்றுவாமரோ. (168)

தவமுறுசனகாதியர்கடம்மொடு
முவமையிலுமைதுதி யோய்விலாதுற
நவகடந்தோறுமே நண்ணியுற்றிடு
சிவபெருமானெனச் சிந்தைசெய்வையால். (169)

அக்குகையானதங்கரன்றன்மாயையாம்
பக்கமேய்சலமெலாம்பகர்பிர்மாண்டமா
நெக்குறுவெளுப்பொடுசிவப்புநீலமு
முக்குணநிறமெனமுன்னிநிற்பையால் (170)

சென்றுறுமுக்குணாதீதமாய்ப்பர
மொன்றும்யோகியரெலாமுணரவுற்றிடுந்
துன்றுகாமாதியகுணங்கடோற்றுறா
தென்றுமேயிப்பிறப்பில்லையென்பரால் (171)

அஷ்டமாசித்திகள்பூசையாற்றிட
மெட்டுடன்ருத்திரமேத்தவேதங்க
ளெட்டுடனிரண்டெனவியங்கிநின்றது
விட்டிலாப்பூரணவெளியதாகுமால். (172)

இவையெலாந்தவத்தினிவியைவகாணுஞ்
சிவையொடுமானுறைகயிலைசேர்ந்திடிற்
பவமறுமிவண்வரற்பாலதில்லையால்
சிவவபாதிகட்கில்லைசேர்தலே. (173)

சூட்டியநிலவனைத்தூடணித்திடில்
கேட்டவர்தமக்குமேகிட்டுமென்றிடில்
வீட்டிமையாச்சொன்னேன்றனைவிடுக்குமோ
நாட்டுறிலெய்துறனரகமுண்மையே. (174)

மஞ்சுறுசைவத்தைமருவுறுமலே
விஞ்சியதெனமறுமதம்விரும்புற

றஞ்சமாயுற்றிடுமமுதந்தன்னிலே
நஞ்சினையயின்றிடுஞாயமொக்குமால். (175)

பத்தியுமுத்தியும்பயனுமுற்றிடமா
சித்தியுந்தருஞ்சிவமதந்திறம்பியே
நத்திமற்றொருமதநாடின்மாமறை
சத்தியநாசமென்றுண்மைசாற்றுமால். (176)

தின்மையும்பாவமுஞ்சிதைந்துதேயுமே
சென்மமுமரணமுமின்றித்தீருமே
தொன்மைசால்சிவகதைதொழுதுகேட்டவர்
நன்மையுமுத்தியுநண்ணுமுண்மையே. (177)

நோவறுவாழ்க்கையுநொடியில்செல்வமுந்
தாவறுமாயுளுந்தகுஞ்சிறப்புமே
மேவுறுஞ்சிவகதைவிளம்பக்கேட்டவர்
தேவராய்சிவகதிசேர்ந்துவாழ்வரால். (178)

சிவகதைகேட்டவர்க்கடிமைதேர்ந்துழி
னவிர்மலரயனுறுபதமுமாழிவாய்
குவலயநாயகன்பதமுங்கூடிப்பின்
சிவனுலகாசராய்த்திகழ்ந்துவாழ்வரால். (179)

நாலெனும்பதவியுநண்ணுவாரென
நூலெலாமுண்மையே நுவலுமாலரோ
பாலமார்விழியினன்பகர்ந்தவன்னமென்
றேலவேமுனியாகியம்பினனரோ. (180)

வேறு.

நீமுன்சத்தியலோகத்தினிகழுறுபதமன்
றேமதத்தனாய்த் தற்பரன்றனையிகழ்ந்தே
கேயுற்றவிப்பிரனெனச்சனித்தெங்குமிகழ்ந்தே
மாமதம்பெறுதீமையால்வருந்தினைமன்னே. (181)

பொறுக்கலாதுயிர்வீய்ந்துறவிந்ததிபோந்தாய்
தறைக்கவென்றுமாமுனிவரன்றனைத்திடச்சமைந்தே
மறுக்கமாமையந்தெளிந்துசென்மாந்திரஞானம்
பிறக்குமாறுநன்கருளெனவிறைஞ்சினன்பிரமன். (182)

தமியனுக்கருளியன்றிடுதவத்தரசேருத்
துவியைநேர்தருமனிதகாத்திரத்தினையொருவி
ரமியனுபயனுபுறநலிவெலாமகற்றித்
தூமியவெவ்வணம்புரிகுவன்சொல்லெனத்தொழுதான். (183)

என்னக்கேட்டலுமிருடியர்க்கிறையவனெண்ணிப்
பொன்னைத்தீயிடையிடுதலும்பொலியுமாபோல
வின்னற்றீயிடையிவன்செருக்கிகந்தனனென்று
வுன்னியாயிடையுவந்தருள்புரிந்திடலுற்றான். (184)

முன்னோர்வேதனுள்ளத்தினின்மயக்கறமுன்னிப்
பொன்னினன்னமாயருமறைபுகன்றவாபோலப்
பின்னரத்தத்தாத்திரயராய்ப்பிறந்துமேயவற்குச்
சொன்னவேழமைநீக்குமின் வழக்கமாந்தொடர்பே. (185)

மாசனைத்துமேநீக்குறவெண்ணுறின்மற்றயின்
வாசனைக்குறுவேள்விகள்தானங்கள்வரம்பில்
யோசனைக்கன்மகாண்டத்திலோதுதலெல்லாம்
பூசனைப்பயனன்றியேபோக்குமோபுகலாய. [186]

சதுட்டயச்சிவசிந்தையெய்தியதெலாந்தணக்க
விதிட்டமென்னவொவ்வோர்தலத்தருச்சனையியைந்தார்
வதிட்டாதியர்வானவர்மலரவனிலிங்கப்
பதிட்டையன்றிவேறிலையெனநூலெலாம்பகரும். [187]

தொடைக்காவணிசிவபெருமான்றனைத்தொழுதா
லிடைக்கலம்புகுந்தவர்க்கருள்புரிபவனன்றிப்
படைக்குமாமலர்ப்பீடத்தின்பழவுருவுனக்குக்
கிடைக்குமோவெனக்கிளத்தினான்வேங்கிடகிரியான். [188]

அன்பினோருக்கேவந்தருள்புரிகுவனல்லால்
வன்பினோருக்கெட்டுணையுமேயருளுறான்மறவன்
முன்புசோழனுக்குதவிச்சேமுத்திரைமுடித்தான்
பின்பிழைத்ததால்மடிவினிற்றுறந்தனன்பெரிதும். [189]

மாதகத்தினிற்போக்குத்தூய்யனைவாளாற்
பேதகப்படுத்தியபெரும்பிழையனென்றிடுமோ

பாதகத்தினைத்தீர்த்திடுபரிவினோனுனக்குச்
சாதகத்தினைச்செயலரிதோமெய்ம்மைதருமால். [190]

பொய்யிராவணமகத்தினைப்புரிபவர்க்கருளு
மையிராவணகண்டன்றான்வாழ்மலையகற்றுங்
கையிராவணன்றனக்குமேயருளியகடவு
ளை*யிராவணஞ்செய்வனோவகற்றுவன்பழியே. [191]

பதியிற்கங்கையேயாதியபடியினும்பரமற்
கதிவியப்பினினந்தனம்வைப்பினுமாதி
விதியினிற்பலவறமெலாம்புரியினுமேலா
மெதியரனருச்சனையலாவிலையிலையிலையே. [192]

எனவியம்பலுமலர்மிசையெழுந்தருளிறைவன்
மனமுவப்புடன்றமியனெத்தலத்தினின்மருவிச்
சினவிடைப்பெருமான்றனைச்சபரியைச்செய்ய
வனகமாந்தலமெவனெனக்கருளென்றனனழிவான். [193]

சித்திராங்கங்கொடென்பழமலைக்குத்தென்மேற்கு
ருத்திராக்கநீறணிந்துபூசித்திடறவனு
மத்திராக்கமாதியபலதருவெலாமமைந்த
பத்திராரணியப்பெயர்த்தலமொன்றுபலிக்கும். [194

கம்பமாநதிகங்கையாதியவெலாங்கலந்து
தம்பவத்தினையொருவமாமகத்தடஞ்சாரு
மும்பருக்குமேயரியபுண்ணியமெலாமுதவுங்
கும்பகோணத்துக்குத்தரக்¶கருபத்திற்குலவும் (195)

தில்லைமாநகர்தனக்குத்தென்மேற்கினிற்றிகழுஞ்
சில்விகாவனத்தினுக்கிருயோசனைசேர்ந்த
தல்லிநாண்மலர்ப்பண்ணவன்றனக்குமவ்வரிக்கு
மெல்லையில்பலவரமெலாந்தருந்தலமியையும். (196)

புள்ளெலாமொருங்கொருபகையின்றியேபொதியுங்
கள்ளெலாமொழுகுறுமலர்காவதங்கமழு

---

* ஐ—அழகு.

¶ கருபம்—திசை.

முள்ளெலாங்கவிக்குலமுமேசுத்தியாயுற்று
*லள்ளெலாமிறைவனைச்சிறப்பதனையாரறைவார். (197)

அங்குமூவராமுனிவரராருந்தவமயர்ந்தார்
சங்குசக்கரமாலயன்காணருந்தாணு
கொங்குயிர்த்தமாமதலைவேணிப்பிரான்குலவத்
தங்குவெள்விடைமேலெழுந்தருளினன்சார்ந்தே. (198)

அன்னந்தேடியவன்னமாமுதல்வனங்கவரை
யென்னவேண்டுநந்தமக்கெனவினாயதற்கிசையப்
பின்னைவேறொன்றும்வேண்டிலம்பிஞ்ஞகாமுத்தி
தன்னைவேண்டினந்தந்தருள்வாயெனத்தகைந்தார். (199)

அனையகேட்டலுமென்னையாளண்ணலங்கருள்வா
னினையதாவத்தின்கண்பதுமாசனனினியென்
றனையவாவியேசபரியைப்புரிந்திடச்சார்வ
னனையவேலையினருளுதுமீண்டெனவறைந்தான். (200)

ஆதலாற்சிவனார்ச்சனையையன்பினியர
நீதலாதலத்திறைவனோர்ந்துற்றதானிகழும்
பூதலாரியபூசனைப்பயன்பெறப்புக்கின்
காதலாலவர்க்குங்கதிவருமெனக்கரைந்தான் (201)

ஆயிடைப்பெரும்புண்ணியத்தலத்தின்சீரமைவை
வாயிடைச்சொலமலரவற்கொண்ணுமோவழங்கப்
போயிடைச்சிவலிங்கத்தின்பதிட்டையைப்புரிந்து
தீயிடைச்செயோமாதிசெய்யென்றருள்செய்தான். (202)

சொல்லெலாஞ்சொலியத்திரிசூலனுந்தோன்றல்
வில்லெலாந்துளும்புமுகயிலைக்குமேவுற்றான்
செல்லெலாமமர்ந்திருப்பிடமெனும்பொழில்சிறந்த
மல்லெலாம்பெறுபத்திராரணியநேர்மகிழ்வான். (203)

பானுரைச்சிறையன்னமவ்வனத்துறுபான்மை
சூனந்தீமழுக்கரப்பெருமானடிதொழுதே

---

* அள்ளு—காது.

தீனநீங்கியன்றனருளினிற்சிறந்தயனு
யானபின்மகிழ்ந்தேறிடவமர்வபோலமரும். (204)

வேறு.

சனமியங்குருத்தூய்மைசேர்தாவத்தைச்சாரா
முனமுவப்பொடுகண்டுகண்டவண்வர்தூமருவித்
தினகரத்தொளிர் மவுலிகொள்மூவரைத்தேர்ந்தே
யனகமாமலரடியிணையிறைஞ்சியாங்கமர்ந்தான். (205)

கண்டமாதவரனைவருங்கமலநாயகனைப்
புண்டரீகமாமலர்முகநோக்கியேபுகல்வார்
துண்டவெண்பிறைசூடினேன்சொற்றிடும்படிக்கே
யண்டினாய்முத்தியளிப்பையென்றகமகிழ்வானார். (206)

அமலநாயகனடியிணைக்கர்ச்சையையாற்றி
மூமலம்வேரறக்களையுறமுயலுறுவேற்கு
விமலமாயதற்குரியனவேண்டலென்னென்று
கமலநாயகனுசாவிடக்களிப்பொடுகரைவார் (207)

வேண்டலுற்றனயாவையும்விளம்பலும்விரைவிற்
*றேண்டலுற்றனன்கவர்தந்துசுபதினந்தேர்ந்து
தோண்டலுற்றனன்கூபமீசானத்திற்றாநீர்
காண்டலுற்றிலனென்செய்வேனெனத்துயர்கண்டான். (208)

பன்னலுற்றன்முனிவர்பாலவருளப்பரிவி
லுன்னலுற்றனுஞ் சிவபெருமானடிக்குருகிப்
பன்னலுற்றிடுவோர்க்கருள்பாலிக்கும்பயன்போல்
கன்னலுற்றதீஞ்சாறெனவுதித்தனள்கங்கை. (209)

அந்தக்கூபநாமங்கங்காதீர்த்தமென்றறைவ
ரிந்தக்கூபந்தானெம்பரனுடுதற்கிசையச்
சொந்தக்கூபமாயாக்கியேயென்றுந்தாந்தோய
வந்தக்கீட்டிசைத்தன்பெயர்த்தடமொன்றுவகுத்தான். (210)

---

* தேண்டல்—தேடுதல்.

### வேறு.

மல்லிகைமுல்லைவெட்சிமருவிருவாட்சிகொன்றை
நெல்லிமந்தாரைதும்பைநெய்தல்வெண்ணெய்தனீல
மல்லியங்கமலஞ்சாதியலரிகொக்கிறகோட்டந்தி
மல்லிகைவெள்ளெருக்குப்பித்திகைமலரெடுத்தும். (211)

வன்னிமாமருநாரந்தஞ்சம்பீரம்வுளர்கோங்கோடு
பன்னிரோட்டில்படாமகிழொடுபாடலத்தோ
டுன்னுமாதுளையசோகுகூவிளங்கிளுவையோங்கு
கொன்னிபனறவமாத்திகுரவுபத்திரமுங்கொய்து (212)

### வேறு.

மறையாதிக்கலைகளெலாமுணர்வேதநிதியனுள்கிவாவியின்
கண், முறையாகமுழ்குபுநீறணியக்கமாலையைமெய்ம்முழுதும்
வேய்ந்து, பிறையாருஞ்சடைமோலிப்பெருமானையுள்ளன்பிற்
பேணியுள்ள, நிறைகாயத்திரிசெபித்தே சந்தியா வந்தனையை
நிரப்பியங்ஙன். (213)

ஆகமத்தின்விரிவையெலாமம்மூவர்முறைகாட்டவலரோன்
றுனு, நாகமுறுமியங்கவிப்பநன்மலர்தூய்விண்ணோர்கணடித்து
திற்பப், பாகமுறுநன்னலஞ்சேரோரையினிற்சிவலிங்கப்பதிட்
டைசெய்தே, யேகமுறுநாயகற்குத்தாகமுறும்படிச்சபரியய
ற்றலுற்றான். (214)

நற்றயிலமானைந்தையமுதமொடுநறுநெய்பாறதிதேனன்கு
முற்றியகன்னலையுடைத்துக்கொள்சாறு பலவகையின்மொய்த்
தசாறு, தெற்றியசெவ்விளநீர்மாப்பொடிவகைகள்பளிதமண
ஞ்செறிந்தசாந்தஞ், சொற்றிடுமந்திரம்பூரித்திடுதபனயீனைமு
றையேதாயோற்காட்டி. (215)

கனிச்செவ்வாயுமைகுயமுங்கரவளையும் பட்டவுடன்றழும்
புகண்ட, வனிச்சம்பூவினுமென்மையமைந்த திருமேனிநலிவ
டையாவண்ணம், பனிச்சிற்றுடையினீவிப்பத்திரக்கோசிகமன்
றிப்பாய்மாவின்றே, வினிச்செல்லாதென்னவுடீஇ வெண்ணீற்
றோடக்கமணியியைவித்திட்டான். (216)

அரவெனவேவையயமுறத்தொடைகளாப்பிலவணிந்தேய ரிசனஞ்சே, ருரைபெறுமக்கதையினொடுசாந்தத்தின்றிலகநு தலொளிரச்செய்தே, பரவலுறுமிகுமீரெட்டுபசார மகிமைக ளைப்பரிவினாற்றிப், புரையறுநெஞ்சினனாகிச்சகலந்திரத்தாலர் ச்சைதனைப்புரிந்திட்டானால். (217)

மணியிலதர்ச்சையையாற்றின்மகவிலாதிருப்பரெனுமாற் றமுன்னிக், கணியிலதாய்க்கணீரென்னுமொழிமணியாட்டுபுவி வேதனத்தைக்கண்டு, பிணியிலதென்றேபுரியுந்தூபதீபங்களெ லாம்பிறங்கச்செய்தே; நாணியிலனாய்த்தனையறியாப்பரவசத்த னாய்வீழ்ந்துதுதிக்கலுற்றான். (218)

இம்முறையாற்பணிந்துருகியிருதாரைதளும்பிவிழித்தாரை யென்ன, மெய்ம்முறையாற்கம்பித்துப்புளகத்தென்பனைத்து நெக்குநெக்காய்மேவ; மெய்ம்மைமிகுமன்பாறாய்வெள்ளமாய்ப் பெருக்கெடுப்பவிம்மிவிம்மி, யைம்முறையிந்தியமெல்லாமொரு முறையென்றிடப்பழிச்சுமமைவினாற்றான். (219)

வேறு.

ஆரணத்துரியாய்போற்றி யதீதமாந்துரியாய்போற்றி
யேரணவிரியாய்போற்றி யென்னளவிரியாய்போற்றி
காரணப்பரியாய்போற்றி காதனைப்பரியாய்போற்றி
மாரணந்தெரியாய்போற்றி மலர்க்கரத்தெரியாய்போற்றி. ()

மாமலர்ப்பாதாபோற்றி மனந்திரும்பாதாபோற்றி
ஓமறைத்தாதாபோற்றி யுவந்தருள்தாதாபோற்றி
பூமிசைநாதாபோற்றி புகழ்ந்திடநாதாபோற்றி
யேமமார்நீதாபோற்றி யெனக்கருணீதாபோற்றி. (221)

கங்கைசேர்முடியாய்போற்றி கடினர்க்குமுடியாய்போற்றி
துங்கநாற்படியாய்போற்றி துகளிற்படியாய்போற்றி
பங்கயவடியாய்போற்றி பண்பிறைவடியாய்போற்றி
வெங்கயமடியாய்போற்றி விடமுண்டமடியாய்போற்றி (222)

எண்ணியகருமமெல்லாமிமைப்பினின்முற்றுவிக்கும்
புண்ணியமுதல்வனென்றேபுகலுறுமறைகளென்றுன்

கண்ணியம்புகல்வேன்மற்றோர்நீகண்டகதியாதென்றுற்
றிண்ணியநாதாவென்னேசெப்புவன்றிகைக்கின்றேனால். (223)

உருத்திராஞ்சமகத்தோடுபுருஷதீர்த்தத்தோடுற்ற
திருத்தச்சீர்சூக்தமாதிமுறைமையைச்செவ்வித்தாக
நிருத்தந்தான்கரதாளத்தோடாடிநன்னியமமாக
வருத்தியின்மூன்றுதிங்கள்சபரியையாற்றினானால். (224)

எனுமுறையிவ்வண்ணத்தினிண்டையாதனனியற்ற
மனமொழிகடந்தவுண்மையறிவெனும்வடிவத்தெங்கோன்
மனனுருவிளங்கக்கைம்மான்மழுவொடுசதுர்ப்புயத்தா
னனகமாம்விடைமேற்றோன்றியருளினன்காட்சிதன்னை. (225)

கருணையேவடிவமானகண்ணுதற்பிரானைக்கண்டே
யிருணிலையகன்றுதன்னைமறந்தவனாகியின்பப்
பொருணிலைதன்னைக்கண்ணினுண்பவன்போலநோக்கித்
தருணமீதருள்வாயென்னத்தண்டெனச்சரண்புக்கானே. (226)

கையினாலெடுத்தலோங்கமலனான்முகம்படைத்து
மையமர்கண்ணிசாவித்திரிவாணிமருங்குநிற்பத்
தெய்வநாயகன்றனைப்படியணைந்திகழ்ந்துநிற்பத்
துய்யமால்வலாரிவிண்ணோர்யாவருஞ்சூழநின்றான். (227)

தேவர்கடேவன்றன்னைத்திருமறுமார்பனேத்திப்
பாவனாதீதமெய்ம்மைப்பரஞ்சுடர்ப்பகவபோற்றி
பூவுறைதிசைமுகத்தான்பொருந்துநின்மாயைதுய்த்தற்
காவனோதிருவடிக்கேயடைக்கலமருள்வையென்றான். (228)

நீனிறமேனிமாயோனிகழ்த்தியமாற்றங்கேட்டுப்
பானிறமேனியெம்மான்பகருவான்பதுமன்முன்போற்
சேனிறக்கண்ணிவாணியோடுஞ்சத்தியலோகத்தி
னானிறம்படைக்கவென்றேநுவன்றினுநுவல்வதானான். (229)

தருமநின்னுலகுதன்னிற்றோற்றுறச்சூழலுற்ற
பெருமையும்வளனுமெய்தப்பெற்றிடுமிப்பதிக்கிங்
குரிமையினானீயெம்மையுகந்தர்ச்சைபுரிதலாலே
பிரமபுரீசனென்றுபேசுகநாமமென்றான். (230)

ஆதுலர்க்காமமன்னவொருமூட்டியளிப்பாராயின்
மாதுலாத்தலமேயாதிமற்றயதலங்கடம்மில்
போதுலாம்பன்னீராண்டுபொருளளிப்போருக்கெய்துங்
காதலாம்பலன்களிந்தத்தலத்தினிற்காண்கவென்றான். (231)

ஒருபொழுதேனுமின்றீர்த்தம்படிந்துவப்பிற்பூசை
மருவுறவுஞற்றினோர்க்குவாய்ந்திடும்வகைமைகூறி
னிருநிலமதின்கண்டீர்த்தமெங்குமுற்றாடியெட்டுப்
பருவம்பூசித்தோர்க்கெய்தும்பயனொருங்கடையுமன்றே. (232)

கங்கைசூடெம்மான்றானேகருணையின்முகமலர்ந்தே
யிங்குநின்முடிவினந்தாளிணைதொழுதெய்துவாயென்
றங்குறுமுனிமூவர்க்குமடியிணைநீழறந்தே
பெங்கணாயகன்மறைந்தேயிலிங்கத்தினெய்தினான். (233)

மிகக்களிதுளும்பவுள்ளமுவட்டெழவிகங்கமீதே
சகத்தினைப்படைக்கும்வண்ணஞ்சத்தியவுலகஞ்சார்ந்தான்
மகத்தினைப்புரிந்துபெற்றவலாரியும்வானோரேனோர்
தகத்தொழுமுகுந்தன்யாருந்தத்தமதுலகம்புக்கார். (234)

அகண்டபரிபூரணரான சிவபெருமானுக்கு மாமனாராகிய இமாஜலபருவதராஜனென்று ஒருவனுண்டு. அந்த ராஜன்மனைவி மேனாதேவி. அந்த இருவரும் புத்திரரில்லாமல் தவஞ்செய்தபடியால் பார்வதிதேவியார் புத்திரியாக எழுந்தருளினாள். அதை இராஜன்கண்டெடுத்து மேனாதேவி கையிற்கொடுத்தான். அவள் வாங்கினவுடனே பால் மீறிட்டது. அந்தக்குழந்தையை நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்த்தார்கள். வளர்ந்து பருவகாலம் வந்தவுடனே அம்மன் பன்னகசாலையில் பரமசிவனைக்குறித்து தவம்புரிந்தனள். பரமசிவன் பிரமசாரிவடிவமாயெழுந்தருளிப் பார்வதியைநோக்கிப் பெண்ணே! எதைக்குறித்துத் தவஞ்செய்கிறாயென்றார். அம்மன் சொல்ல நாணமடைந்து தோழிமாரைச் சொல்லும்படிச் சாடை காட்டினாள். அத்தோழிமார் பரமசிவனைக்குறித்து விவாகஞ்செய்துகொள்ளும்பொருட்டுத்தவஞ்செய்கிறாளென்றார். அவர் அடாடா பரமசிவனைக்குறித்துத்தவஞ்செய்வாரா என்று பலவிதம் இழிவுசொல்லி வாழ்க்கைப்பட ஆசைப்படுவது ஏழைமைமதியென்னென்றார். அவரை யுமையவள் பார்த்து நீர் விபூதி ருத்திராட்சமாலிகாபரணராயிருந்தும் இப்படிச்சொல்வது தகாது. உம்மிடத்திலென்ன பேச்சு இருக்கிறதென்று எழுந்துபோனாள். உடனே சுவ

வர உருவத்தைக் காட்டினார். அம்மன் நாணி நின்றாள். உடனே யுன்
கருத்தை முடிப்போமென்று உத்தரவுசொல்லிச்சென்றார். பின்கைல
யங்கிரிக்குச்சென்று சத்தரிஷிகளை வரவழைத்து இமாசலஞ்சென்று
பெண்பேசிவரும்படி யனுப்பினார். அவர்கள் மலையரசனிடஞ் சென்று
பெண்ணைக்கேட்டார். அவன் மிகுந்த சந்தோஷப்பட்டு கல்யாணத்தி
ற்கு முகூர்த்தம் வைத்தனுப்பினான். ரிஷிகள் கயிலையங்கிரிசென்று
மொழிந்தவுடனே நந்திகேஸ்வரரை வரவழைத்து திருமணப்பத்திரிகை
யைச்சகலருக்கும் அனுப்பத்திருவாய்மலர்ந்தார். அப்படியே திருமணப்
பத்திரிகை அனுப்பியவுடனே சகலரும் வந்தனர். இவர்களோடு சிவ
பெருமான் இமாசலம் எழுந்தருளியவுடனே வடதிசை தாழ்ந்து தென்
றிசையுயர்ந்தது. சகலருந்துயரமடைந்தார். அப்போது அகஸ்தியரை
நோக்கித் தென்றிசைக்குப்போகும்படி ஆக்ஞாபித்தார். அவர் அப்ப
டியே சென்றபிறகு பூமி சமமாயிற்று. உடனே ஐயன்திருமணமுடி
த்துக் கயிலையங்கிரிசென்றார். அங்கெழுந்தருளியபின் அனேகரிஷிக
ளெல்லாம் பலதலங்களைத் தரிசித்தற்கெழுந்தருளியபின் அநேக தலங்க
ளைத்தரிசித்து அகஸ்தியமஹாரிஷியைக்கண்டு மஹாகுருவே அடியோங்
களுக்கெல்லாஞ் சித்தம் வேறுபட்டுப் பிரமைகொண்டவாகயிருக்கின்
றன. யாது காரணமோ தெரியவில்லை அநுக்கிரகிக்கவேண்டுமென்று
கேட்க்க அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளுகின்றனர். நீவிர்கள் அனேக
ஸ்தலங்தெரிசித்துவந்த விடத்தில் சோழதேசத்தில் பத்ராரண்யமென்
னும் க்ஷேத்திரமொன்றுண்டு. அந்த க்ஷேத்திரத்தைத் தரிசியாமல்வந்
தபடியால் இப்படிப் பிரமைகொண்டதென்று விண்ணப்பஞ்செய்ய
அப்படிப்பட்ட ஸ்தலம் எவ்வழியுள்ளது அந்த ஸ்தலத்தின் மேன்மை
யென்ன அனுக்கிரகிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அவரைப்
பார்த்து அந்தஸ்தலமானது மகாமுக்கியமானது, பிரமாவின்சாபந்தீர்
த்தது வென்று திருவுளம்பற்றத்துணிந்தார். கேளும் ரிஷிகளே முன்
னொருகாலத்தில் அனேகரிஷிகளெல்லாம்பிரமலோகம்போய்ச்சேர்ந்தார்
கள். பிரமாவைநோக்கித்தாங்கள் மூவருக்குள்ளே மோட்சாதிகாரியா
ரெனவினவினார். அப்போது பிரமா நான்றானென்றார். ரிஷிகளெல்லாஞ்
சந்தேகப்பட்டு மகாவிஷ்ணுவைக்கேட்டார்கள். அவர் பரமசிவன் மோ
க்ஷாதிகாரி யென்றார். அப்போது பிரமா நான் பூமியைப்படைத்தாலல்
லவோ பின்றானே ரக்ஷித்தலும் மோக்ஷமும உண்டென்னலாம்.
படைக்காவிட்டால் உலகமேது மோக்ஷமேது என்றார். விஷ்ணுவா
னவர் அனேக திருஷ்டாந்திரங்கள் சொல்லியுங்கேட்காமல் திரிமூர்த்
தியைச்சொல்லுமிடத்து என்னை முதன்மையாகப் பிரமா விஷ்ணு ருத்
ரனென்று சொல்லுவதேதவிர வேறல்ல, ஆதலால் நான்றான் முதல்வ
னென்றார். இப்படிச்சொல்லி எலும்பை அணிந்தும், சர்ப்பத்தை அணி
ந்தும், யானைத்தோலை யணிந்தும், பேய்க்கூட்டத்தோடு சுடுகாட்டிலம

ர்ந்தும், அநாசாரம் பொருந்திய தமோகுண முள்ளவரைத் தலைவனென்
றாய். விஷத்தையுண்டும், தலையோட்டிலிரந்துண்டும், பித்தனாய்த்திரி
பவனை எப்படி முதல்வனென்று சொல்லுவது. பழிப்பல்லவா என்று
பிரமா சொல்ல, மஹாவிஷ்ணு சொல்லுகிறார். என்னவெனில் சிராங்
காரர் சுஞ்ஞானிக்கு மகவாகியும், வல்லாளராஜனுக்கு மகவாகியும் எழுந்
தருளிய பரமசிவன் போலல்லாது நான் தசரதற்கு மகவாகி யோனித்த
மும்பு பெற்று பாலனாய்த்தாசரதியானேன். அவர்கள் எம்மிலும் உயர்
ந்தவரோ? நீ படைக்குந்தொழிலில் மயங்கியபோது நீ தெளிவுபெற உன்
னிடத்தில் நெற்றியிற்பிறந்தார். அதினாலே உனக்கு உயர்வுண்டோ?
உன் மயக்கந்தெளியவல்லவா வந்தார். மெஞ்ஞானிக்கும் மகாயோகிக
ட்கும் ஞானோபதேசஞ்செய்கின்ற சற்குருவானவர் அந்தணர்பதியேயெ
ன்று வேதங்கள் முறையிடுவன. தமோகுணத்தின் குணமானது கரு
நிறமென்றும் உதாசீனரூபமென்றும், நித்திரை சோம்பல் மிகவுஞ்சனை
யுடையது தமோகுணமென்று விஷ்ணுபுராணங்கள் நான்கும் சொல்
லும். ஆதிசேஷன்மேல் நித்திரை செய்து அநேகபக்தருக்கு மாயஞ்
செய்து மோகிப்பவன் செங்கண்ணனென அப்புராணங்களிற்காணலாம்
பிரமாவான உன்குணம் ராஜதகுணமாகுஞ் சிவந்தநிறமுடையதாய் துக்
கத்திற்கிருப்பிடமாய் சஞ்சலரூபமாய், உலகவாதனை சாத்திரவாதனை
உடையவனாய், அவனருளால் வரங்கொடுக்க நீ முன்னிற்பவனென்று
புராணங்கள் கூறுவதை யறியலாம். அன்றியும் வேதத்தில் முன்னும்
பின்னும் பாதி சிவமகாத்மியத்தைச்சொல்லும் மற்றைப்பாதியில் பிர்ம
விஷ்ணு மற்றவர்களைச்சொல்லும் என்பதும் வேதம் முற்றினுமுணர்ந்த
வர்கட்கே தெரியும். அன்றியும் விஷத்தை யுண்டவனென்றிகழ்தலிற்
பயனென்ன. அண்டங்கள் யாவற்றையும் அழிக்கவந்த விஷத்தை அப்
பரமசிவனுண்ணாவிட்டால் திரிலோகத்திலுமுள்ளபெண்களுக்கு கழுத்
தில் திருமங்கலியங்கள் உளவாமா? நாமெல்லாமுள்ளோமோ அறிவாய்.
தலையோட்டிலிரந்துண்டானென்றாய். முன்னுள்ள பிர்மா பெண்மயக்க
த்தினால் ஐந்து தலையில் ஒரு தலை கிள்ளி பின்வருவோருக்குத் தெரியப்
பிர்மாவின்றலையைக்காட்டினானன்றி வேறுண்டோ. பித்தனென்றுசொ
ல்பவர் தாம்பித்தரே யல்லாமல் வேறில்லை. ஏனெனில் என்னிறுமாப்
பை யடக்க வைரவரூபங்கொண்டு என்னெற்றியில் சூலத்தாற் குத்திக்
கபாலத்திலுதிரங்கொண்டாரென்று கூறுவார். இதைக்கொண்டே அவ
ரைப்பித்தரென்று கெடுங்குறியுள்ளவர் சொல்வரே தவிர வேறே யாவர்
சொல்வர். என் மக்களிருவரில் பிரமன்தலையைக்கிள்ளி மன்மதனை
யெரித்துக் கோயிலில்லாமையாக்கிவிட்டார். அவர் மக்களிருவரை நான்
அப்படிச்செய்யவேண்டுமென்னில் ஒருவர் தகப்பன் சாமியாயுள்ளார்,
மற்றொருவர் விகடஞ்செய்து என் சக்கரத்தைப்பிடுங்கினவராய் இருக்
கின்றார். ஆகையால் கெடுங்காலக்குறியாகச் சொல்லேல். பரமசிவத்

தின் இரண்டு கண்களையும் பார்வதி மூடியபடியால் உலகமுழுதுமிருண்டு அந்தகாரமாகி அவள் கையிலிருந்து வந்த வேர்வையானது பழங்கங்கையென்னுங் கோதாவிரி நதியாயிற்று. என் கண்ணிரண்டு மூறங்குதலால் எவருக்கு என்ன குறையாயிற்று. இதனாலே தலைமையுள்ளவரையறிவாய். என்னைவிடப்பத்துப்பங்குயர்ந்தவரென்றிட எனக்குத் தலம் நூற்றெட்டும் அவருக்குத்தலம் ஆயிரத்தெட்டுமாக உள்ளன. என் அவதாரம்பத்தில் மச்சாவதாரத்தில் எலும்பையுங், கூர்மாவதாரத்தில் ஓட்டையும், வராகாவதாரத்தில் கொம்பையும், நரசிம்மாவதாரத்தில் தலைமூளையையுங், வாமனாவதாரத்தில் சரீரத்தில் உரித்த தோல் சட்டையையும் மற்றைய அவதாரங்களில் பூசனையையும் வாங்கிக்கொண்டு அவதாரங்களி லென்னிலுமாப்பை ஒடுக்கினரென்றால் ஞானபரமேஸ்வரன் பிரபாவத்தை யாவர் சொல்லவல்லவர். பரமாத்மா சீவாத்மாவென் இரண்டு வகுப்பையும் நான் உணருமாறு பிரமதேவன் முகத்தில் ஜனகாதிநால்வராய் நான் உதித்து அவரான தெக்ஷணாமூர்த்தியைக்குருவாக்கி நான் அழியாமாணாக்கராய் உபதேசம் பெற்றகதை உலகத்தில் அறியாதவர் அறியாதவரல்லவா. நான் சொல்வதிற்பயனென்ன. நமக்கே ஊழில் இறுதி காலங்கிடைக்கும். அவருக்கு இறுதிகாலமேது. அவருக்குச் சமானம் யாவரைச்சொல்லலாம். ஆறுதாரத்தின்மேல் அவருற்றவரா, நாமுற்றவரா. ஆறுதாரத்தின்மேல் நாமுற்றவராக இருந்தால் நம்மைக்கீழ்ப்படுத்திச்சொல்லுவரேனன். சுகர், விபீஷணர், அஸ்வத்தாமர், அனுமார், பரசுராமர், மாபலி, வியாசரிவர்கள் எழுவரும் பிரமகற்பத்தில் முடிவார்கள். அவரருள்பெற்ற ஞானவான்கள் ஒருநாளுமழியார். நான் அவரை யருச்சித்துச்சக்கரம் பெற்றதற்கு அனந்ததலங்கள் சாக்ஷியாயுள்ளன. அவர் நம்மைப்பூசித்து ஏதேனும் பெற்றதற்கு ஒருதலமும் சொல்லாது. எந்தஸ்தலத்திலும் மாலை நேரத்தில் அவரைத்தெரிசிக்கச்செல்லுதலால் ஒரு தலத்திலும் எனக்கு முதற்காலம் பூசிக்க நினையார். சாலோக சாமீப சாரூப சாயுச்சியமென்கிற நான்கு பதவியில் மூன்று பதவி நான் கொடுக்கத்தகுவதே தவிர சாயுச்சிய பதவி நம்மாலளிக்கத்தகுவதன்று என்று பலவிதமானவுயர்வைத்திருமால் சொல்லிய காலத்தில் எவ்வளவுமனம்பதியாமல் பிரமதேவன் மனதில் மமதையடைந்தமையால் சகலமான ரிஷீஸ்வரர் தேவர்கள் யாவரும் நீர் சொல்வது சரியன்று. விஷ்ணுபகவான் சொன்னதே சரியென்றார்கள் அவரதைக்கேட்டு மமதையிற் சிவநிந்தைதோஷத்தால் பிரமலோகத்தை விட்டுப் பூலோகத்தில் சனிக்கும்படியாயினார். பிரமதேவனே யிப்படியாயினரெனில் தருக்குள்ளவர்கள் கெடுஞ்செய்தியை யாவராற்சொல்ல முடியும். அப்பிரமன் எவ்விதமானாரென்றால் பூலோகத்தில் மாயாபுரி யென்னும் பட்டினத்தில் செங்கோல் செலுத்துகின்ற இராஜசூடாமணி யென்னு மோரரசன் வாழ்ந்து கொண்டிருந்தான். அப்பட்டினத்தில்

நல்லொழுக்கத்திலே மிகுந்த வேதவித்தனென்னும் பெயரையுடைய பிரா
மணனொருவனுள்ளான். அவன்மனைவி மனையறமாட்சியாவுமோருருவா
யவதரித்ததென்ன விளங்கும் வேதவதியென்னுந்திருநாமத்தை யுடைய
வளோடுகூட வாழ்வுற்றிருந்தனர். இருவரும் புத்திரரில்லாமல் புண்ணி
யங்களைச்செய்துவந்த நற்கருமபலத்தினாலே பிரமதேவன் அவள்கருப்
பத்திலவதரித்தார். சிலநாட்சென்று உதயமான புத்திரனைக் கண்டுமிகு
ந்த சந்தோஷங்கொண்டு வேதநிதியென் நாமமிட்டார். அவர் பிறந்து
வளருநாளில் அவரொடும்பிறந்த தம்பிமார் பதின்மர்கள் பிறந்தார்கள்.
அதன்பின்னர் யாவருக்குங்கல்யாணமாகி மனைவியோடுமிருந்து அனேக
ம்பிள்ளைகளைப்பெற்றனராகி வாழ்ந்துகொண்டிருக்குநாளில் அந்தராஜ
தானியில் வாழ்கின்ற ராஜசூடாமணியென்னுமரசன் மகள் சித்திரரே
கை யென்னும் பெண்ணுக்குக் கல்யாணஞ் செய்யும்பருவமுண்டாக காசி
ராஜாவின் மகனுக்குக் கல்யாணஞ்செய்யும்படி நியமித்துச் சம்மதங்கொ
டுத்து அநேகராஜாக்களுக்கு மணவோலை யனுப்பினான். அப்படியே சகல
வேந்தரும் வந்து சூழ்ந்தார். அன்றிரவில் முகூர்த்தம் வைத்துச் சகல
சடங்குகளும் நடக்குங்காலையில் அவ்விராஜகுமாரத்தியானசித்திரரேகை
யென்பவளுக்குக்காசிராஜாவின் குமாரனுக்கு வாழ்க்கைப்படச்சம்மதமி
ல்லாமல் தன் கருத்தைப் பாங்கிமார்களுக்குச் சொல்லிக் கவலையுற்றவ
ளாயவர்களை யழைத்துக்கொண்டு சிங்காரவனத்தினுக்குப்போய் விளையா
டிக்கொண்டிருந்தாள். அந்தக்காலத்தில் இயட்சகுலதிலகனான சித்திர
தன் மைந்தன் சித்திரவீரனென்பவன் ஆகாயத்திலுற்றுச்சஞ்சரித்தனன்.
இந்தப்பெண்ணைக்கண்டு ராஜ குமாரத்தியோ, பூலோககன்னிகையோ
வென்று மகிழ்ந்தனன். சித்திரரேகை யென்பவளும் அவனைக் கண்டு
கண்களிகூர்ந்தாள். இவரிருவருமகிட்சியடைந்து ஒருவரை ஒருவர் நோ
க்கி அவனிறங்கி நீ யாவர் மகள் உன் பெயரென்னவென்று வினவி
னான். அதற்கு வதிலொன்றுஞ் சொல்லாதவளாய் நாணிநின்றாள். இவ்
வரிராஜகுமாரியாயிருப்பளென்றறிந்து நான் இயக்கர் வழி வந்த மன்ன
வன் உன்னைச்சேர எண்ணங்கொண்டேனென்றான். அவளும் என்றக
ப்பன் கொடுப்பனேயானால் சரி, யில்லாவிட்டால் சரியோ பூக்காமுன்
சேருதலுமுளதோ வென்றாள். காந்தர்வவிவாகமுற்றவர்க்கே மணமுடி
த்தல் இராஜதன்மமானதால் இணங்குவையென்று மயக்கினான். அவ
ளுஞ்சரசமானாள். உடனே தோழிமாரையும் இராஜகுமாரத்தியையும
விமானத்திலேற்றிச் செல்லும்போது வேதநிதியென்னும் பிராமணன்
சந்தியாவந்தனஞ்செய்து திரும்பும்போது கண்டு சத்தியமிட்டு நில்லென
த்தடுத்தான். போகும்விமான நின்றமாத்திரத்தில் இயக்ஷனெக்கி நான்
இக்கன்னிகையைக் கொண்டுபோகும்போது ஏன் தடுக்கின்றாயென்றான்.
இராஜகுமாரத்தியைக்கொண்டுபோகையால் தடுத்தேனென்றான். பின்
னுமந்திரவல்லபமறிந்த பிராமணன் இப்படிச்செல்லவொட்டேனென்று

விமானஞ்செல்லர்வண்ணஞ்சாயையைப்பிடித்துத் தடுத்தான். உடனே நம்போல் இச்சைகொண்டவனென்றெண்ணி இப்பெண்ணைப்போல் அழகுள்ளவளாய் ஒருத்தியை மாயையாலுற்பத்திசெய்து அனுப்பினான் அப்பிராமணன் மாயையென்று அறியான். தன் சாயாமந்திரத்தை விடுத்தான். அவனும் விரைவிற்போயினான். அம்மாயாஸ்வரூபியாக வந்த பேய்போன்ற பெண்ணும் பிராமணன் மடியிற்புகுந்து தழுவினாள். ராஜகுமாரத்தியானவள் இப்படிச்செய்வது குற்றமென்று கையினாற்றள்ளவும் அவன் மடிமீதிருந்து மருவும்படி நதியருகிலிருந்தபடியால் ராஜன் ஏவற்காரரோடு பெண்ணைத்தேடிக்கொண்டு வந்து நேரிற்கண்டான். கண்டவுடனே அயன் தள்ள வீழ்ந்தவள்போல் நதியில் வீழ்ந்துயிர்மாய்ந்து மிதந்தாள். ஆகையால் அதைக்கண்டராஜன் மகாதுக்கங்கொண்டு வாளாயுதங்கொண்டு வெட்டப்புகுந்து பிராமணனைக்கொன்றபழிவருமே யென்று மிகவும் வருந்தி நின்றான். அப்போது மந்திரிமார்கள் ஆலோசித்து இவனைக்கொன்றால் நமது பெண் வரப்பட்டதல்ல. ஆகையாலிவனை யூரைவிட்டுத்துரத்துதல் கடமையென்றார்கள். மன்னவனும் அதே சரியென்று மிகவும் தண்டனைசெய்து அவனையும் அவனைச்சார்ந்த குடும்பத்தாரையும் ஊரைவிட்டுத்துரத்தியோட்டினான். ஊரைவிட்டு நீங்கிய அப்பிராமணர் கூட்டத்துடனே விராடதேசத்தை யடைந்தனர். உண்ணுதற்கு வேறுவகையில்லாமையால் யாசித்து மிக்கதரித்திரத்தை யடைந்து வெங்குந்திரிந்தனர். அப்போது துவாதசவருட பஞ்சகாலம் வந்தமையால் உண்ணவுணவில்லாமல் உடுக்க வஸ்திரமில்லாமல் மிக்க கிலேசத்தை யடைந்து தன்னிலைமைகுலைந்து ஊர்தோறுமிரந்து ஒருவரிடம் அமுதுபடியும், ஒருவரிடம் உப்பு முதலானதும், ஒருவரிடஞ் சிறுகாய் முதலானதுங் கொண்டு மேல் கீழ் என்னும் வரம்புமில்லாமல் வாங்கிஜீவித்தார். இப்படி ஊர்கள்தோறுந்திரிந்து மிகுந்த துன்பத்தால் ஆங்காங்கமைந்தனவுண்டு சிலகாலமொன்றுமகப்படாமையால் தாய் தந்தை இறந்தார்கள். இப்படி யொருவர் முதனாள் இறக்க, வொருவர் மறுநாளிறக்க அதன் பின்னாளில் ஒருவரிருவர் அவர்மனைவியும் மக்களுமாயிறக்க ருத்திரக்கிரியைகள் நடத்த வொன்றுமில்லாமல் பின்னாள் தன் மனைவியும் தன்மக்களுமாக இறக்கப்பெரிய துன்பமுள்ளவனாய் விருத்தாசலம் வந்தடைந்தனன். சிவதூஷணையால் பசும் பாடெல்லாம் பட்டுழன்றான். இனி நம்மால் துன்பத்தைச்சகிக்க முடியாதென்று மனதிலெண்ணி மணிமுத்தாநதியில் வீழ்ந்துயிரை மாய்ப்பேனென்று தீர்மானமுள்ளவனாய் அந்நதிக்கரையிற்சென்றான். அவ்விடத்திலுள்ள வரானதத்தாத்திரேயரூபரானமஹாரிஷியைக்கண்டுவணங்கினான். அவர் ஏனப்பா வுனக்கிப்பேர்ப்பட்ட கிலேசமென்று கேட்கப் பிராமணன் ராஜகுமாரி மகளால் வந்த விஷயமெல்லாம் சொல்லி அதுமுதற்பட்டபாடனைத்தையுஞ்செப்பி நின்றான். அப்போது மஹாரிஷி நீ முன்சத்தியலோக

த்திற் சிவநிந்தை செய்த தோஷத்தினால் இப்படிப்பட்ட பெருங் கிலேசத்தை யடைந்து வந்தாயென்றார் திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்டபிராமணன் அவரைப்பணிந்து யெனக்கினிமேலென்ன கெதியென்றான். அம்மகாரிஷியானவர் சிவநிந்தை செய்தபடியால் சிவஸ்தலபூசை செய்து உன் வினை தீரவேண்டுமென்றார். அதைக்கேட்ட பிராமணன் மஹாரிஷியைப்பார்த்து எத்தலத்திற்றீருமென்று கேட்க அதற்கு மஹாரிஷியானவர் பத்ராரண்யமென்னும் ஸ்தலமொன்றுண்டு. அவ்விடத்திற்சென்று சிவபூசைசெய்வையானால் நீசுத்தனாகி இவ்வுருநீங்கி சத்தியலோகம் போய்ச்சேருவாயென்றருள அதைக் கேட்டவரைப் பணிந்துவுத்தரவு பெற்றுக்கொண்டு பத்ராரணியஞ்சென்று மஹாதேவனைப்பூஜிக்கத்தொடங்கி தீர்த்தத்தை யுண்டாக்கி விதிப்படி சிவபூசைசெய்து வணங்கிநின்ற மாத்திரத்தில் உடனே பரமேஷ்வரன் அனுக்கிரகத்தால் ஸத்தியலோகத்தில் நின்றும் அன்னவாகனம் வரப்பிரமதேவனை யதாஸ்வரூபமடைந்து அவ்வன்னவாகனத்திலேறிக்கொண்டு சத்யலோகம் போய்ச்சேர்ந்தார்.

முற்றும்.

# அங்காரகன் பூசனைப்படலம்.

தூயமாமலரின்மேவிச்சுகித்திடுஞ்சதுர்முகத்தா
னாபனாரருளினிந்தையொருவியநலம்புகன்று
மீயுறுபுரந்தரன்றன்விதித்திடுசாபநீத்த
சேயவன்காதைதன்னிற்றெரிந்தவாறெடுத்துச்சொல்வாம், (1)

கற்பகநிழலின்மேயககனக்கோன்கனகக்குன்றப்
பொற்புறுமவையின்கண்ணேபுலவர்கள்போற்றிநிற்ப
விற்பெறுபுருவத்திங்கண்மிளிர்முகச்சசிவிளங்க
வெற்பெறுமணிபதித்தவரியணைமிசையிருந்தான். (2)

ஐந்தருமலர்த்தேனுண்ணும்வண்டொடுமரிவைமார்க
ளிந்திரன்வதனம்வாய்ந்தவெழிலெனுந்தேனுண்வண்டுஞ்
சுந்தரமாகமன்னுந்தொடையணிதிண்புயத்திற்
சந்தனங்களபம்பூசித்தாதியர்சருவிநிற்ப. (3)

முருகொடுபணைமுழங்கமுரசுபல்லியந்துழங்கத்
தெருடருவிபஞ்சிமேவுபண்ணொலாந்திகழ்ந்துகூட்டிக்

குருடரும்வியக்கும்வண்ணநாரதர்குழிப்பிற்பாடக்
கருடகின்னரர்கள்யாருமவன்புகழ்கண்டிசைப்ப. (4)

ஒவ்வொருகோடிதேவர்க்குறைபெறுதலையென்னச்
செவ்விமுப்பான்முக்கோடித்தேவர்கட்கிறையாச்செய்பூந்
திவ்வியபருதியாதிகோள்களுநாளுஞ்சேரக்
கவ்வையில்லாமல்வந்துகளிறூருடபுடமேவகாண்பார். (5)

கதிரலங்காரம்பூண்டவரம்பைபோற்கவினுடற்கண்
ணுதிரலங்காரத்துற்றபொடிக்கிணையுரைக்கற்பாற்றோ
வெதிரலங்காரமின்மைதெனவிண்பண்ணொளியீட்டுப்புனு
சதிரலங்காரமாவாயிரக்கண்ணுந்தாக்கநின்றான் (6)
[ளாங்

பொரான்னெடுங்குன்றக்கொங்கைபொம்பெனப்பணைத்துந்தோ
தன்னைப்போனுறுவுஞ்சமயத்திற்பொம்மல்கொள்வேன்
மன்னிக்கிழப்போகிக்கச்சின்மடங்குறேறவெனுந்தூருக்தி
யென்னைப்போலாமோவென்றோர்நிலையொலியிசைத்ததன்றே.

அகாரணத்தினிலொன்றோடொன்றடித்துநேரலாதிருந்துஞ்
சகாவெனக்கொளுஞ்சம்பந்தராதியர்வாழ்வைச்சார்ந்தா
விகர்தமென்னார்தண்ணீர்க்குத்தாளம்போட்டுறவிதிக்குந்
தகாதிருமூலையென்றார்ப்பபோலொலித்தாளந்தட்ட (8)

வேறு.

அரம்பைமுலைக்கிணையெனுமென்மூன்றுனும் வந்ததெனவ கங்காரந்தா, நரம்பயிலும்வலக்கையது பொறுமையினுலிடக் கைத்தாளத்தைத்தாக்க, வரம்பெறுவோர்தம்பாலேயெளியர் கறுவுதலிருப்பையுற்றுநோக்கி, னிரம்புறுகேடடைவது தாந் தாந்தாந்தாமெனமுழவிகழ்த்திற்றன்றே. (9)

வேறு.

தகுந்திருமுகமுளார்க்குத்தனவழகில்லைகொங்கை
தகுந்தவர்க்கேமுகத்திற்றிருவிலையுலகின்றன்மை
தகுந்திலோத்தமையின்றோர்க்கிங்கிரண்டுமேசரியிவர்க்குத்
தகுந்தகுந்தகுமென்றுடறகுமெனமுழாத்தழங்க. (10)

வேறு.

சாலாட்டங்கொள்ளரம்பைமேனகையோர்போகி முகச்ச
சைநோக்கிச், சேலாட்டங்கொளுங்கொடிகொள்வேள்கணையா
ல்கோதமன்றன் செயனோக்காதிற், பூலாட்டமுற்றமையான்
ஞானியர்க்குஞ்சுவமன்றிப்பகருமின்பால்,*வாலாட்டற்கையமெ
ன்றேவென்னவேமுறுவலித்துவாலாட்டுற்றார். (11)

என்வீணையிசைபெரிதென்றிசைத்தநாரதனிராவணனைநே
ர்ந்தே, யென்வீணைதாதோல்வியுற்றனனென்றானந்தவிலங்கை
க்கோனு, மென்வீணையிவர்கண்மொழிக்கெட்டுணையு மேலா
தென்றிசைத்தலாலே, யென்வீணையேவீணைமறுவீணைவீண்வீ
ணையென்றிசைத்தாள். (12)

வேறு.

ஏழிருவுலகந்தன்னிலேற்றமிக்கார்கண்முன்பே
யேழைமையுள்ளார்மிக்கவியம்பிடுமாற்றம்போல
ஆழுறச்சென்னியாதிபணியொலியாதிருப்பத்
தாழுறுபதமணிந்தசதங்கைகல்லெனவொலிப்ப. (13)

பானலங்கொண்டகண்ணும்பானலங்கொண்டபண்ணுந்
தானுறுவாடாளுடத்தங்கலைநெகிழும்வண்ண
மீனெனும்விழியாள்கூற்றவெளிப்படுமல்குல்கண்டே
வானவர்கண்முகிழ்ப்பச்சேய்கண்டுமகிழ்ச்சிவாய்ந்தான். (14)

அன்னவன்றன்னைப்போகியானவனஃதுகண்டு
மின்னனேரிடையாளாடநோக்கவன்மேவுங்கொல்லோ
வென்னவாயிரந்திருக்குமெரியுறமனந்திருக்கிக்
கொன்னுறவிழித்துநோக்கிக்கொடுமொழிகூறலுற்றான். ( 5)

ஊனிடநோக்கித்தங்களுணவெனக்கருதலுற்ற
மீனிடமெய்துந்தன்மையறிந்திலைவெள்குகில்லாய்
தானுரைப்பிரந்தைசாபத்தாலம்மால்சார்ந்ததேபோன்
மானிடனாவாயென்றுவழங்கினன்மாற்றமன்றே. (16)

---

* வாலாட்டலென்பது வெண்சாமரை.

பவளவார்சடையெம்மண்ணல்பதத்தினுக்கன்பிராது
திவளுறுமனிதர்போலச்சிந்தைவேறுற்றதாலே
யிவளுமிங்கில்லாளாகினைக்கிசையில்லாளாகிக்
கவளமாதியகொடுக்கக்கடவளென்றேகனாந்தான். (17)

எனவிடைகொடுப்பவங்கணிருவருங்கவற்சியெய்தி
முனிவுகொண்மணாளனைமுண்டகத்தாளில்வீழ்ந்து
மனதினிற்பற்றிலாதுநோக்குவோர்தமக்கிம்மாற்ற [றார்.
முனிவொடுமொழிவையென்னின்முதல்வவென்செய்வமென்

அடைக்கலம்புக்கபேரையாதரத்தோடளித்த
னுடைக்கரவணிந்தோனாதியோர்க்கறதொன்மையன்றோ
புடைக்கலந்தார்க்குத்தீங்குபொருந்துறப்புகலாதுன்றன்
கடைக்கணானோக்கிநாயேங்கருணைசேர்வழியேகாண்பாய். (19)

செந்தணன்மேனிகொண்டோன்சேயிழையோடுந்தாழ
வந்தவாரணத்தோன்சொன்னவமைதியையுறுத்துபேச
லெந்தஞான்றினும்வீண்போகாதியம்பியமாற்றமின்னே
தந்தனனேமிதன்னிற்சனித்திடுமென்றுசாற்றி. (20)

புரவலனாகிநீவிர்பொருந்துபோகங்கள்யாவுங்
கரவதிலலாமற்றுய்த்தேகாலுக்குமௌலிசூட்டித்
தாவலனாதெம்மான்றண்புலர்தலையிற்சூடி
புரவலனாகிப்பூர்வவுருவொடேயுறுவீரென்றான். (21)

இருவருமனமுலைந்தேயவர்வயினுதிப்பமென்றே
வெருவராலுற்றேயென்னதுயரநாமேவுவோமோ
கருவினிலடையலுற்றோமென்றுளக்கவற்சிபொங்கித்
தருவுறைநாட்டைநீங்கித்தரணியிற்சனிக்கலுற்றார். (22)

நவிலன்னேனவும்வேலைநாடிசேனர்தனந்தன்
கவலைகொண்மனத்தராயங்காரகன்கழற்காற்போதைத்
தவலருஞ்சிறப்பிற்போற்றித்தலைப்பிரிந்துய்வங்கொல்லோ
புவனியில்வருவம்யாமுமென்னவேபுழுங்கினரால். (23)

நீயிர்கேட்டிடுமொழிக்குநிகழ்த்துவன்கேட்பீரென்று
மாயிருஞாலந்தன்னின்மனிதராஞ்சாபம்வாய்ந்தேன்

தீயுறமெழுகையொப்பத்தியங்குமானிடதேகத்திற்
போயுறப்புகன்றதாரேயென்றனன்புந்திமுன்னோன். (24)

அரியதோர்செவ்வாயென்னுமண்ணலையர்ச்சிக்கின்னைப்
பிரிவெனுந்துன்பத்துள்ளுநர்பெரியதோபேசுங்காலை
விரிதிரைஞாலந்தன்னில்வினையெனும்வலையிற்பட்டே
பெரிதுழிதாவன்முன்பட்டகிடம்போலெய்த்தேமென்றார். (25)

ஆகலின்வேறுமாற்றஞ்சொல்லிடாதயர்வதாகிப்
போதலேகருமமென்னும்புந்தியனாகிப்போந்தான்
பூதலமீதியார்க்கும்பூமிகாரகனென்றோர்பே
ரோதலைக்காட்டுதற்கேயொருவிவந்துற்றனங்கண். (26)

பாய்திரைசூழ்நாட்டிற்றெண்ணீர்ப்பண்ணையில்வளருஞ்செந்நெற்
போய்நெடுங்கமுகின்பாளையறுத்திடுங்கருவிபோல
மீயுயர்ந்தழகுவாய்ந்தமிளிர்வளமல்கலுற்ற
மாயெழில்மதியெனும்பேர்வாய்ந்திடுநகரொன்றுண்டால். (27)

அப்பதிதன்னின்மேவியரசருக்கரசனானோ
னுப்பதினெழுநூறென்னும்யோசனையுடையிலங்கைக்
குப்பதிதசக்கிரீவன்றன்னைக்கொல்லாமற்கொன்ற
துப்பதிற்சிறந்தகார்த்தியவீரியன்வழியிற்றோன்றல். (28)

வேறு.

இவனுக்குங்கற்பகத்தருவுக்கு நேரெனப்புகலினீவதல்
லர், மெவனுக்குங்கொடுப்பதுநான்கொம்புதானெனத்தன்னை
யிழிவிற்கூறி, யிவனுக்குநானீடோவிலையிலையென்றிலைகாட்டியெ
ய்துமாற்றா, லுவனுக்குநேராகவெவைதச்சொல்வன்கொடுத்தனி
னுயர்வுற்றனல். (29)

வேறு.

கருதலர்தம்மையெல்லாங்கடிந்திடுங்கதிர்வேற்கையான் [தான்
மருதிடைதவழ்ந்தோனொப்பவாய்மைகொள்செங்கோல்வாய்ந்
பெரிதறமியற்றிநின்றபிரதீபனென்னும்போர
னொருதனிக்கலாவதிக்காரிகையொடுமுவப்பின்வாழ்ந்தான். ()

அன்னவர்மகவிலாமையாற்றவுந்தவம்புரிந்தே
சொன்னநல்லறங்கள்யாவுந்தூய்மையின்மிகப்புரிந்து.

நன்னயமொன்றுங்காணேமெனவுளநலிவடைந்தே
யென்னகாரணமோவென்றேயமைச்சரோடெண்ணினானால் (31)

மதியறியமைச்சர்தாமுமன்னவர்மன்னகேண்மோ
கதிமரித்தோருக்கீயுங்கவின்முதுகுன்றந்தன்னிற்
பதியுமம்வாமதேவப்பழமறைப்பனவன்றன்பால்
விதியினதியல்பைக்கேட்கின்விளம்புவன்றெரியவென்றார். (32)

என்னலுமவணின்றேகியிறைவனுமமைச்சர்தாமுஞ்
செந்நெலுமுளரிக்காடுஞ்செறிந்தநன்செய்கள்சூழு
நன்னலமிகுந்தமுத்தாநதிக்கரைநண்ணியாடிப்
பன்னுமம்மறையோற்கண்டுபணிந்தனர்பரிவுகூர்ந்தே. (33)

அருக்கனேரயில்கொள்வேலாற்காற்றவுமுகமன்கூறித்
திருக்கிளர்குசேசயத்திற்செவ்விகொள்வதனநோக்கி
மருக்கமழ்மாலைமார்பா வந்ததென்வழங்குகென்னப்
பொருக்கெனச்சூட்சியாளர்புரையறப்புகலலுற்றார். (34)

அலங்கல்வேன்மன்னர்ப்பின்னரப்புவியாள்வாரின்றிக்
கலங்குறுமென்றேநெஞ்சங்கலங்களுருற்றடைந்தா
னலங்கருணையிற்கொடுக்குநாயகநின்னையன்றித்
தலங்களின்வேறுண்டேயோவருள்கெனத்தகைந்துநின்றார். ()

ஆங்கவனுரைப்பக்கேட்டவருமறைக்குரவனானே
னீங்கொருநாடுமட்டோவெழுநிலவளாகமுற்றுங்
காங்கயன்போலேயாளுங்காதலனுதிப்பதற்கிங்
கோங்குறுவேள்விசெய்யப்படாதுமென்றுடனெழுந்தான். (36)

காவலனகரஞ்சென்றுகலப்பைகள்வெளவலுற்றுங்
கோவலின்மறையின்வாய்மையுயர்குரவரைவரித்துத்
தீவலஞ்சுழித்தெழும்பச்சேண்மலர்மாரிதூற்ற
மேவுபுத்திரர்சேரிட்டிவேள்வியைவிழைந்துநின்றார். (37)

மன்னவன்வலதுதோளும்வலக்கணுமகிழ்வினோடத்
துன்னலனிடத்தோளுமிடக்கணுந்துளங்கியாடக்
கன்னல்வேளுருவொடேவேள்வியின்பயன்கண்டதென்னப்
பன்னருஞ்சேயோன்சொன்னபாவைபோலுதித்துற்றானால். ()

பத்திராங்கமதிவ்வாறுற்பவித்தெனப்பகரும்வண்ணம்
புத்திரன்சனகங்கண்டபுரவலனுவகைபொங்க
வித்திறனுடைகையீகைவெறுப்புறவிழைந்தளித்தே
சித்திராங்கதனென்றோர்பேர்சிறந்திடச்செப்பினானால். (39)

சிறந்திடுசேயமைச்சர்சேனையின்றலைவனுக்கும்
பிறந்தவிவ்வரசனட்புப்பெறுமதிமந்திரிக்குந்
திறந்தெரிசிறுவராகிப்பிறந்தனர்நாமந்தேரி
னறைந்திடுசுமந்திரன்சித்திரசேகனென்றுரைப்பரான்றோர். (40)

சேனையின்றலைவன்றானிச்சேனையின்றலைவனுக்கே
மானிடனாயுதித்தேவளர்தருகின்றகாலை
யானவைந்தாண்டின்பின்னரணிகொளுந்திலோத்தமைப்பேர்
மானெனுமருணோக்கத்தாளடைந்தமைவகுத்துரைப்பாம். (41)

படவரவல்குலார்க்குளொப்பிலாப்பாவையொப்பாள்
மடமிகுமன்னர்தம்மைவாளினாற்செகுத்துவாய்மை
நடையினிற்சேர்த்திடுங்காரணத்தினுச்சினிநகர்க்கண்
டிடதன்மமன்னனுக்குச்செவ்வியாயுதித்தாளம்மா. (42)

நிதிகளையிரண்டுந்தன்கைபெற்றிடுநிலைமைபோல்வான்
மதியினைக்கரத்திற்பெற்றுவளர்த்திடுமாற்றம்போலப்
புதியகாரணமாயிங்குப்போந்திடுவாட்குக்காந்தி
மதியெனநாமமிட்டுவளர்த்தனன்மகிழ்வுகொண்டே. (43)

வேறு.

அன்னகாலையிற்றாமராக்கதனெனுமரக்கன்
மின்னும்வான்பிறைசெறிந்தெனவிளங்குதுண்டத்தன்
செந்நிறச்சிகைச்சென்னியன்றிருகுறுஞ்சினத்த
னெந்நிலத்தையுமுண்பனென்றேயெழுந்திடுவான். (44)

தூளியென்னினிர்த்தூளிசெய்திடுமிகுசூட்சி
யாளியாமெனச்சொலும்விகடாட்சனாமமைச்சே
டோளியாகியபரிசனாதியரொருங்குறவே
கூனிதிண்படையேந்தவிண்ணுலகமர்குறித்தான். (45)

அமர்குறித்தவனுயிடையெய்தியேயரிய
தமரவெண்ணிறச்சங்கம்வாயூதினன்சார்ந்தே
யமரர்யாவருங்கூர்த்தனராகநின்றார்த்தார்
திமிரெலாமடங்குறநெடும்போரவண்செய்தார். [46]

ஒட்டர்வாய்க்குநேர்நல்லவர்நிற்பரோசொல்லும்
பட்டிவாய்க்குநேர்பண்புறுவோர்நிற்கப்படுமோ
மட்டியோர்க்குநேர்நிற்பரோவமரர்கள்மலைந்தே
கட்டியேநலிவடையச்செய்தனர்தறுகண்ணர். [47]

கனகநாட்டினன்றேவர்கடோற்றமைகண்டான்
தினகரற்கெதிருளெலாங்கூடியேசேர்ந்தே
முனைபயிற்றிடல்போலவேயரக்கரைமுன்னிக்
கனசினத்தொடுதருக்கொடுமமர்த்தொழில்கண்டான். [48]

என்னைபோர்புரிந்திடினுமவ்வரக்கருக்கியலான்
மன்னத்தோற்றனன்வச்சிரபாணியாமன்னன்
பின்னரப்பிரதீபன்பாலிவையெலாம்பேசி
நின்னையன்றியோராதரவிலையெனநிகழ்த்தி. [49]

தஞ்சந்தஞ்சமென்றுவியும்வாழ்வும்யான்றரித்தே
யுஞ்சிடும்படிக்கண்டகர்குழுக்களையொருங்கே
துஞ்சிடும்படிக்கருணைசெய்வாயெனத்துதித்தே
செஞ்செவிப்பெருந்தேரிலேறென்னவேசெப்ப. [50]

அட்டதிக்கினில்வாழ்வுறுமரசருக்கமைந்த
பட்டமுற்றவர்யாவரும்பணியும்பைங்கழலான்
சிட்டர்யாவரும்புகழ்தருசெல்வற்குச்சிறந்த
பட்டங்கட்டிவைத்தளித்தனன்பூமியைப்பரிக்க. (51)

மணியிழைத்தொளிர்வையத்திலேறுபுமன்னன்
பிணிகொள்வானவர்நாயகனோடுமேசென்று
துணிவுபெற்றிடுந்தூமராக்கதன்முனந்தோன்றித்
தணிவிலாமுனிவொடுமமர்க்களத்திடைச்சார்ந்தான் [52]

கண்டுசீயமுஞ்சீயமுமெதிர்ந்தெனக்கனன்று
பண்டுதேவருமவுணருமனமிகப்பதைப்ப

மண்டுபோரிடைவாளினும்வில்லினுமலைந்தே
யண்டமூலத்துங்கடலினும்போர்வினையயர்ந்தார். (53)

திரண்டதோளினிவ்வணம்புரிதலுஞ்சிந்தை
புரண்டுமீதுறப்பொங்கியவன்மையிற்பொருதே
வெருண்டிடும்படியொருவர்மேலொருவர்பேவுறவே
யிரண்டுபேருமாய்ந்தெமபுரமேவிவீற்றிருந்தார். (54)

ஆவிநீங்கியவிப்பிரதீபனுமரசைத்
தேவியாளுறும்படிக்குமாதவியிடஞ்சேர்த்துப்
பூவினுய்த்தனன்சுக்கிரபகவனும்புனிதன்
றூவிச்சித்திராங்கதனிடம்வந்ததுசவமே. (55)

கண்டுநெஞ்சதுகலங்கினன்கண்கணீரருவி
கொண்டுவீழ்ந்தனனாழ்ந்தனன்றுயர்க்கடல்கூடி
விண்டுநீங்கினற்கியற்றுறுகடன்களைவிதியின்
பண்டுபோலவேபுரிந்தனனாகமப்படியே. [56]

தேவருக்கொலாநலஞ்செயின்வருவதுதீங்கோ
பாவகாரியைக்கொல்வனென்றேகிநீபடைத்த
வாவிநீங்கினையானினையகன்றிடேனென்று
தீவளர்த்ததில்வீழ்ந்துயிர்செகுத்தனடேவி. (57)

அன்னதன்மையைநோக்கலுமுன்னுளவமைச்சு
மன்னர்சேனையின்றலைவனுமன்னனுன்மாழ்கி
யின்னம்யாமிருந்தென்பயனென்னுறவென்றே
பொன்னினன்னகரத்திற்காண்குதுமெனப்போனார். (58)

விண்ணிடைப்பெறுமுழையர்கடம்மொடும்வேந்தன்
மண்ணிடைப்பிறந்தரசியல்செயும்வகைமதித்தே
மண்ணிடைப்பிறந்திடுபழவுழையருமன்னும்
விண்ணிடைப்புகுந்தாரெனச்சென்றுமேயினரால் (59)

அன்னதன்மையிற்சித்திராங்கதனெனுமண்ணல்
முன்னமேவுறுமமைச்சரின்சுதரொடுமொய்த்தே
மன்னர்மன்னவனாகவேமண்டமர்கடந்தே
தென்னர்சுந்தரபாண்டியனென்னவேசிறந்தான் (60)

நாலிரண்டொடேழெட்டுமுந்நான்கிடநண்ணிற்
சோலியாம்பகையென்றுருத்தோன்றிடாதிருந்தும
போலியாக்குவோனரசனுவுருவொடுபோந்த
வேலினுருக்கோர்பகைமையுமுண்டுகொல்விளம்பின். (61)

ஆறிலெட்டினிலமைதரின்யாவராயினு
நூறிடுஞ்செயலொருவரானுடைத்துறப்படாதால்
வேறதாகியபகைபெறுவேந்தர்கடம்மைக்
கோறல்செய்துறும்வன்மையையாவரேகுணிப்பார். (62)

இறந்தமந்திரிக்கிழவர்தங்குமரர்களெவருஞ்
சிறந்தமந்திரராகியேதெரிவிழியிமைபோற்
பிறந்திடுமுடற்கவசம்போற்பெறுமுடனுயிர்போ
லறந்தெரித்திடுமரசனுக்கறிவெனவமைந்தார். (63)

மன்னவன்சினந்துரைப்பினும்வெறுப்பதைவயா
ருன்னிநற்பயனாகியகருமங்களொருங்கே
மன்னிநிற்பவர்வருகின்றபயனெலாம்வருமுன்
சொன்னவாய்மையர்கூற்றவனேற்பினுந்தோலார். (64)

ஈந்ததன்மையிற்கடந்தனனிரவலர்கடலை
யாய்ந்ததன்மையிற்கடந்தனனறிவெனுமளக்கர்
காய்ந்ததன்மையிற்கடந்தனன்கருதலர்கடலைத்
தோய்ந்ததன்மையிற்கடந்தனன்போகத்தின்றொடர்பே. ()

இன்னவாறெலாம்போகமும்பொருளுமேயெய்திப்
பின்னவாறின்றிப்பிஞ்ஞகனுலகநூல்பிறங்கச்
சொன்னவாறெலாமறமொடுதானமுந்துவன்றப்
பன்னுமாறரிதெனவுலகாண்டருள்படைத்தான். (66)

இருந்தகாலையின்மாலவதாரமென்றியம்புங்
கரிந்தமேனிகொணாரதமுனிப்பெயர்க்கருணைப்
பெருந்திறத்தினன்விண்ணில்வாசவற்கண்டுபெயர்ந்து
வருந்திறத்தினனிவணுழிவந்தனன்மகிழ்ந்தே. (67)

முனிவனெய்தலுமெதிர்கொடுமுகமனிலிறைஞ்சிக்
கனிவருக்கியபாத்தியஞ்செயுமுறைகண்டான்

பனிகொண்மாமதியொளியுணுஞ்சகோரம்போற்பார்த்தே
யினியையோவென்னதவமிழைத்தேனென்றுனிறைவன் ()

என்னக்கேட்டலும்விபஞ்சிகொண்முனிகளிப்பெய்தி
மன்னர்போற்றும்வீரக்கழலணிவடிவேலா
யன்னப்பேட்டினுக்கொப்புறுமாயிழையல்கு
றன்னைக்கண்டதால்வந்திடுபவங்கொலோதகையோய். ()

என்றுகூறலும்புடவியைப்புரந்திடுமேந்த
லன்றுபின்னருமுத்தமாங்கத்தடிசூடி
நின்றவிப்பவம்வந்திடுமாற்றமுநிகழ்த்திப்
பின்றொலைந்துய்யும்படிக்கருள்பேசுகவென்றான். (70)

ஆயகாலையின்மன்னனையலர்முகநோக்கித்
தூயமூலகாரணனெனுந்துளவணிமார்பன்
மாயைமேவித்தன்மனமறுகுறுவனேன்மண்ணி
னீயிவ்வாறுறற்கையமென்றேவெனநிகழ்த்தி. (71)

முன்னமிந்திரனவையிடையியன்றவாமொழிந்து
மன்னனவன்றன்சாபத்தினீயிவண்வந்தாய்
மன்னுகின்றவக்காந்திமாமதியினைமணந்தே
துன்னும்வேழத்தின்சிலையினேனென்னவேதுய்த்தே. (72)

வந்தகாரணமானபின்சாபத்தைமாற்ற
விந்துலாவுறுபத்திராரணியத்தினெய்தி
நந்திநாதன்றன்சபரியையன்பினினண்ணி
யெந்தையாரருள்புரிதருவரமுற்றுமெய்தி. (73)

பூவருக்கத்துப்புரவலர்ப்புதுமையாய்ப்பொருந்தி
மீவருக்கத்துவிண்ணவர்யாவர்க்கும்விளங்கு
மூவருக்குமேலாநவக்கோளெனமொழிய
நீவருக்கத்தின்வருகுவாயென்றனனெடியோன். (74)

என்றுகூறியேவிபஞ்சிகொண்முனிவனேகியபின்
றுன்றிருங்கதிர்வடிவெனத்துலங்கியதோன்ற
லன்றுறுந்திருக்காளையாம்பருவத்தைநண்ணிச்
சென்றுகிக்கினைவென்றிடச்சிந்தையிற்றேர்ந்தான். [75]

அமைச்சரோடெண்ணியணிரதமசுவமாவாதி
யிமைக்குமுன்குழுக்கொண்டிடப்பணைமுரசியம்ப
நிமித்தநோக்கியெண்டிசையெலாநேர்ந்துசென்றுழுந்
தமைச்சரண்புகுந்தேபுகழொடுமுபசரித்தார். (76)

எங்குசெல்லினுங்கப்பணங்கட்டியேத்திட்டே
மங்கலஞ்சொலலல்லதுமற்றுமொன்றுளதோ
வங்குசெல்லுறும்போழ்திலக்காந்திமாமதியுஞ்
சிங்கமன்னனைவிழைவுறீஇச்செறிமயல்சேர்ந்தாள். (77)

மன்னர்மன்னவனின்புயந்தழுவியேமருவக்
கன்னல்வில்லவன்கணையிறுற்காழுற்றேன்காண்டி
யென்னநைந்துநைந்துரைபகர்ந்திட்டனளீங்கிவ்
வுன்னம்யாவளோவெனவவன்பராமுகமானான். (78)

வேறு.

மையலாலடைந்தவென்னைமருவியின்பந்தராத
வெய்யனீயாதலாலிம்மேதினிபுரக்குநாளின்
மையின்படையாதீரேழாண்டுநீமணம்புணர்ந்த
தையலைப்பிரிந்ததுன்பஞ்சாருவையெனச்சபித்தாள். (79)

சபித்திடலோடுமன்னன்றன்னுளக்கவலையின்றி
நபத்தினின்றிவணில்வந்தநாரதர்மொழியுமெண்ணான்
கபித்தங்கூவிளநேர்கொங்கைக்காரிகைகாமமெண்ணான்
சுபத்தினினகரம்புக்குமணஞ்செயச்சூட்சியுற்றான். (80)

செவ்வியோர்தமையுச்சீனித்திடதன்மவேந்தன்றன்பால்
குவ்வியசுவர்க்கக்கொம்பனாள்மணங்குறித்தேயேவ
நவ்வினின்மிக்கோரேகிநரபதிதம்மிற்செப்ப
விவ்விபுலையின்கண்யான்செய்புண்ணியமென்னேயென்றான். (81)

சம்மதத்தொடுமிக்கொம்பைத்தான்கொடுவேந்தன்சார்ந்தா
னிம்மெனுமுன்னேவெந்தவேந்தனுமெய்திச்சூழச்
செம்மைத்தன்னகரந்தன்னைத்திருவுறவணிசெய்வித்துக்
கொம்மைசேர்கொங்கையாளைக்கோலத்தின்மணம்புரிந்தான்.

பலரையுஞ்செல்லவுய்த்துப்பைந்தொடியாளுங்கூடி
சிலைகொளுமதனன்போலுந்தேவிபூங்கொடியைப்போலு
மலகிலாச்சுரதலீலையன்னனுமனுபவித்தந்
நிலைமையாற்பன்னாளின்பக்கடலிடைமுழுங்கினால். (83)

அலகினாட்சென்றபின்னர்கருப்பம்வந்தடைந்ததங்கண்
சிலதியரோடுங்காந்திமதியொடுஞ்சித்திராங்கன்
மலர்மலிதடவைசென்றுமலர்கொய்துமலையப்வீச
வல்ர்மலிசலக்கிரீடையார்வத்தினாடினால். (84)

நீலஞ்செவ்வல்லிவள்ளைநெடுவராலினமொளிப்ப
வேலுநீர்த்திரைசுருட்டுஞ்சுழியுமவ்விடத்திறப்பச்
சாலவேகண்வாய்காதுதருங்கணைக்கால்வயிற்றி
னவிலைமடிப்போடுந்தியரிவையுமாடினாளால். (85)

வண்டுபாண்முரலுஞ்செந்தாமரைமலரவடனந்தான்
குண்டுநீர்த்தடத்தின்மூழ்கியாடும்போதவைகுலுங்கல்
கண்டுதாமூழ்கியாடுங்காட்சியைக்கண்டோரெல்லாஞ்
செண்டுமாமுலையின்கண்கள்கறுத்தல்போற்றிகழுமென்பார். ()

மன்னவன்முகத்தினங்கைமலர்க்கையினீரிறைப்பாள்
பின்னவனங்கைகொங்கைதன்னிலேபெரிதிறைப்பா
னென்னைநீகாண்பாயென்றேயவன்மூழ்கவிவள்கண்டுற்றே
பின்னைநீகாண்பாயென்றேமூழ்குவள்பெயர்ந்துந்தானே. (87)

வேறு.

இன்னவாறிவராடுறுமெல்லையி
னன்னமன்னவளாயிடைமூழ்கினாள்
பின்னையெங்கினுந்தேடிப்பெரிதுமே
மன்னுறுந்துயர்வாரியின்மூழ்கினான். (88)

வரிவளைக்கைமடந்தையைக்காண்கிலா
துருகிமன்னனுளந்தடுமாறியே
யெரியிலிட்டமெழுகெனவேந்தனு
முரிபபேடையிலன்றிலையொத்தனன். (89)

கூல்மேறிப்பின்கோயிலையெய்தியே
யேனுமங்கைதனையிழந்தேனெனு
ஞாலமீதென்செய்வேனினிநானென
வாலமுண்டவன்போலயர்வாயினான். (90)

கோடிமங்கையர்தங்களைக்கூடினு
மீடிவட்கிணையோவென்றிரங்கியே
சூடுமாமணிநீங்குபுதாத்தியோ
டாடுநாகமெனத்துயர்வாயினான். (91)

கள்ளுலாமுல்லைமல்லிகைக்கண்ணியைப்
புள்ளுலாவுறச்சூடும்புயத்தினிற்
கள்ளிமாலையைக்காதலுற்றேனென
வெள்ளிமாதர்கடம்மையிருந்தனன். (92)

இன்னவாறிவனைத்தங்கிருத்தலா
லன்னநாடும்பரவசமாயிடப்
பொன்னனுடம்புக்கபின்பூமியிற்
சொன்னகாதையைச்சொல்லலுற்றாமரோ. (93)

மாதர்காந்திமதியுமேயவ்வுழிப்
பாதலத்தினிலெய்தியபண்பினாற்
றீதிலாவத்திருநகர்க்கன்னிமார்
மேதகத்தம்பிறைவன்றன்விட்டனர். (94)

நாகராசனந்நாரியைக்காண்டலுந்
தோகைநீயெவண்சொற்றகையென்னவே
பாகுசேர்மொழிப்பைந்தொடியாளுமே
யோகையாகத்துளங்கியுரைக்கின்றாள். (95)

உச்சினீநகர்க்கோரிறையாகிய
செச்சையாலைசெறிந்ததிண்டோளினு
னச்சுறுந்திடதன்மகனாமனுக்
கிச்சையாஞ்சுதையென்னவிருந்தனன். (96)

வாமமிக்கபுயாசலமன்னவ
னேயமார்சித்திராங்கநிருபற்குச்

சேமவில்லறத்துற்றுத்திகழ்ந்தளோ
னாமங்காந்திமதிப்பேர்நவிற்றுவார். (97)

காந்தனொடுங்களிப்பின்மிகுதியாற்
பூந்தடத்திலவனொடும்புக்கபின்
போந்ததன்மைபுகலவறிகிலேன்
வேந்தனைசரனென்றுவிளம்பினாள். (98)

என்னக்கோல்வளையாளுமியம்பவே
மின்னுமென்சுதையென்றுவிளம்பியே
பன்னகத்துப்பணாமுடிமன்னவன்
கன்னிபோல்வைத்துக்காப்புளனாயினான். (99)

அங்கிருந்திடுமாயிழையாளுமே
திங்கள்பத்துங்குறியொடுசென்றபின்
சங்கம்வெண்மணியீன்றதகையென
வெங்கும்போற்றுஞ்சிறுவனையீன்றனள். [100]

சித்திராங்கதனென்றோர்திருப்பெயர்
வைத்துப்பேரனெனவேவளர்த்துமே
அத்திவையமதேறுமலகிலா
வித்தையாவும்விளங்கவுணர்த்தினான். (101)

மருவும்யட்சகன்மாமகளாகிய
வரிகொளோதிவித்யாப்பிரவாகியை
விரியும்வேதமுறைமணவேள்வியைப்
புரியியற்றினன்புந்தியுவந்தரோ. (102)

காரிமுன்னர்நவின்றிடுசாபத்தா
னேருங்காந்தனைநீபுரிந்துற்றனை
கூருமாதரோடேகிக்குறுகுறச்
சேர்வையென்றுசிரோன்மணிசெப்பினான். (103)

என்றுபொன்மிளிரேந்திழையாரொடுஞ்
சென்றுறப்பன்னகத்திறைசெப்பலு
மன்றுமைமந்தன்மருகியோடேயவ
ணின்றுபோற்றிநெறிக்கொடுசென்றனள். (104)

நாககன்னியர்நன்னுநெறிக்கொடு
தோகையோடிவண் போந்தறஞ்சூழ்ந்திடும்
வாகைச்சத்திகொள்மன்னவன்கோயிலைப்
போகைமேயினள்புண்ணியமேயினாள். (105)

வேறு.

வளைதருகின்றகீழ்க்கடனுகத்தின்வான்றுளையதன்கண்மேல்கடலி, னளைதருகமடங்கழுத்தினைநீட்டியலையினினுழையுமாறதுபோ, விளையினுக்கரசன் பாதலத்திருந்து மேந்திழைமார்பலர்சூழ, வளையொடுமருகிதன்னொடுமமர்ந்துமொய்குழலினைக்கண்டான்முகமே. (106)

துறந்தமெஞ்ஞானதேசிகன் மீண்டுந்தோகையை யணந்திடல்போலுங், கறந்தபால்முலைக்கணேறியேமடியிற்கலந்துறைதந்திடல்போலுஞ், சிறந்தநற்றிருவின்செல்வனைப்பிரிந்தீரேழெனுமாண்டெல்லைதீர்ந்தே, யிறந்தவன்மீண்டும்பிறந்தவடனைக்காண்மகிழ்வினையென்னியம்புவனே. (107)

அறந்தழைவுற்றபுரவலனுள்ளத் தமைந்திடுகளிப்பினையறையின், பிறந்திடுமலடிமகவினைப்பெற்றுப்பெருங்களிப்பெய்துபெற்றியையுந், திறந்தருபெரியமிடியன்பெற்றிட்டசெல்வத்தினுறுகளிப்பினையு, மிறந்தவர்மீளப்பிறந்துவந்துற்றவுவகையுமிணையெனலென்னே. (108)

தடத்தினின்மூழ்கிச்சென்றபின்னெங்குசார்ந்தனையதனையானறியத், திடத்தின்மன்னவன்றானீன்றிடுபொன்னேசெப்பெனவுசாவிடலோடும், படத்தினின்மணிகொணாகர்கோனுலகைப் பார்த்தனன்பாதுகாத்தன்ற, னிடத்தினினுய்த்தானென்றனள்மற்றையெழின்மதிமுகத்தருமிசைத்தார். (109)

வேறு.

இத்தகைமன்னவனியம்பொணாமகிழ்
வைத்தவனாகவேமகவைக்கண்டுகண்
டுத்தமனார்கோனுதவிசெய்ததைச்
சித்தம்வைத்தெண்ணியேசிந்தித்தானரோ. (110)

நாகர்கோனுலகுறுநாரியோர்க்கெலாம்
வாகுபொன்மாலைவெண்டரளமாலிகை
கோகுலாதிபன்மணிபிழைத்தகோடிக
மேகமாய்ப்பலவுமேயீந்தனுப்பினான். (111)

இன்னவாறலகிலாநாளிருந்துமே
பொன்னுலகெனப்பலபோகந்துய்த்தபின்
றன்னொருபாலனாற்றரணிதாங்கிட
மன்னவனாகவேமவுலிசூட்டினான். (112)

ஆயபினாதரனறந்தமாற்றத்தைச்
சேயவன்மனத்திடைச்சிந்தித்தெண்ணியே
போயதென்பொருமலென்றேபுகன்றுதான்
றாபதாந்தலமதைச்சூழவேகினான். (113)

மணிமுத்தாநதியினைமருவியாரடியே
பிணிமுற்றுவனையருள்பிறங்கலான்றனைத்
திணிமுத்தாம்வகைக்கணீர்சிந்தப்போற்றியே
யணிமுத்தாந்துதிபுரிந்தகன்றுசென்றனன். (114)

பத்திராரண்ணியமெனப்பகர்ந்திடு
முத்தமத்தேவதாருக்களோங்கிய
பத்தெனுந்திசையெலாம்பரிமளித்திடுஞ்
சித்திரவனத்திடைச்சேறன்மேயினான். (115)

என்புநெக்குருகிடவிதயநைந்துற
வன்பொருவடிவுகொண்டென்னவன்னவ
னென்பெறற்கிவ்வணமியைந்தநீண்டெனா
வின்புறுவனத்திடையெய்தினானரோ. (116)

தேவதாருத்தருசெறிகடத்திடைப்
பாவனாதீதமெய்ப்பரனைக்கண்ணுறீஇத்
தீவினைமுற்றுமேசெகுப்பனீண்டென்றே
யாவலாய்ச்சபரியையாற்றமேயினான். (117)

தன்பெயராலொருதடமொன்றாக்கியே
மின்பெறுவேணியெம்விமலனர்ச்சனைக்

கென்பெறவேண்டுமோவனைத்துமீட்டியே
பின்பெறுநலமெலாம்பெறமுயற்றினன். (118)

வேறு.

புலரியின்வாவிமூழ்கிப்புரிந்துறுநியமமுற்றி
மலமதையகற்றித்தூய்மைவழங்குபுண்ணியமணிந்து
தலைகரமூரஞ்சிரத்திற்றரித்திடுமக்கம்பூண்டு
கலைமறையுரைக்கும்பஞ்சாக்கரத்தைநாவுச்சரித்து (119)

தயிலமேயாதியானசாந்தமீறுகச்சொற்ற
வயலுறுகன்னற்சாறுபலவகையானசாறு
வியலுறுமாக்காப்பெல்லாம்விளம்புமுமனுவையோதிச்
செயலெலாமுற்றஞானச்செல்வருக்கபிடேகித்தான். [120]

வேறு.

*கம்பாலுமபிடேகித்துக்கம்பமினெஞ்சஞகிச்
செம்பாதியுமைக்குத்தந்ததேவற்கொவ்வோர்திறத்து
வம்பாருமலராலர்ச்சித்திருக்கின்மந்திரநிறைத்த
கும்பாபிடேகமிக்கக்குயிற்றினன்கண்ணீர்சோர. [121]

வேறு.

மெல்லியசீரையாலம்மேனிநீரினையொற்றிச்
சொல்லியனீற்றுக்காப்பைமணியினைத்தேரயப்பூண்டு
வல்லியச்சருமத்தார்க்குக்கோசிகமருங்குடுத்திப்
பல்லியமார்ப்பவர்ச்சித்தொருவழிப்பட்டுநின்றான். [122]

புத்திரலாபத்திற்கும்புண்ணியத்திற்குமோங்கஃ
ரத்தொலியாலளிப்பேனெனுமணியசைத்துநன்கு
நித்தியமாநிவேதனமெலாநிரப்பிச்செல்வஞ்
சித்திபெற்றிடவளிக்குந்தீபதூபங்கள்காட்டி. [123]

தாழ்ந்தெழுந்துன்பதத்திற்றமியனுள்ளங்குவிந்தால்
வாழ்ந்துறுவேனெனுநெஞ்சினிற்கரங்குவித்துவைத்து
வீழ்ந்தவைம்புலனென்றுக்கின்வீடுதான்பெறுவனென்ன
வாழ்ந்தசென்னியிற்குவித்துவள்ளலைவழுத்தலுற்றான். (124)

---

* கம்பு—சங்கு.

சங்கராசிவமேபோற்றிதற்பரசிவமேபோற்றி
பொங்கராவணிந்தவேணிப்புராதனபோற்றிமேருச்
செங்கராதமியனெண்ணஞ்சிறந்திடச்செய்வாய்போற்றி
கங்கராவென்றோதின்றன்கருணையைக்காண்பேன்போற்றி (125

இறுமாப்புந்தீயுமொன்றேயென்பரத்தீயெங்கேனு
மூறுமாற்றிற்சிலதுவியுஞ்சிலதுய்யுமொன்னார்போலத்
தெறுமாப்புச்செயாதினத்தார்கமையெலாந்தீக்கலாலே
மிறுமாப்பெட்டுணையுஞ்சேராதென்னைக்காத்தருள்வைபோற்றி

வினையெனுஞ்சிறைப்படுத்திவிட்டனையதனாலே
னினைவிலென்பயனடக்கையாவுநின்னெறியேயன்றிப்
பினையுமேதேனுமுண்டோபிரமபுரீசவேத
முனைவனேபத்ராரண்யமுத்தனேபோற்றிபோற்றி. (127).

என்றவன்வழுத்தலோடுமெம்பிரானுவகைபூத்துப் [றி
பொன்றிணிவேணியெம்மான்பொள்ளெனவிடைமேற்றோன்
நன்றுறுகாட்சிதந்துநவிற்றுறுவோருக்கென்றுங்
கன்றுறலுளதோவஞ்சேலென்றனன்கருணைக்கண்ணன். (128)

இந்திரன்சாபத்தாலீண்டெய்தினையஃதினாலே
வந்துதாளர்ச்சைசெய்தமாண்பினாற்சாபநீங்கிச் [ன்
சந்திரன்பின்னாங்கோளாய்ச்சரிப்பையென்றருள்செய்தெம்மா
சுந்தரலிங்கம்புக்குத்தோன்றுறாத்துணையாய்நின்றான். (129).

ஆயபின்புரவலன்றானவ்வுருநீங்கிவிண்ணிற்
சேயவனாகியெவ்வெவ்வுலகினுந்திகழ்ந்துற்றானாற்
போயபினன்னான்பன்னியானபொற்றொடியினாளு
மீயுயர்நடமியற்றுமின்னெனவெய்துற்றாளால். [130]

ஆதலினப்பதிக்கங்காரகபுரமென்றொரு
மோதவினாலங்காரகேசனாயுறைவனெந்தை
மாதலத்தவன்வாவிக்கண்மூழ்குபுவரதன்றன்னைக்
காதலினிறைஞ்சினெய்தாப்பொருளெதுகருதினோர்க்கே. ()

தேவலோகத்தில் கற்பகத்தருவின் நிழலில் காமதேனு சிந்தாமணி ஏவல் கேட்பச் சிங்காசனாதிபதியாய் வீற்றிருந்த தேவேந்திரமஹா

ராசன் கொலு வீற்றிருக்குஞ் சமயத்தில் திலோத்தமை பரதநாட்டியஞ் செய்யக் கண்களிகூர்ந்து மகிட்சியாய்ப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அவள் தன் வஸ்திரம் நிகழும்படி கரகரவென்று சுழலும்போது அவள் நிதம்பஸ்தானத்தைக் கண்டு தேவர்களெல்லாங் கண்களை மூடிக்கொண்டார்கள். அங்காரகன்மட்டுங் கண்டு புளகாங்கிதம் பொருந்தினான். அது கண்ட இந்திரன் கோபங் கொண்டு அவனைப் பார்த்துக் கொடுமையான மொழி கூறினான். என்னவெனில் முன்னம் மஹா விஷ்ணுவானவர் பிரந்தையை இச்சித்து மானிடவுருவம் பெற்றதுபோல நீயும் இவ்விடம் விட்டுப் பூமியில் மானிடனாவாயென்று சாபமிட்டான். இவளும் உனக்கியைந்த மனைவியாகக் கடவளென்றான். அவர்களிருவரும் வணங்கி மனதிற்சஞ்சலமில்லாது பார்ப்பவருக்கு இப்படிச்சொல்வதுமுறையோ யாங்கள் கடைத்தேறும்வழியருள்செய்வாயென்று வணங்கினார்கள். அப்போதுதணியாத கோபமுடையவனாய் நீவிர் பூமியில் இராசாங்கத்திற் பிறந்து போகங்களை யனுபவித்துச் சிவபெருமானருளினால் வரக்கடவீரென்றான். அப்போது அங்காரகன் ஏவலாளர் நாங்கள் உம்மைப் பிரிந்திருக்கமாட்டோங் கூட வருவோமென்றார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு மதியென்னும் பட்டணத்தில் பிரதீபனென்னும் பெயரையுடைய இராசனுக்கும் அவன் மனைவி கலாவதியென்னும் மனைவிக்கும் புத்திரகாமேஷ்டியாக பலத்தினால் புத்திரனாகப் பிறந்து சித்திராங்கதனென்னும் பேர் வாய்ந்திருந்தான். அவன் ஏவலர் இந்தவரசன் சேனாபதிக்கும் மந்திரிக்கும் புத்திரராகப் பிறந்து வளர்ந்து கொண்டிருந்தனர். உச்சினீநகரத்தில் திடதன்மவிராசனுக்குத் திலோத்தமை பெண்ணாகப் பிறந்து காந்திமதியென்னும் நாமம் பெற்று வளர்ந்தனள். அக்காலையில் தூமராக்கதனென்னும் அரக்கன் விகடாட்சனென்னும் மந்திரியோடு தேவலோகம் போய் தேவர்களோடு போர் செய்தபோது தேவர்கள் தோற்றோடினார்கள். அதைக்கண்ட இந்திரன்றானும் போர்செய்துதோற்றான். பின்னர் பிரதீபவிராஜனிடத்திற் சொல்லி உன்னையன்றி வேறு துணை யெனக்கில்லையென்றான் அந்தப் பிரதீபவிராசன் தன் புதல்வனை சித்திராங்கதனுக்குப் பூமி பரிபாலனஞ் செய்யப் பட்டங் கட்டி வைத்து தான் இரதத்திலேறிக்கொண்டு போய்ப் பெரும் போர் செய்து இருவரும் எமபுரமடைந்தார்கள். உடனே சுக்கிரபகவான் பிராணனீங்கிய சவத்தைத் தேர்ப்பாகனிடஞ் சேர்த்துப் பெண்சாதி பிள்ளையும் பார்க்க அனுப்பினான், சித்திராங்கதன் கண்டு மெலிந்து கடன்களை முடித்தான், அவன்தேவியும் அக்கினிப்பிரவேசமாயினாள் அவன் மந்திரியுஞ் சேனாதிபதியும் இறந்தவுடன் அவரவர்கள் புத்திரரைத்தன் மந்திரியாகவுஞ் சேனாபதியாகவும், வைத்துக்கொண்டு திக்குவிஜயஞ் செய்து, அரசாட்சி செய்துகொண்டிருக்குங்காலத்தில் விஷ்ணு அவதாரமான நாரதமுனிவர் வந்தெய்தினார் இராசனுமுபசரித்து அர்க்கிய பாத்தியமுதலானவை செய்து

பசரித்தான். நாரதமுனிவர் முன்னடந்த காரியங்களைச்சொன்னார். சொல்லியபின் காந்திமதியைவிவாகஞ்செய்து சுகத்தையனுபவித்துப் பத்ராரண்யக் கடவுளைப் பூசித்துச் சாபநீங்கி வருவாயென்று போயினார். அதன்மேல் இராசன் காளைப்பருவமடைந்து எங்குஞ்செயம் பெற்றகாலத்தில் காந்திமதியுங் கண்டு விரும்பினாள், அரசன் பராமுகமானான். அப்போது அரசனைக்கண்டு நீவிவாகஞ்செய்த பெண்ணைப்பதினாலு வருடஞ்சுகமனுபவிக்காமல் பிரியக் கடவாயென்று சபித்தாள். அரசன் கவலையின்றித்தன்னகரடைந்து மந்திரிகளை உச்சினி திடதன்ம மன்னவனிடத்திற் பெண் கேட்க அனுப்பினான். போய்கேட்டவுடன் அவனுங்கொண்டு வந்து விவாகஞ்செய்து கொடுத்தான். சிலகாலஞ்சென்றபின் கர்ப்பமடைந்தாள். வசந்த காலத்தில் பாங்கிமாரோடு மனைவியுடன் ஜலக்கிரீடை செய்தான். மனைவியைக்காணாமல் வருத்தமுற்றவனாகி யரண்மனை போய்ச்சேர்ந்தான் காந்திமதியும் பாதாளத்திலழுந்தினாள். அவ்விடம் நாககன்னிமார் நாகராசாவின் முன் கொண்டு போய் விட்டார்கள் அவனும் இப்பெண்ணின் வரலாற்றை முற்றினுங்கேட்டுத்தன் பெண்போலப்பாதுகாத்தனன். காந்திமதியும் பாலனைப்பெற்றனள், அச்சிறுவனுக்குச் சித்திராங்கதனென்றுநாமந்தரித்து வளர்த்துக்கலாபண்டிதனாக்கி யக்ஷன் மகளாகிய வித்தியாப் பிரவாகியை மணஞ் செய்வித்து அனுப்பினான். காந்திமதியும் மகனுடனும் மருமகளுடனும் நாககன்னியர்சூழ வந்து நாயகனைக்கண்டு அளவளாவி நாயகனுக்கு நடந்த சமாசாரஞ் சொல்லிக் களிகூர்ந்திருக்குங்காலையில் நாயகனும் அந்நாககன்னியர்க்கு மரியாதை செய்தனுப்பியபின் மகனுக்குப் பட்டங் கட்டிவைத்து நாரதர்சொன்னபடி விருத்தாசலம் வந்து மணிமுத்தாநதியாடி பத்ராரண்யம் வந்து தன்பெயராலொரு தீர்த்தமுண்டாக்கி யுதயகாலத்தில் ஸ்நானஞ் செய்து விபூதி உருத்திராட்சந் தரித்துக்கொண்டு பஞ்சாட்சரஞ் செபித்துக்கொண்டு சிவபெருமானுக்குத் தைலமாதியாக சந்தனமீறாக அபிஷேகஞ் செய்து விபூதி உருத்திராட்சந் தரித்துப் பட்டு வஸ்திரமணிந்து அர்ச்சனை செய்து பூசனை முடித்தான் எம்பெருமான் மிகக் களித்து இடபத்தின் மேலெழுந்தருளி நம்மைப்பூசித்தபடியால் சாபம்நீங்கி அங்காரகனாகுவாயென்று திருவாய்மலர்ந்து லிங்கத்தினெழுந்தருளினார். மன்னனும் அங்காரகனாகிப் போயினான். திலோத்தமையுந் தேவலோகஞ்சென்றாள் ஆகையால் இப்பதிக்கு அங்காரகபுரமென்றும் அங்காரகேசனென்றுஞ்சொல்ல விளங்கும் இத்தடாகத்தில் மூழ்கி அங்காரகேசனை வணங்கல் அவர்களுக்கு யெல்லாப் பொருளுங் கைகூடும்.

முற்றும்.

# இராகவன்பூசவிணப்படலம்.

தாரபதிபோற்றியேசாபநீத்துமேல்
விராவியகாதையைவிழைந்துரைத்துமே
யராவணைதுறந்துபோந்தயோத்தியெய்திய
விராகவன்சரிதையையியம்புவாமரோ. [1]

உம்பரின்விபுதருக்கூறுசெய்திடுஞ்
சம்பரனைச்செகுத்திட்டதாரிஞ
னம்பரன்றனையடிபரவுநன்றியா
னிம்பரிற்புகழயோத்தியிலியைந்தனன். (2)

அசரதந்தனைவிண்ணோர்க்காக்குமாமகஞ்
சசரதமாகவேபுரிந்ததன்மையான்
கசரததுரகமாக்கடல்கொள்காவலன்
றசரதனெனப்பெயர்தரித்தமேதக்கோன். (3)

அறுபதினாயிரமாண்டுமாண்டுமே
சிறுவனில்லாமையேதெய்வவந்தனை
யிறுதியின்றிழைத்துமேயேற்றகான்முனி
யுறுமகமியற்றினனுண்மையாகவே. (4)

அன்னதின்புண்ணியப்பெருக்கினாற்றினான்
மன்னகிலாண்டங்கடம்மைவாய்ப்பெயு
முன்னவனென்றிடுமுராரிதானுமே
யன்னவன்சுதனெனவவதரித்தனன். (5)

கராசலங்காத்திடுங்கரியமாமுகிற்
றராதலமீதினிற்சனகத்தன்மையால்
விராவியமறையெனும்வதிட்டமேதக்கோ
னிராமனென்றிடும்பிதானமிட்டனன். (6)

வேறு.

அன்னவன்றன்றம்பியெனவொருமூவரவதரித்தார்
முன்னவன்றன்றேசிகனாற்கலையெலாமுற்றுணர்ந்தான்

சொன்னபுரியெனுமிதுலைப்பார்த்திபன்றன் சுதையென்னு
மின்னவிடையாடன்னைவில்வளைத்துவேட்டனனால். (7)

வேட்டனராகவன்றந்தையாய்வரத்தைமேற்கொண்டே
தேட்டமுறவேதாவமெய்தியகாடிருந்திழையைக் [னின்
கோட்டகனாய்த்தறுகண்ணன்கொண்டொளித்தானிலங்கைத
னீட்டவளைக்கவர்வுறவேண்டுறுமுயற்சியிக்குற்றான் (8)

நெல்வேலிநாட்டிறைவன்கவிக்குலநாதனைநேர்ந்து
கொல்வேலிராவணனைக்கோறல்செயக்குறிக்கொண்டு
நல்வேலியாயறத்தைநான்மறையையியற்றியிட
வல்வாலிதனைக்கோறியிருந்தனனம்மழைக்காலம். (9)

உத்தராபூமியின்கண்ணப்பதியையொருவியே
மித்திரரொடுசெல்லும்வேலைதனிலேஜீவன்
முத்தரார்ந்திடுமகிமைமூவுலகும்பரிபளிக்கும்
பத்திராரணியஞ்சென்றுற்றானப்பருதியான். (10)

அவ்வனத்திலெய்துதலுந்தேவதாராதலினாற்
றிவ்வியமாமணத்தினுக்கேசேணுலகோர்வந்திறுத்தா
ரவ்வியநீத்தருந்தவர்கடவங்குயிற்றுமமைமினா
லெவ்வுலகிலிதற்கிணையுண்டெனவுவகையெய்தியே. (11

புறம்புமயிர்பூவாதகுருளையொருபாற்புகுந்தே
கறந்திடல்போலூட்டுறும்வல்லியத்தின்பாலினைக்காணா
நிறம்பெருகுமான்குருளைநின்றொருபாலூட்டிடக்கண்
டறம்பெருகுமிடமிதெனவறிவுற்றானறிவாளன். (12)

தினமேவும்வெய்யவன்றன்செங்கதிரங்கெய்தாம
வினமேவுபறவையெலாஞ்சிறையினாலெரிமூட்டி
மனமேவுபகையின்றிக்குளிர்காய்ந்துவாழ்தலினால்
வனமேன்மைதனைக்கண்டுமகிழுற்றான்வரிவில்லான். (13)

சிலைநெடியகரந்தரித்துத்திரிவேடரங்கெய்திக்
கொலைபுரியுநஞ்செயிற்றுப்பணவரவின்குழுக்கடமைத்
தலையணையாய்வைத்துறங்குந்தன்மையினாலவ்வனத்தி
னிலைமைதனையாவரேநிகழ்த்தலாந்தகையத்தே. (14)

இத்தகையமேன்மையுறுந்தேவதாருகளியைந்த
பத்திகொளுந்தாவத்தைப்பார்த்துமகிழுறுமன்னன்
முத்தனையமுறுவல்வைதே கியைத்தேடுமுயற்சியால்
சித்தமதிலென்செய்வேனென மருண்டுதெருண்டிலான். (15)

அவ்வேலையங்குறையும் பிரமேசனருளினால்
வெவ்வேலைகழிசுலாமிலங்கைநகர்மேவியே
தெவ்வேலையமர்செற்றுத்தேவியில்லாடனைக்கொண்டு
செவ்வேநீவாழ்கென்றுகாயமொழிசெப்பியதால். (16]

வேறு.

என்றுரைத்திடுமொழியினையிராகவன்கேளா
நன்றுநன்றெனவுளங்களிப்பெய்தியேநாடி
யின்றுநாமெண்ணுங்காலையிலிம்மொழிபோல
வென்றுங்கேட்டிலேமீததிரேகமென்றெண்ணி. [17)

இத்தகைக்கிறும்பூதிவணிருந்திடல்வேண்டு
மெத்தவென்றுசுற்றெங்கினுநாடுறும்வேலை
பத்தருக்கருள்பழுத்தொழுகுறும்பரஞ்சுடரைக்
கர்த்தனாகியவருட்பெருஞ்செல்வத்தைக்கண்டு. (18)

கண்டுகைமுகிழ்த்தஞ்சலிசெய்துகம்பிதத்தைக்
கொண்டுநாத்தழுதழுத்துமிக்கற்புதங்கூர
விண்டுநான்முகன்முதலினரேவரும்விழைந்தே
தொண்டுசெய்திடநின்றவனிவனெனச்சொல்லி (19)

திருவருட்குறியாகியவிறைவர்க்குச்சிறந்த
குருவருட்பிரகாசத்தாற்பூசனைகுயிற்றிப்
பெருவருட்பெறுவேனெனவயோத்தியிற்பிறக்குங்
கருவரப்பெறலுற்றிடுங்காகுத்தன்கருதும். (20(

தனதுபேரினாற்றத்திரிநாயகத்தலைவன்
மனமுவப்பொடுமிறைவனுக்காட்டவும்வானோ
ரனைவரும்மிதிற்படிந்துபுண்ணியமமைவுறவுங்
கனமுழும்பெருந்தீர்த்தமொன்றவ்வுழிகண்டான். (21)

தினந்தினமாகதலிங்கபூசனைசெய்யு
மனந்தனைப்பெறலுற்றுச்சைவாகமப்படியே
முனைந்துநின்றவனுபகரணங்களைமுற்று
நினைந்துபெற்றபின்சபரியைநிகழ்த்துறநேர்ந்தான். [22]

ஞானமாடித்தன்மேனியினறியபுண்ணியமுங்
கானமாடியமணியொடும்புனைந்துசெய்கடன்க
ளானவாறெலாமியற்றியென்னற்புதனுறையுந்
தானநாடினன்செய்முறைவிதியினைச்சார்ந்தான். (23)

எண்ணெயாதியாச்சாந்தமீறாகவேயியற்றும்
வெண்ணெய்பாறதிமதுமுதல்பலவையும்விழைந்து
பெண்ணையாகத்திற்பாகம்வைத்தருள்செய்பிஞ்ஞகர்க்குக்
கண்ணைநீரொடுமாட்டுபுவான்முறைகண்டான். (24)

மஞ்சனத்திருநீரினைத்துடைத்துமெய்வடிவில்
செஞ்செவேதிருநீற்றொடுமணியினைத்திகழ்த்தி
கஞ்சமாதியமலரினாலர்ச்சையைக்கண்டு
மஞ்செழுத்தைநாத்தழும்புறப்பயின்றனனங்கண். (25)

மற்றுமுள்ளனதூபதீபாதியமாற்றம்
கற்றநூனெறிமுறைமையினியற்றியேகனிக
டெற்றியேநிவேதனஞ்செய்துசிந்தைதனைந்துருகிப்
பற்றிலான்பதம்பற்றுளனைப்பராய்ப்பகர்வான் (26)

வேறு.

பிரமன்மாறேடநின்றபிஞ்ஞகப்பிரானேபோற்றி
அரகரபெருமநாயேனிடர்தீர்க்குமண்ணலேபோற்றி
புரகரநீலகண்டபுண்ணியப்பொருளேபோற்றி
வரமிகக்கொடுத்தாளுற்றவள்ளலேபோற்றிபோற்றி. (27]

ஆறெனுமிருதுக்காலமாகவேயமையலாலே
யேறியமானன்றீகால்மேதினிவிண்ணியன்றே
தேறுமாறடியேன்சிந்தைதெருண்டுறவருளுகிற்பாய்
மாறிலாக்கருணைவாழ்வேவரதனேபோற்றிபோற்றி. (28)

என்னெண்ணம்யாதுமின்றியிமைப்பினிழிவதல்லா
துன்னெண்ணம்போலேவியாதுறுதியாயுளதுகொல்லோ
மின்னெண்ணும்பின்னல்மோலிவேதனைவிளம்புநாயேன்
றன்னெண்ணம்விளங்கவீண்டுதழைந்திடச்செய்வைபோற்றி. ()

மீண்டுசெய்வார்க்குநன்குமேவுறப்புரிகிற்பாயின்
றீண்டுசெய்வாருக்கூறுபுரிவதுசுருதியாமோ
கொண்டசேயதுவுந்தானுங்கொண்டாடுவோர்பாலன்பு
கண்டுறுமென்னுமாற்றமெய்யன்றோகருணைமூர்த்தி. (30)

வேறு.

பாதகந்தனைப்பாறவே
சாதகஞ்செயுஞ்சகரா
வேதநான்கும்விளம்பிய
போதனேயருள்போற்றியே. (31)

தேவதாருசெழித்திடுந்
தாவமேவியதற்பரா
தேவதேவசிகாமணி
பூவைநாயகபோற்றியே. (32)

ஏகநாயகவேந்திழை
பாகநாயகபுத்தியோர்
மோகநாயகமுத்தியின்
போகநாயகபோற்றியே. (33)

சித்திராங்கவிசிட்டன்மு
னத்தியேத்திடுநாதனே
பத்திராரணியப்பரா
சத்திநாயகசரணமே. [34]

வேறு.

என்றுநைந்துநைந்துருகியேயின்னணங்கரைத
னன்றுவந்திடுநண்பரையடிமைகொளுத
னன்றுவந்தனனாகியேயாரருள்விளையத்
தூன்றுநன்மைசேர்காயவாஷியிதென்றுசொல்லும். (35)

வியன்கொண்டுற்றமேதருமயோத்தியின்வருவேந்தே
யயங்கொண்டுள்ளத்தின்வேமருன்றுமுன்னலையன்பி
னயங்கொண்டார்ச்சைசையைப்புரிந்திடும்பயனினண்ணுரைச்
செயங்கொண்டுற்றவை தேகியைப்பெறுகெனச்செப்பி. (36)

பொய்குலாவியவரக்கரைப்புடவியிற்போக்கிச்
செய்யுமாமறைமுறைவழிச்சீர்பெறத்திருத்தி
மெய்குலாவுறுமரசர்செங்கோன்முறைவிளக்கி
வைகும்வைகுந்தமேவியேவாழ்கென்றான்வள்ளல். (37)

எனப்பணித்திடக்கேட்டிடுமிராகவன்றானு
மனமுவப்பொடுபன்னிவைதேகியைமருவத்
தனதகத்திடைப்பெற்றனன்போலவேதளிர்த்தவ்
வனமகன்றபின்கவிக்குலத்தொடுசென்றான்மார்க்கம். (38)

அயோத்தியாபுரியையாண்டுவந்த தசரதமகாராசனென்பவர்புத்திரனில்லாமையால் புத்திரகாமேஷ்டியாகஞ் செய்தபடியால் அகிலாண்டநாயக மகாவிஷ்ணு அவதரித்தார். அவர்தம்பிமார் மூவர்பிறந்தார். அவர்களுக்கு நாமம் வசிஷ்டர் இராமர், பரதர், லக்ஷ்மணர், சத்துருக்கனென்று வைத்தார். அந்த ராமமூர்த்தியானவர் மிதுலாபுரியில் வில்வளைத்து சீதையைவிவாகஞ்செய்தனர். பின்பு பிதுர்வாக்ய மாதுர்வாக்கியம் பரிபாலிக்க வனம்போனகாலத்தி லிராவணன் சீதையைத்தூக்கிக்கொண்டு போய் இலங்கையிலொளித்துவைத்த காலத்தில் அவனைக்கொல்லச்சுக்கிரீவசம்பாஷணஞ்செய்து வாலியை வென்று சேனைகளைக்கூட்டிக்கொண்டு தெற்கேசெல்லுமளவில் பத்ராரணியஞ்சென்று யெழுந்தருளி வருத்தமுற்றிருக்கும்போது ஈஸ்வரனருளினால் பகைவரைக்களைந்து சீதையைமீட்டுக்கொண்டுவருவாயென்று மொழிந்த வசரீரியின்றிருவருளையெண்ணிச்சுத்திப்பார்க்கும்போது மகாலிங்கத்தைககண்டு மகிழ்ந்து தனது பேரினால் தீர்த்தமுண்டாக்கி தினந்தினம் மரகதலிங்கத்தைப்பூசைசெய்யும்முறைபோல் ஸ்நானமாடி விபூதிருத்திராக்ஷந்தரித்துப்பஞ்சாக்ஷரஞ்செபித்துப்பூசனைசெய்து தோத்திரஞ்செய்தகாலத்தில் பின்னுமையனருளாலாகாயவாணியா லஞ்சவேண்டாம் பகைவரைச்ஜெயித்துச்சீதையைப்பெற்று நீதிமுறையை நிறுத்தி வாழ்வுற்று வைகுந்தமடையக்கடவை யென்றதைக்கேட்டுத் தென்சமுத்திரமடைந்தார்.

முற்றும்.

# அருச்சுனன்பூசவினைப் படலம்.

---

உருச் ¶சிதம்பரம்போன்றிடையாடனையுன்னி
வரிச்சிறைத்தும்பிமலரினாலெங்கைதாண்மலரி
லருச்சனைக்குகந்துற்றதாமற்புதமுரைத்து
மருச்சுனன்புரிந்துற்றதையறிந்தவாறறைவாம். (1)

கத்துவாருதிசூழ்புவிபெரும்புகழ்கதுவு
மத்தினாபுரிப்பதியினிலிறைவனாயமர்ந்த
முத்தமாலிகைபுனைதருபொருப்புறழ்மொய்ம்பன்
மத்தமால்களிறனையவன்மதிகுலமன்னன். (2)

யாண்டுமெய்ப்புகழ்பெற்றிடுமரசரேறனையா
னீண்டகோலின்னிகரறுவாய்மையினிமிர்ந்தான்
காண்டொறும்வெறுப்புற்றிடவெறுக்கையீகையான்
பாண்டுமன்னவனெனுமபிதானமேபடைத்தான். (3)

செந்துவர்த்தவாய்த்திருமகள்கருணையிற்சிறந்தாள்
குந்தியென்னுங்கோதையினொடுங்கோதைசூழ்கிடந்த
கந்தவார்குழன்மந்திராதேவியைக்களிப்பின்
வந்துமாமணம்புரிந்துவந்திருந்தனன்மன்னோ. (4)

தவமுறுங்கலைக்கோட்டுமாமுனியிடுசாபக்
கவலையுற்றிடுதுயரினன்கருத்தினிற்காமச்
சுவலமுன்னிலனாகியேதாவமேசரித்து
மவலமாயினனில்லவரொடுமியங்கரசன். (5)

காதன்முற்றிடாக்குந்திதான்கன்னியாம்பருவத்
தாதரத்தினிற்றந்தையினேவலினறவோர்
மாதவப்பயனாற்பெறுமந்திரமதனாற்
பூதலத்திடைவரித்தனர்தேவரைப்போற்றி. (6)

போந்தவிண்ணவர்யாதுவேண்டுறலெனப்புகல
மாந்தருட்பெறுகதிதருமகவிலாமையினா

---

¶ சிதம்பரம் - சிதாகாயம்.

ஞர்துதித்தனமென்றனரகமகிழ்ணெண்ணிக்
காந்தாராகியேயிருவரைப்புணர்ந்தனர்களித்து. [7]

தருமன்வீமனோடருச்சுனனனுசராய்ச்சாற்று
முரிமைபெற்றிடுநகுலசாதேவனென்றுரைக்கு
நிருபரேறனருதித்தனர்நீணிலமிசைச்சற்
கருமம்யாவுமைந்தாகவேமுளைத்திடல்கடுப்ப [8]

ஐவருக்குளேதலைமைமிக்குயர்தரச்சமைந்தே
மெய்வருக்கமும்புகழ்மையுங்கல்வியும்விறலும்
பொய்வருக்கமொன்றில்லராய்மானமும்பூண்டா
ரைவருக்குநேர்மூவரைப்புகன்றிடலாமோ. [9]

அனையர்யாவருங்குருமொழியமைந்தனராகி
வினையுந்தூய்மையும்விழுப்பமுமொழுக்கமுமேன்மே
னினையுநீதியுநெறியுநன்னிலைமையுநேர்ந்தே
யினியபூசனைப்பத்தியுமீறிலாதியைந்தார் (10)

சாயமின்னதென்றியாவருமறிவருந்தகையோர்
மேயகாவலர்யாவரும்விழைதரவில்லை
மாயிரும்புவியினில்வளைத்தாயபாஞ்சால
தேயக்கொற்றவன்சிறுமியைத்திருமணஞ்செய்தார். (11)

மாதுவாக்கியமுண்மைபெற்றிடவுளமதித்துச்
சாதுவாய்ந்துளோரைவருமொன்றியேசார்ந்தே
கோதிலாவொருமனத்துடனைம்பொறிகூடு
மேதுவென்னவேமேவினரன்னவட்கியைய. (12)

சிறிதுநாளகன்றிட்டபின்வியாசனார்சேர்ந்து
பிறிதொர்மாற்றமாய்ப்பேர்க்கொராண்டன்னவெய்வளையைச்
செறியவாழ்விரேற்சீற்றமில்லீரெனச்செப்பி
நெறியமைத்தனர்நின்றனரவருமங்கிலையே. (13)

ஒவ்வொராண்டதற்கொருவர்பாலிருந்துமற்றோராண்
டவ்வரம்பெண்செல்லுமப்போழ்தினிலாண்டி
லெவ்வமேகமற்றையரைசெஞ்சினுமிணங்கேனென்
றவ்வெரிப்புகழுஞ்சுபுவாழ்குவலவனே. (14)

ஆயகாலையிற்றருமரோடுறைந்திடுமொண்டிற்
சேயரிக்கருங்கண்ணிசிற்றடியினைத்தெரிய
மாயனேயனாகியகிருட்டினனிருமலர்க்கண்
பாயநோக்கினனென்கொலோபளகெனப்பரிந்தான். (15)

பார்த்தனோக்கிடுபளகினாற்பரிவுளனாகி
மூத்தவன்றிருத்தாட்டுணைமுளரியைமுடிமேற்
சாத்திநீக்குறும்வகைமைபெற்றோவெனச்சாற்றத்
தீர்த்தயாத்திரைசெய்கெனமொழிதலுந்தெருண்டான். (16)

காண்டிபச்சிலைதரித்திடுவிசயனாங்காலை
யாண்டுநின்றகன்றலகிலாநதிகளுந்தலமுங்
காண்டொறும்படிந்தானந்தக்கட்புனலுகுப்பப்
பாண்டிநாட்டுளநதியெலாந்தலமெலாப்படர்ந்தான். (17)

அத்தினாபுரிக்கதிபனுமவனுறைந்தகன்று
முத்திலங்குமுத்தாநதிகண்டதின்மூழ்கிச்
சித்தியாவையும்பரவினர்க்களித்திடுஞ்சிறந்த
பத்திராரணியத்தினிற்புக்கனன்பரிவால். (18)

எங்குமேசிவதரிசனமின்றியேலெவையு
மங்கையாலள்ளிக்கொண்டுணாவிரதத்தினமைந்தான்
சங்கரன்றனையன்றுகாணுதவிச்சமுக்கா
னுங்கிடேனென்றுமென்றுதன்னுளத்தொடுநுவன்றான். (19)

பூசைசெய்திடாவுணவதுபுழுப்பிணமென்றே
மாசினூலெலாமுரைத்திடும்வாளினிற்றீயி
னாசமாவதுநலமஃதின்றெனினொடி
னீசர்மேனியைத்தீண்டிடினிழுக்கெனநேரும். (20)

வேறு.

பூசனைசெய்யாக்கையும்புராந்தகன்புகழையெண்ணிப்
பேசுதலிலாதவாயும்பேறெனப்பெற்றுநின்ற
நீசரானவர்கடம்மினேயமாவனத்திருந்து
கூசுதலிலாக்குரங்குநன்றெனக்கூறலாமால். (21)

பொன்னையேபொருவுவானைப்புண்ணியப்புறவினிற்கண்
டன்னையேயப்பனையென்னருங்குலமணியேயன்பி
லென்னையேயென்னையேநீயென்னையேயாள்வேண்டி
முன்னையேவந்தாய்கொல்லோவென்றனன்முராரிநேயன். (22)

பற்குனன்றானுமிந்தப்பத்திரத்தாவமேவு
முற்குணத்தண்ணலுக்குமோரவிநீராட்டவெண்ணி
விற்குணன்னலம்பெற்றோங்கும்வேயுறுகாண்டபத்தாற்
றெற்கினின்றுத்தரத்திற்றொட்டமண்டெறித்தானன்றே. (23]

தாண்டிரடடந்தோட்சேயோனிராகவன்றொட்டகூப
மீண்டியயாவுமாவியாகவேயியற்றியாரு
மீண்டிடமென்னுநாகருலகின்றேறிமீளக்
காண்டிபதீர்த்தமென்னக்கண்டனன்கரைந்தாருமம். (24)

தெள்ளூற்றவாவியாடித்திப்பியவெண்ணீறாடி
விள்ளூற்றவுருத்திராக்கமாலிகைமெய்யணிந்தே
யுள்ளூற்றைந்தெழுத்துமோதியொழுகுறுநியமமுற்றிப்
பள்ளித்தாமந்தெரிந்துசபரியைப்பண்ணலுற்றான், (25)

அண்ணலுக்கபிடேகாதியருச்சனையாவுமாற்றிக்
கண்ணிறைகனியைப்பாகைக்கன்னலைக்கனிவுள்ளூறும்
புண்ணியப்பொருப்பையாதிப்பொருளினைப்பூரணத்தி
னெண்ணியவிளக்கைப்போற்றியேத்துறலியம்பலுற்றான். [26]

வல்லருள்வல்லாய்போற்றிமயலுறவல்லாய்போற்றி
புல்லருட்செல்லாய்போற்றிபுரிசடைச்செல்லாய்போற்றி
நல்லருணல்லாய்போற்றிநாடிடநல்லாய்போற்றி
பல்லருட்சொல்லாய்போற்றிபழிப்புரைசொல்லாய்போற்றி.[]

இன்னதீர்வரங்கள்யாவுங்கேட்டியானிறப்பனென்னில்
பின்னுறுபவத்திலூழாய்ப்பெறுவரந்தருவனென்று
லென்னநம்பிக்கையுன்பாலீயினிப்போழ்தேயீவாய்
பின்னையானறிவன்கொல்லோவென்னுடைப்பெருமபோற்றி[]

நண்ணுறும்பூசங்கூடுநவில்பிரதோடமான
புண்ணியகாலந்தன்னிற்போற்றிடப்பெற்றேனென்னுக்

கண்ணியதனஞ்சயன்றான்களித்தவனுறையுங்காலை
யண்ணல்பாலன்புநீங்காவார்வத்தினகன்றிலானால். (29)

பற்குனனதிநீராடிப்பற்குனேசனைப்பணிந்தே
நற்றுணைத்தாற்பிடித்தபிடியன்னநல்குவாரேல்
சற்குணம்யாவுமொன்றிச்சந்ததியுள்ளாராகிச்
இற்குணவறிவுற்றெல்லாச்சித்தியாமுத்தியாமால். (30]

சிறப்புற்றோங்கிய அத்தினபுரியென்னும் பட்டினத்தில் வாழ்கின்ற பாண்டுமஹாராஜன் குந்திதேவி யென்பவளையும் மந்திராதேவியையு மனைவியராகி வாழ்ந்த நாளில் கலைக்கோட்டு மஹாரிஷிசாபத்தால் மனைவியர்சுகமடையாமலிருந்தான். குந்தியானவள் புருஷனுத்தரவின் மேல் மந்திரத்தால் தேவரை வரவழைத்தாள். அவர்கள் அனுக்கிரகத்தால் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவனிவர்கள் பிறந்தார்கள். பாஞ்சாலதேசத்தரசன் மகள் திரௌபதியை வில்வளைத்தெய்து விவாகஞ்செய்து மாதுவாக்ய பரிபாலனைப்படியிருந்தார்கள். சிறிது காலங்கழித்து வியாசரிஷிசேர்ந்து மொழிந்தவரம்பின்படியொவ்வோராண்டுக்கு ஒவ்வொருவராகி யிருந்து மற்றையாண்டுக்கு அக்கினிமூழ்கி மற்றையரை நெஞ்சினாலுந்தீண்டேனென்னுமுறையின்படிக்குவாழ்வுற்றிருந்தகாலத்தில் தருமரோடைந்திடும் வருஷத்தில் பாஞ்சாலியின்றிருவடியை அருச்சுனன் கண்டு பயந்து நடுங்கித் தருமரை வணங்கியிச்செய்தியைச்சொல்லி நின்றான். அவர் தீர்த்தயாத்திரை செய்கெனச்செப்பினார். அருச்சுனன் அனேக நதி நீராடி அனேக சிவதலங்கள் தெரிசித்துப் பத்திராரணியமடைந்து சிவதலந்தெரிசனையுடன் பூசனையில்லாமலுண்ணாதவிரதமுடையவனானபடியால் என்செய்வேனென்று வருந்தினான். அப்போழ்து பிரமதேவன் வரம்பெற்ற மஹாலிங்கத்தைக்கண்டு மகிழ்ந்து தீர்த்தமுண்டாக்கி யதில் ஸ்நானஞ்செய்து பூசைபுரிந்துவிட்டு நீங்காமல் சிலநா ளவ்விடத்திலேயிருந்தான்.

முற்றும்.

# வேதாளவுருநீத்தபடலம்.

---

தாதாருந்தொடைபூண்மார்பன்சனிப்பிரதோடந்தன்னின்
மாதாரும்பாகத்தெந்தைமலரடிக்கர்ச்சைசொற்றும்
பாதாளம்வானம்போற்றும்பத்திரவனத்தில்வந்த
வேதாளவுருநீத்திட்டமேன்மையையினியம்புவேனால். (1)

அங்கண்மாஞாலந்தன்னிற்பழிமொழியமையத்தக்க
சிங்கமேயனையமன்னனுத்தரதேயத்துள்ளான்
மங்கையர்போகமென்னும்வாரிதிதனிலழுந்திச்
சங்கையில்லாதமுத்தியிஃதெனச்சமைந்தான்மன்னோ. (2)

தன்மஞ்செய்தார்கெட்டார்கள்தன்மமேசற்றுமின்றி
வன்மைசெய்தார்வாழ்ந்தார்களென்பதைமனத்திலெண்ணி
யன்வயப்படுத்திநோக்கமாட்டாதவறிவனந்தோ
தன்மசத்துருவாய்மன்னர்வழியினிற்சார்ந்துற்றானால். (3)

அன்னவனுமமூர்க்கனெனச்சொலுமபிதானத்தான்
முன்னவரறம்புரிந்தோர்பலருமேமூடரென்றே
துன்னலனாகிவாவியாவுமேனார்த்துநின்று
னென்னவன்செய்திதன்னையியம்புறத்தக்கதன்றே. (4)

உலகினோருண்டென்றேதுமொன்றினையூக்கங்கொண்டே
யிலையென்பானலகையாவனென்பதுமாறிடாமல்
கலைவலோர்சாடத்தாலேகாசினியதனின்மீது
பிலமெனவாயமைந்தபேயுருவாயினானால். (5)

அன்னவனெங்குஞ்சென்றேயலகையாய்த்திரியலுற்று
மின்னிடையார்கடம்மைவேற்றுருமிகப்படுத்தி
யின்னமுங்குணம்போகாமலிடுகொடுபுகையுண்டோவென்
றுன்னியேதருமீதேறியுற்றுநோக்குபுவியங்கும். (6)

ஆண்டகையோர்கடம்மைத்துறக்கனாவாக்கலுற்றும்
வேண்டியதீமையாவுமிக்குறவேவிளைத்தும்

பாண்டியன்றன்னைப்பற்றிப்பருவரற்புரிந்ததேபோற்
பூண்டுறுதுயரமாற்றிப்பொள்ளெனச்சரிக்குமன்றே. (7)

அத்தகைபுரிவேதாளமவ்வடவியினிற்புக்குப்
பத்திராரண்ணியத்தின்புண்ணியப்பான்மையாலே
சித்தமீதறிவுதோன்றித்தெளிவுமிக்குடையதாகிப்
பித்துறுகுணமனைத்தமயற்குணம்பிரிந்ததன்றே. (8)

மூர்த்திதற்றலம்விசேடமுக்கியமிவணென்றுன்னிப்
பார்த்தனைக்கண்ணிறைக்கிப்பருவரல்யாவுங்கூறி
நாத்தழும்புறத்துதித்தேத்திகழுற்றுநீங்கி
யார்த்தியினவன்றனைத்தாளிறைஞ்சிநின்றயர்ந்ததன்றே. (9)

ஆரெனப்பற்குனன்றனைமையுறவுசாவலோடும்
பாரிடத்தலைமைபெற்றேபழிப்புறுமவ்வேதாள
நேருறநின்றுமுன்னர்நிலைமையையன்றன்றேறிச்
சீரிதென்றுளம்வியப்பச்செப்பியேபின்னுஞ்செப்பும். (10)

சாதகஞ்செய்வையேவிச்சாதகவுருவைவிட்டுப்
பேதகமாகியுய்வேனிலையெனிற்பீழைகொள்வேன்
பாதகநீக்கியாளுமைம்புயற்றோழனையென்
றோதகமகிழக்காட்டுப்பற்பலவிசைத்ததன்றே. (11)

என்னெனக்கேட்டலோடும்வாவியொன்றீகையென்னி
னின்னதுகருணையாலேயாடிநானீப்பனென்றே
முன்னதுமொழிந்துநிற்பமுதலவனருளையுன்னி
யின்னலஞ்செப்பிநின்றானெண்டிசையனைத்தும்வென்றான். (12)

புகட்சமதக்கினிப்பேர்புண்ணியன்றவம்புரிந்து
மகிட்சிகொள்வன்மீகத்தின்வரையினைமுவில்லாக்கி
நகச்சிலையாளிக்கொன்றுநாரணற்கொன்றுநல்கி
மிகச்சிலைகாண்டபத்தையெனக்கருண்மேன்மைதன்னால். (13)

காண்டிபந்தனைக்கரத்திலெடுத்ததுகருவியாகத்
தோண்டிறநதியாற்குத்திமண்ணினைத்துகளாம்வண்ணங்
கீண்டியற்றிட்டதாலேகெழுமியவிதற்குநாமங்
காண்டிபதீர்த்தமென்றேகழறுவர்பலருமம்மா. (14)

இப்படியோர்கள்முற்றுமெய்தினுமிடங்கொடுக்கு
மெய்ப்படுதடத்தினுடுகெனக்கிருட்டினன்விளம்ப
வப்படிவப்பேயாடவவ்வுருவகன்றுமுன்போற்
செப்படிவித்தைகற்றோன்போலவேதிகழ்ந்துநின்றான். (15)

முன்பழிநீங்கிவேதாளத்துருமுயங்கிநின்ற
தன்பழிநீங்கியேதன்றமர்தமைச்சார்ந்துநின்ற
வன்பழிநீங்கித்தூயபுனிதத்தைமருவலாலே
பின்பழிநீங்காதுண்டோபெட்பினிலாடுவோர்க்கே. (16)

கண்டபோதறங்களெய்துங்கருதரும்புனல்காத்திற்
கொண்டபோதர்த்தமெய்துங்குலவுறும்வாயிற்பெய்தே
யுண்டபோதின்பமெய்துமுண்மையிதுணுங்காலை
விண்டபேரின்பமென்னும்வீட்டின்பமேவுமன்றே. (17)

காண்டிபத்தலைவனந்தக்காவலன்றன்னைநோக்கி
யீண்டுநீர்குடைந்தெம்மான்றுளார்ச்சையையியற்றுகென்ன
வேண்டுறுமவனும்யான்செய்புண்ணியம்விளைந்ததென்னாக்
காண்டொறும்விழிநீர்சோரமூழ்குபுகடன்கள்கண்டு. (18)

வனத்தினுவிறைவற்காட்டிமதுவைவண்டுண்ணுமுன்னம்
புனத்துறுமலர்கைக்கொண்டுபோற்றியர்ச்சனைபுரிந்து
சினத்துறுகுணங்களானதீக்குணம்யாவுநீங்கி
மனத்துறுமிலிங்கமென்னப்பராய்த்துதிவழங்கலுற்றான். (19)

திங்களங்கலையாய்போற்றிதிருவருட்கலையாய்போற்றி
பங்கயற்றலையாய்போற்றிபாவியுற்றலையாய்போற்றி
தங்கமாஞ்சிலையாய்போற்றிதருகணைச்சிலையாய்போற்றி
யெங்கள்பால்மலையாய்போற்றியிரசிதமலையாய்போற்றி. (20)

வலமழுப்படையாய்போற்றிமறுபிறப்படையாய்போற்றி
நலமுகிற்சடையாய்போற்றிநாணுநச்சடையாய்போற்றி
உலகெலாமுடையாய்போற்றிஒன்னலர்க்குடையாய்போற்றி
அலைகொள்மால்விடையாய்போற்றியணிகொளர்விடையாய்
போற்றி.

கலமவிதுதிபுரிந்தேநாதனுக்கன்பதாகி
தலவிசேடத்தையுள்ளித்தணந்துறேனெனவேசாற்றி

யலகினாளவணிருந்தேயைம்புலப்பகைகடந்தே
மலமிலாவழியாமுத்திவாழ்வினின்மருவினானால். (22)

வேறு.

அன்னபின்னர்கிரீடியமைவில்லே
துன்னும்வாவியைத்தொட்டதுபேயுருத்
தன்னைநீக்கிற்றெனத்தருக்கெய்தினான்
மன்னும்வில்லும்வளைவற்றுநீண்டதே. (23)

வில்லைநோக்குவன்விற்பிடிக்கும்புயக்
கல்லைநோக்குவன்காண்டிபவாவியி
னெல்லைநோக்குவனிவ்வுபகாரமாஞ்
சொல்லைநோக்குவனெஞ்சந்துளங்குவான். (24)

இல்லமைந்தமகிமையுமெங்கினுஞ்
சொல்லமைந்தபுகழ்மையுந்தோன்றுதல்
வில்லமைந்திடுமேன்மையன்றோவென்று
னெல்லமைந்தபுருவத்துநெற்றியான். (25)

மோனமட்டும்வளர்ந்தமுகிர்ச்சியான்
வானமட்டும்வளர்ந்தவயத்தினா
னானமட்டும்வளைத்திடவும்மவ
மானமட்டுமிகவும்வளர்ந்ததே. (26]

பார்க்குணல்லவர்நூல்கள்பகரினு
மார்க்கமெய்தும்வழிபலகாட்டினு
மார்க்குமேவணங்காதவறிவிலா
மூர்க்கர்புத்தியைப்போலமுறைத்ததே. [27]

மொய்த்தபேயுருமாற்றுபுமுன்னுரு
வித்தலத்திலளித்தவியைபினாற்
கைத்தலத்துறுகாண்டிபநன்குற
வைத்துவாங்குவனென்றுமதித்தனன். (28)

கல்வளைத்தவரற்கருள்கான்முளை
சொல்வளைத்தகணேசன்றுணையடிக்

கெல்விளைக்குமலரிட்டிறைஞ்சினு
னல்வளைக்கண்ணனச்சியதோழனே. [29]

வில்வளைத்தருவொன்றுறவேண்டலும்
புல்வளைத்திடல்பொல்வளைத்தீர்ந்ததால்
வில்வளைத்தவிநாயகனென்றினஞ்
சொல்வளைத்துவிண்ணோருந்துதிப்பரால். [30]

உத்தரதேயத்தில் பொருந்திய தன்மசத்துருராஜனென்பவனொருவனுள்ளான். அவன் போகமேமுத்தி தேகமேசித்தி யென்பவன். மஹாமூர்க்கனாகி முன்னோர் தருமஞ்செய்தவர் யாவருமூடரென்பவன். எங்குமுள்ள தடாகங்களையெல்லாந் தூர்த்து அக்கிரமித்தவனானபடியினாலே பேயுருவாயினான். பின்னுமவ்வுருவடைந்தவேதாளமானது உலகத்திலே பெண்களுருவத்தை மாற்றி புருஷர்களுக்குத் துன்பமுண்டாக்கித் துற்கனவுமுதலானதுஞ்செய்து சுடுகாட்டிலே போய் மரத்திலேறிப்புசிக்கிறதாவென்று பார்க்கும். இப்படிப்பட்ட வேதாளமானது பத்திராரணியமென்னும் வனத்திலே வந்தவுடனே அந்த வனத்தின் புண்ணியத்தால் நல்லறிவுதோன்றி மூர்த்தி விசேடந் தலவிசேடமிவ்வுழியுள்ளதென்று நினைத் தருச்சுனனைக்கண்டு வணங்கியது. அவன் ஆரென்னலும் தன்விருத்தாந்தத்தைச் சொல்லி யிவ்விடத்தில் தீர்த்தமொன்று தந்திடுவையேல் என் வேதாளவுருநீங்கிப் பிழைப்பேனென்றது. அருச்சுனன் சமதக்கினிமஹாரிஷி தவஞ்செய்த விடத்தில் புற்றுண்டாகி அதில் வளர்ந்த மூங்கிலை மூன்று வில்லாக்கி ஒருவில்லைப்பரமசிவன் பினாகமாய்ப்பெற்றார். ஒருவில்லை மஹாவிஷ்ணு சாரங்கமாய்ப்பெற்றார் ஒரு வில்லைக் காண்டீபமாய் நான் பெற்றேன். அதினால் தோண்டிய தடாகமிது. இதில் ஸ்நானஞ்செய்யென்றான். உடனே ஸ்நானஞ்செய்த மாத்திரத்தில் வேதாளவுருவும் முன்பாவமுமெல்லாம் நீங்கி மன்னவனாகி நின்று அருச்சுனனுத்திரவின்பேரில் மஹாலிங்கத்தைப்பூசைபண்ணி ஞானம் பெற்றுப் பேரின்ப மடைந்தான். இப்படிப்பட்ட மகிமையெல்லாமிவ்வில்லாலமைந்ததென்று அருச்சுனன் மமதையடைந்தான். மமதையால் வில்வளையாமலிருந்துவிட்டது. அருச்சுனன் விநாயகரைப்பூசைபண்ணி வில்வளைத்துக் கொடுக்கப்பெற்றான். அதனால் வில்வளைத்தவிநாயகரென்று தேவருந்துதிசெய்கின்றார்கள்.

முற்றும்.

# துர்ச்சகன்பூசவினைப்படலம்.

முச்சகநிழற்றுமுழுமதிக்குடை
நச்சினன்பெயுருநண்ணுங்காணைதர
னிச்சயநீங்கியவகைநிகழ்த்திமேற்
றுச்சகன்றன்மையைச்சொல்லுவாமரோ. (1)

கிழவனுங்கிழவியுங்கெழுபபேறுறும்
பழமலையெனுமபிதானம்பற்றிய
வழங்கியநகரதிலரசுசெய்திட
விழைவுறவாழ்ந்தனன்வேந்தர்வேந்தனே. (2)

துர்ச்சகனெனுமபிதானந்தன்னினான்
விச்சையர்யாவரும்வணங்குவிச்சைய
னச்சயமகடனைப்புயத்தமைத்திடு
நிச்சயநீதிச்செங்கோனிகழ்த்துநாள். (3

காட்டைநாடாக்கியாள்கின்றாவலன்
சேட்டையோர்தமைத்தெறுஞ்சியமன்னவன்
கோட்டையேய்கசரதகுரகதங்கொடு
வேட்டையாடுறமனம்வேட்டுற்றனன். (4)

கானகஞ்சென்றவன்கடுங்கண்வெங்கைமா
மானகமரையரியாளிவாளிநற்
சானகிநாயகன்போன்றுதாவியே
வானகமெய்திடும்வண்ணமாட்டினான் (5))

அத்தகையாகவேபத்திராரணி
யத்தினிற்புக்குளாடுங்காலையி
னித்தரைதூக்குறுகேழலென்னவே
சத்திகொளேனமதொன்றுசார்ந்ததே. (6)

தாவியமன்னவன்றனுவைவாங்கியே
யேவியசரமெலாமெய்யிலெய்தலு
மேவியகேழலின்மெய்யினின்றுமே
யாவியேகுற்றிடுமமயமானதே. (7)

அந்நலிவுற்றுமேயாலயம்புகுந்
தின்னலின்வலம்வந்தங்கெய்த்திறந்ததால்
பன்னருமறைமுடிப்பரசிவப்பிரான்
றன்னருள்விளைந்ததுதலத்தின்மேன்மையால். (8)

எம்மையுஞ்செய்திடுபாவமேவையுந்
அம்மருவுற்றிடுசுடரிற்சுட்டிட
விம்மணித்தேரின்மீதேறுகென்னவே
மெய்ம்மைகொள்சிவகணநாதர்மேயினார். (9)

தாலமேல்வீய்ந்திடத்தக்கபோர்களைச்
சாலவேதண்டனைதாக்கத்தக்கவ
ராலமேயுருவுகொண்டனையமேனியர்
காலனார்தூதருங்கடுகியெய்தினார். (10)

வேறு.

கடிகொளிதழிச்சடையினார்கருணைக்கணநாதரைநோக்கி
யடிகண்மீர்நீரிவற்காகவணுகியழைத்தலறமாமோ
படியிலொருநன்றியுஞ்செய்யாப்பாவியிம்மையூழ்வினையாற்
§கிடியினுருவையடைந்தவனுக்கென்னோபுனிதங்கிளர்த்துவீரால்

தெய்வபத்தியுடைமையினோசிவபூசையிற்றுஞ்சிறந்ததுவோ
பொய்யிலாதசிவநாமஞ்சரிதங்காதிற்புகுந்துளதோ
மெய்யதாமெங்கோமான்றன்விழவுகண்ணிற்கண்டுளதோ [னார்.
வையநீர்வந்தருளுறும்புண்ணியமென்கொல்லோவறையினென்

என்னமொழிந்தநாதர்தமைநோக்கிக்கணத்தரியம்புவார்
முன்னமயன்மாலறிவரியமுதல்வனுழியில்வலம்வந்திங்
கென்னையாளுமெந்தைமுனமுயிரையிகக்குமியல்பினாற்
பன்னுமேலாஞ்சிவலோகபதவியென்றுபகர்ந்துமே. (13)

சின்னமுழவீர்கிற்பிரெனிற்றிருக்கண்கண்டுந்தீங்குண்டோ
நன்னராய்நீர்சென்மினென்றேநாதர்தம்மைநவின்றேவிப்
பொன்னின்மணித்தேர்மீதேற்றிப்புலவர்பூமாரிகள் பொழியச்
சொன்னசிவலோகத்தின்பாலுய்த்தார்பதவிதுய்ப்பவே. (14)

§ கிடி—பன்றி.

விருத்தகாசிவேல்வேந்துப்வியந்தகேழல்விநோதத்தைப் [லாங்
பொருத்தமாக்கண்களிற்கண்டுமிகவும்வியந்திப்புதுமையெல்
கருத்திலுன்னிப்பத்திராரணியமேவுங்கடவுளடி
திருத்தமாச்சிந்தையிற்பதித்தர்ச்சபரிசெய்யத்தேர்ந்துற்றான். ()

அளவிலாதுவப்பெய்தியலகிலாநாளங்கிருந்து
களவிலாதநெஞ்சுளனாய்க்கருதியுள்ளங்கனிவுறீஇப்
பளகிலாதபூசைபுரிபண்பின்ஞானபக்குவனாய்ப்
பிளவிலாதவொன்றியொன்றுநிலையாம்வாழ்வுபெற்றிட்டான். ()

பழமலையப்பரும் விருத்தாம்பிகையம்மனும் வாழும் விருத்தாசலத்தில் தூர்ச்சகனென்னுமொரு அரசன் வாழ்ந்துகொண்டிருந்தான். காட்டை நாடாக்கியாள்கின்றவன் ரதகஜதுரகபதாதிகளோடு வேட்டையாடக் கானகம்புகுந்து வேங்கை, சிம்மம், மான், கரடி, யானைகளைக்கொன்று விண்ணுலகமனுப்பினான். அந்தப் பத்திராரணியம் புகுந்து வேட்டையாடுங்காலத்தில் பூமியைத்தாக்கிய இரணியாக்ஷனாகியவராகம்போல் ஒருகாட்டுப்பன்றி வந்தது. அதைக்கொல்லும்படிப்பாணத்தையெய்தான். பிராணன்போகுஞ்சமயத்தி லாலயத்தைச்சுற்றி வலம் வந்து இறந்தது. உடனே பத்திராரணிய விசேஷத்தால் சிவகணநாதர்வந்து தேரிலேறு சென்றனர். எமதூதர் வந்து மஹாபாவஞ்செய்தபடியால் பன்றியினுருவமமைந்ததை நீங்களழைப்பது சரியோவென்றார். கணநாதர் சிவாலயத்தின் முன்னம் உயிர் நீங்கியபடியால் எமலோகங்கிடைக்காது. நீவிரினி நின்றால் தெண்டனை யடைவீர் போங்களென்று அனுப்பிச் சிவலோகபதவிகொண்டுசேர்த்தார். இதைக்கண்ட விருத்தகாசி யிராசனும் இப்படிப்பட்ட விசேஷ புண்ணியஸ்தல முக்கியத்தைக்கருதி பலநாளங்கிருந்து சிவபூசைபண்ணிப் பூசாபலத்தினால் ஞானம்பெற்றுப்பேரின்பமடைந்தான்.

முற்றும்.

# செமதக்கினிமுனிவர் பூசனைப்படலம்.

---

கரிபகேழலுருவேட்டைபுரிந்தவிருந்தகாசிநகர்ப்
பிரியமுற்றதுர்ச்சகமன்னவன்றன்காதைபேசினோந்
தெரியலணியுங்கருங்கூந்தற்றேவியெம்மோய்சிற்பரைதாட்
குரியசெமதக்கினிப்பெயர்கொளுறுவன்காதையோதுவாம்.(1)

வானநாட்டிலரசுரிமைமன்னன்றெய்வத்தருநிழலிற்
சேனையொடுசீயத்தணையிற்சிறப்பின்மேவுமமையத்தி
லூனநீக்கியருள்குருவுமவுணகுருவுமொருங்கெய்தி
யேனையோருமனக்களிப்புற்றிருந்தாரிருந்தவெல்லையின்வாய். ()

வேறு.

புரந்தரன்சபையினுற்றோர்பலரையும்பொதுவினோக்கி
நிரந்தரங்கடல்சூழ்வைப்பினியமநல்லொழுக்கம்பெற்றோ
தரந்தனிலுயர்ந்தோர்யாரேதையலர்வலைபடாது
துரந்துளாரெவரேயென்றுவினவினன்சுங்கனம்மா. [3]

என்றலும்வெள்ளிக்குப் பொன்னிளைக்குமோ வெனுஞ்சம்வாத
மென்றுமேகொண்டதேவகுருவினுவிடையியம்பு
நின்றுநீபுசாவலொன்றுமரிதலயோகிக்கெல்லா
நின்றெனமறைகள்யாவுமியம்புவதறிதியென்றான். (4)

பத்திராணியந்தன்னிற்பதிதருமூர்த்தபாகென்
றெத்தராதலமும்போற்றுமிருடிமாமுனிவனீன்ற
முத்தரானவருக்கெல்லாமுதல்வனென்றுரைக்குஞான
சித்தராஞ்செல்வன்றன்னைமாயையிற்செப்பற்பாற்றோ. (5)

அச்செமதக்கினிப்பேர்முனிவனோராகயாரை
முச்சகந்தன்னிலுள்ளதூஉணர்ந்தோரைச்சொல்வா
மச்சுதன்பரசுராமனாகவேயவன்பாற்றோன்றி
யிச்சையாறொழுகியெந்தவுலகமுமிறைஞ்சநிற்பான். (6)

நன்னிலைநிலைமையிக்கானகமகடாளுக்கன்பா
புன்னியமலர்கொண்டர்ச்சித்தன்றியேயுண்ணுறுதா

னன்னியமின்றியெந்தவுலகமுமாக்கவல்லான்
றன்னிலையின்னதென்னயாவரேசாற்றவல்லார் (7)

என்னவேபொன்னோன்கூறவிறையுடல்பாதியானான்
பன்னுமானெடுமாலானோன்பங்கயன்சிரமொன்றற்றான்
கன்னல்வேள்பகழியாலேகற்பகத்தரசன்காணப்
பின்னுமாயிரங்கண்பெற்றாரெனிற்காமம்வெட்புறார்யார். (8)

ஈங்கிவன்விலக்குவானென்றியம்பியசுங்கன்கூறப்
புங்கவர்குரவனோக்கிப்புகலுவானவன்காமத்திற்
றங்கிநன்னியமநீங்கில்யான்செயுந்தவத்திற்பாதி
சிங்கவில்லாதளிப்பெனென்றுரைசெப்பினால். (9)

என்னவேபொன்னோன்கூறவிவ்வுரைதோல்வியாமேற்
பொன்னெனதடிமையின்றேற்புகலும்யானடிமையென்று
மன்னியவெள்ளிகூறமற்றவனொருப்பாடுற்றா
னன்னதுகண்டுபுத்தேளனைவருமகங்களித்தார். (10)

வெள்ளிதன்மாயையாலேவிளங்கிழைநால்வர்தம்மைப்
பொள்ளெனப்படைத்தற்றானப்பொன்னனையாருந்தோன்றி
யெள்ளவில்லடியிறைஞ்சியென்பணியெங்கட்கென்றார்
கள்ளமேயுருவுகொண்டகாரிகைதம்மைக்காணா. (11)

மாதர்மீர்தேவதாருவனத்திடையூர்த்தபாகுக்
காதரம்பெருக்குஞ்சேயினருந்தவமதனைப்போக்கி
மாதரார்மயலில்வீழச்செய்திவண்வருகுவீரேற்
சீதரற்கரும்வரங்கள்சிறந்திடத்தருவனென்றான். (12)

அம்மொழிதலைமேற்கொண்டேயாயிழையார்கள்யாருஞ்
செம்மையினெறிக்கொண்டேகிப்பத்திராரணியஞ்சென்று
தம்மனமெனமருட்டச்சஞ்சரித்தற்றநோக்கி
மெய்ம்மைசேர்முனியைக்காணவிடுதி யொன்றமைத்திருந்தார்.

அதிகமாமாயவித்தையற்புதமிக்கோராகித்
துதிபெறுதெய்வத்தன்மைச்சுந்தரவுருவமாகிச்
சதிநயமிகவேபாடித்தத்துவமொழிகளாடிப்
புதியதாமமிர்தமுண்டுபோந்ததுபோலப்புக்கார். (14)

அச்சுதனையனுங்காணாவரற்கிணையாரேனுங்கண்
ணுச்சகந்தனிலுமிங்குதிபர்போலதிதியாரென்
றுச்சரித்துபசரித்தேயுள்ளமிக்குவகையோங்கிக்
கைச்செயலருக்கியாதிகடன்முறைபலவுங்கண்டான். (15)

மின்னனார்செங்கைகொட்டிவித்தைகள்பலமிரட்டிப்
பொன்னின்மாமேருவென்னும்புணர்முலைச்சருவிகாட்டி
யன்னவனுரத்திற்கூட்டியற்புதமமைத்தபோதுந்
தன்னிருகரமுகிழ்த்தஞ்சலிசெயுஞ்சார்பினின்றான். (16)

முனிவனும்பூசாகாலமுற்றுமுனதிதிபூசை
கனிவொடுபுரிவமென்றுகனிபலமலர்கைக்கொண்டு
வனிதையர்திருத்தாடன்னின்மலைமகடனைப்பாவித்தே
யினியவாமஞ்சனத்தாலபிடேகமியற்றிப்பின்னும். (17)

கண்பனிமலர்கடூற்றிக்கரத்துறுமலர்கடூற்றி
யெண்பிறழாதுவாய்ந்தகனிநிவேதனமியற்றிப்
பண்பின்மெய்யானந்தத்திற்பாவியுள்ளுருக்கமுற்றே
நண்பொடுபறிச்சினின்றனண்ணுமைம்புலனைவென்றான். (18)

குற்றமேயுடையார்நெஞ்சுகுறுகுறுப்பெய்திக்கல்வி
கற்றிலார்போலநிற்பின்கடுஞ்சாபமெய்துமென்னாப்
பற்றிலார்மாட்டுச்சற்றும்பற்றிலாராகிச்செல்வார்
சுற்றுமேநோக்கிநோக்கிச்சங்கனைத்துருவிச்சென்றார். (19)

கொந்தவர்குழலினாத்தானவகுருவைநோக்கிச்
செந்தழல்பிடிக்கவென்றற்றிரணமோபனிதமான
முந்துறுகட்டியோவம்முனிவரன்கதலித்தண்டாம்
வந்ததுதெய்வத்தன்மையென்றுரைவழங்கினார். (20)

மங்களப்பாட்டுளாட்டுள்மாழ்குதலணுவுமில்லா
னெங்களைக்கண்டபோதேயிறைவியேயென்னவெண்ணிக்
கொங்கலராலர்ச்சித்தகொள்கைகண்டச்சமெய்திப்
பங்கமில்லாமலுற்றதடிமையேம்பாக்யமென்றார். (21)

என்றினோர்கூறக்கேட்டவெள்ளியுமிறும்பூதெய்தி
யொன்றுவிட்டுரைக்கவேண்டுமென்னவேயுள்ளத்துன்னித்

ஆன்றுறுபொன்னைநோக்கியிவரையுய்த்தனனின்றேற்பா
ரின்றுநீயடிமையாமென்றியம்பினனவையுமம்மா. (22)

ஆயவனுரைத்தலோடுமமரர்தங்குரவன்சொல்வா
னீயிவனுரைத்தமாற்றமெய்ம்மையோநீத்தோன்றானுஞ்
சேயிழையாரைத்தேவியாயுளஞ்செய்தானன்றி
மாயையிற்பட்டுளோனேவழங்கிலாரடிமையென்றான். (23)

ஐயமுண்டாகினீசென்றாலயத்தம்பிகைப்பொற்
செய்யதாண்மலரிலர்ச்சைசெய்திடுமலர்கள்யாவு
மெய்யதாய்விளங்குஞ்சான்றாய்க்கண்டுளமேன்மைதேர்வாய்
மையவாங்கண்வலைப்பட்டதும்படாததுவுமன்றே. (24)

எனமொழிந்திடுதலோடுமியனுமாணாக்கரோடு
கனமொழிசுங்கன்றானுங்கதித்தவாலயத்துளெய்தி
மனமொழிகடந்தமேனைமகளிருமலர்த்தாடன்னின்
முனமொழியடையாளத்தின்மெய்த்திடுமலரைக்கண்டான். ()

வேறு.

வெறிமலர்த்திருவடிமிசைமிகுசபரியைச்செய்
துறுமலர்க்கருங்குழலினாற் றேங்கியமணத்தான்
மறுமையிம்மையுமருள்செயுமரகதாம்பிகைக்கு
நறுமலர்க்குழனாயகியெனப்பலர்நவின்றார். (26)

ஈதுநோக்கியசுங்கனுங்குரவன்றனிழைத்த
மாதவத்தினிற்பாதியீந்தளித்தனன்வானோர்
நாதனாகியகுரவனும்யாவருநண்ணிப்
பாதபங்கயம்பணிந்தருட்பெருக்கினைப்படைத்தார். (27)

அன்புமீசனுமிரண்டெனவறிவிலாரறைவ
ரன்புமீசனுமொன்றெனவறிவுள்ளோரமைவா
லன்புமீசனும்வேறறக்கலந்தவந்தணனே
யன்பதேயுருவானவர்க்கர்ச்சையாற்றுறவே. (28)

அலரியேழ்பரிவைய்த்தினண்டத்தினெழுமுன்
புலரிமூழ்குபுகடன்களைப்புரிவுறும்போழ்தின்

*வல்ரியாவையுமுரன்றதால்வாவியிலென்று
மலரிலாமலையாகவென்றேசபித்தனனால். (29)

வேறு.

துன்பெலாமகற்றுவிக்குந்தூய்த்தடந்தவளையாதி
யென்பிலாச்சலசரங்கள்யாவையுமின்மையாலே
பின்பெலாநதியுமிந்தவாவிநேர்பேசற்பாற்றோ
வென்பெலாமலராமென்னிலெவரேயியம்பவல்லார். (30)

கூடலின்மேவுபொற்றாமரையினிற்கூடற்கோமா
னூடலின்¶மயிலையென்பதிலாதாறுமமைவொன்றேயா
னோடலிறேனைத்தீர்த்துமுயர்செல்வமுதவலாலே
பாடலினடைப்புங்கொல்லோவிதன்பயன்பகருவோர்க்கே. (31)

அன்னமாதவன்படிந்தேயருமன்பலருங்கொண்டு
முன்னமாலறியாவண்ணன்முளரியந்தாளுமெய்ம்மோய்
சொன்னமாமடியுமர்ச்சைதுதியொடுபுரிந்திறைஞ்சி
யென்னமாதவம்புரிந்தேனெனக்களித்திறுமாந்தாற்றான். (32)

வேறு.

அனையமாமுனியையனையம்பிகைதன்னை
நினைவின்வேறறக்கலத்தலும்பேரன்புநிறைந்து
வினையகன்றுமெய்யானந்தவாரியுண்மேவிக்
கனைகழற்றிருவடிநிழற்பிரிவறக்கலந்தான். (33)

தேவலோகத்தில் தேவேந்திரன் சபையில் வியாழபகவானுஞ்சுக்கிரபகவானுங்கூடிய காலத்தில் சுக்கிரபகவான் பூலோகத்திலே மாயையை விலக்கினவரொருவருமில்லையென்று சொன்னார்: அதற்குச்செமதக்கினிமஹாரிஷி யொருவரிருக்கிறாரென்று குருபகவான் சொன்னார். சொல்லி யவர்மாயைக்குட்பட்டால் என்றவத்திற்பாதி தருவேனென்றார் அதற்குச்சுக்கிரபகவான் அவர் மாயைக்குட்பட்டால் நீ யென்னடிமை. உட்படாவிட்டால் நானுன்னடிமையென்று சபதஞ்செய்துகொண்டனர். உடனே சுக்கிரபகவான் நாலு பெண்களை மிகுந்த வழகாய் சிருஷ்டித்துப்பெண்களைப்பார்த்து நீவிர் பத்திராரணியத்திற் போய் செமதக்கினி

* அரி—தவளை.
¶ மயிலை—மச்சம்.

மஹாரிஷியைக்கண்டு மயக்கிவாருமென்றனுப்பினார். அவர்கள் போய் பலவிதமாக மயக்கினார்கள். அவர் மஹாதேவியென்று பூஜை செய்து அசஞ்சலாபக்தியோடிருந்தார். அப்பெண்கள் சுக்கிரபகவானிடம்போய் எம்மால் முடியாதென்றார். அச்சுக்கிரபகவான் குருபகவானைப்பார்த்து வஞ்சனையாக நீர் தோற்றீரென்றார். அக்குருபகவான் நான் தோற்க வில்லை. நீர் தோற்றீர். அவர் தேவியென்றர்ச்சனை செய்த விஷயத்தை நீர் பத்ராரணியஞ்சென்று அத்தலத்தில் அம்மனைக்கண்டு எந்த மலரா லர்ச்சித்தாரோ அந்த மலரை யம்மனிடங்கண்டு தெளிந்துகொள்வீரெ ன்றார். அப்படியே தேவர்களோடும் வந்து அம்மனைக்கண்டு அந்தவம் மன் கூந்தலில் அந்நறுமலர் வாசனை வீசியதைக்கண்டு நறுமலர்க்குழ லம்மை யென்று தெளிந்தார்கள். சுக்கிரபகவான் அவமானப்பட்டுப்பா திசவத்தை யிழந்து சென்றனர். அதன்மேல் அச்செமதக்கினி மஹா ரிஷி பூசை செய்யக் காலையில் ஸ்நானஞ்செய்து நித்தியகடன் முடிக்கு ங்காலையில் அக்காண்டபதீர்த்தத்தில்தவளைகள்மிகுதியாய்க்கத்தினதற்கு அம்முனிவர்இத்தீர்த்தத்தில் தவளையில்லாமலிருக்கக்கடவதென்றார். அத னால் தவளைமுதலான சலசரங்களில்லாமையாய்விட்டது. அத்தீர்த்தம் மதுரையில் சுந்தரேஸ்வரர் நாரைக்காக மட்சமில்லாமலிருக்கக்கடவ தென்று அனுக்கிரகித்தபடியே அந்தப்பொற்றாமரையில்மட்சமில்லாம லிருக்கின்றது. இந்தத்தீர்த்தம் அதுபோல் சலசரமில்லாமலும் நோயை த்தீர்த்துஞ் செல்வத்தைக் கொடுப்பதுமானதால் இதற்குச்சமானமெதை ச்சொல்லலாம், ஆகையாலித்தீர்த்தமாடி அய்யனையும் அம்மையையும் பூசனைசெய்து மெஞ்ஞானமடைந்து சிவபாதநிழலில் கலந்திருந்தார்.

முற்றும்.

# மிளகைப்பயறாக்கியபடலம்.

இளகுறுமுள்ளந்தூய்மையிமையந்தவன்றவமிழைத்துப்
பளகறுத்துலகமெல்லாம்பரவிடப்பேண்மைசொற்றா
மளகையாள்பவன்போற்செல்வமமையொருநாய்கற்காக
மிளகினைமுற்கஞ்செய்தமேதகைவிளம்பலுற்றாம். (1)

உவாநிறைகடல்போற்செல்வமோங்குறுவளப்புநோக்கத்
திவாகரன்றினமும்வந்துசேரனுட்டிற்சிறந்த
தவாவெழின்மணிமாடங்கடக்கசீர்காண்டலாலே
திவாகரபுரமென்றோர்பேர்சிறந்திடுநகரொன்றுண்டால். (2)

செந்திருமகளும்வெண்பூமகளுமேசேரநோக்கி
யிந்திரன்றானென்றைக்குமந்தரத்தானென்றெண்ணி
மந்திரிகண்ணிலானென்றிவனிடமருவிவாழுஞ்
சந்திரகுப்தனென்னுநாய்கன்றான்றழைந்துள்ளானால். (3)

என்குலமதனைக்காக்குமெம்பிரான்சுந்தரேசன்
முன்குலமாணிக்கந்தந்திட்டசீர்மொழியுங்காலைத்
தன்குலமதனுவின்னானிடம்வாங்கித்தந்ததன்றிப்
பின்குலமணியேதக்குமணியன்றிப்பிறர்தமக்கே. [4]

வித்தனைமனதுள்வைத்துவியமிக்குடையனாகிப்
பத்தனைச்சிவமாப்பாவித்திறைஞ்சிடுபான்மையாலே
யெத்தனைகோடியென்றிங்கியம்புவேனிரப்போர்மேனி
னெய்த்தநீர்கோடிரென்றுகோடியாயீகுவானால். [5]

வாணிபஞ்செய்வோருக்குள்மாந்திமகிமைவாய்ந்தான்
பூணியல்பலவுங்கொண்டுபொருந்துமூதியமங்குற்றே
காணியறேயர்ந்தன்னிற்கழிப்பொதியிதப்பக்கொண்டு
சேணியனெறியிற்செல்லச்சிந்தைசெய்திருந்தானம்மா. [6]

தண்டுதலின்றிச்சாலத்தந்தியொட்டகத்தின்மீது
பண்டிகணிறையச்சேர்த்துப்பரித்திடச்செல்லவுய்த்து
மண்டலவணிகர்கோமான்வாணிபமூலமாகப்
பண்டுளசினகரங்காண்குவனெனப்பரிவிற்சென்றான். [7]

பொற்பொதியதிகமென்கோகறிப்பொதியெனப்பொதிந்து
சொற்பொதியதிகமென்கோதாழமைசேனைசூழக்
கற்பொதிசேரநாட்டைக்கடந்துபின்கவுடநாட்டை
விற்பொதிமாடமல்கும்பழனியங்கிரியைமேவி. [8]

நாணிக்கண்புதைத்தாதித்தனடங்குறவொளிருந்தூய
மாணிக்கங்கண்டுவந்தவாரியமன்களிப்பப்
பாணிக்காதுடனேஞானமணியொடுமணிபயந்த
மாணிக்கவரையின்மேவும்வள்ளலைவணக்கஞ்செய்தான். [9]

பொன்னிக்குத்தரத்தும்பச்சிமத்தினும்புதுமையாக
மன்னியபதிகள்கண்டுவணங்கிநன்னதிகளாடி

யென்னையானையாருணைசவனையிறைஞ்சியேத்திப்
பின்னையாள்குடமூக்கார்ந்தபிரான்றனைப்பெரிதிறைஞ்சி. [10)

வலஞ்சுழிமேற்காவேரியிடைமருதூர்வனப்புப்
பலஞ்செறிதிருக்குற்றாலந்துலாத்தலம்பகருமாரூர்
கலஞ்செறிசண்பைவேளூர்கந்துகாபுரியாப்பாடி
நலஞ்செறிபனந்தாளாதிப்பதிபலநண்ணிப்போற்றி. [11]

உத்தரதேயஞ்செல்வானுயரிளங்கோக் கன்றானும்
பத்திராரணியஞ்சென்றுபரன்சினகரத்தின்மேல்பால்
சித்திரமாயமர்ந்தேதிருக்குளம்படிந்தேயாடிப்
பத்திரத்தாலர்ச்சித்துப்பரமனைப்பணிந்தானன்றே. (12)

அங்கண்சினகரத்துக்காகவேபாயம்வகுக்குந்
தங்கணத்தவரிலேகஞ்சுகத்தவர்தாமங்கெய்தி
யிங்குநீயாவரெவ்வூரெப்பெயர்பொதியுளென்னே
சிங்கிலாதறியும்வண்ணமெய்ம்மையிற்செப்புமென்றார். (13)

அவ்வுரைகேட்டவேவலாளர்களாயத்தாருக்
கிவ்வுரைமெய்சொலிற்பொன்னிகைமிக்குறுமென்றெண்ணிக்
கவ்வையராகியேயக்கரவடங்கருத்துட்கொண்டே
யொவ்வியநெஞ்சர்போலவுசாவினர்க்குரைக்கலுற்றார். (14)

சேரநாடதனின்மேவுந்திவாகரபுரத்தில்வாழ்வோந்
தீரநாடெல்லாநீந்திக்கவுடநாட்டினுக்குச்செல்வோ
மீரநாடுற்றோமிந்தப்பொதியெலாமுற்கமென்றே
சாரநாடணந்தன்னோர்க்குச்சுங்கமுந்தந்துசென்றார். (15)

வடதிசைச்செல்லுமேல்வைமணிமுத்தாநதியின்பாற்போய்
தடநதிதனிற்குடைந்துபழமலைத்தாணுத்தாளி
னிடைவிழுந்திறைஞ்சியேத்தியிருந்தனரிருந்தவெல்லை
யிடல்கொளந்நகரின்மேவும்வணிகர்கள்வினவலுற்றார். (16)

தென்புலவணிகீர்நுங்கள்பொதியென்னைசெப்புமென்ன
நன்புலம்விளைவெவண்சொல்லுமினெனநாய்கர்கேட்ப
வன்புலவாந்தூயவறிவினரமைவினோக்கித்
தென்புலம்விளைந்ததானகறிப்பொதிதெரிமினென்றார். (17]

இச்சரக்கெடுமினென்னவிளங்கோக்கர்பொதியவிழ்த்துக்
கைச்சரக்கெடுத்துக்காட்டமுற்கமாய்க்கணாலக்கண்டு
பொய்ச்சரக்குடையீர்வேறுபுகல்வதென்னென்றபோது
பிச்சரைப்போலயாவுநோக்கியேபேதுற்றாரால். (18)

என்னவோவென்னவோவென்றெனையருமேக்கமெய்திச்
சொன்னவோர்தலைமையாஞ்சந்திரகுப்தன்றன்பாற்சொற்றா
ரன்னமாவசியமென்கொலெனவணர்க்கடலுளாழ்ந்தான்
பின்னமாவதற்கென்னோகாரணமெனப்பேசினானால். (19)

ஏவலர்தம்மைநோக்கியிறைமகன்வினவலோடும்
பூவலர்காக்கள்பத்ராரணியக்கண்போந்தபோதங்
காவலாயாயத்தார்கணானவினாற்றிற்கேட்ப
நாவலர்தள்ளும்பொய்மையநவின்றதினாலோவென்பார். (20)

அன்னதின்பின்னரென்கொலோபயனாவாறு
பின்னதின்செய்திதேதாமெனவவர்பேசினார
னன்னதிவேணிசூடுநாயகன்கோயினண்ணிப்
பொன்னதினொளிரும்பொற்றாளிறைஞ்சியே புலம்பினைந்தார்.

அழுபவர்தங்கட்கென்றுமருடருமம்மானான
பழமலைநாதர்தான்சந்திரகுப்தன்பரிவைநோக்கி
வழிவருமுன்னாயத்தின்றுறையினின்வழிக்குமாறுப்
பழுதுரைத்ததனான்முற்கமாயினதெனப்பகர்ந்தார். (22)

ஆயினுமவனைசென்றாலனைத்துமேசரியாமென்றார்
போயினும்வேண்டுமென்றேபுட்கரவாணிசெப்ப
மாயினுமுயிரளிக்குமருந்துபெற்றவரோடொப்ப
தாயினுங்கருணையான்சொற்கேட்டுளமாவலுற்றான். (23)

அவ்வுரையமையக்கேட்டநாய்கர்கோனவணிகஞ்ஞு
தெவ்வுரையிலாதபத்ராரண்ணியத்தன்னிற்சேர்ந்தே
யவ்வுரைகல்லுக்காணியாமவனனைவரோடு
மெவ்வுரையுங்கடந்தோன்முனம்புகுந்திறைஞ்சியேத்தி. (24)

எந்தையேயெந்தையேயிவ்வெழுநிலவளாகத்திந்த
விந்தையேபுரிவோர்நின்னையேயன்றிவேறுண்டேயோ

விந்தையேபுனைகொடரவிறைவவென்றேபிழைத்தே
ணைந்தையேய்முற்கமாகவாக்கினைகழியையையா. (25)

முன்வண்ணங்கழியதாமுற்கத்தினைமுற்றுமாக்கின்
பொன்வண்ணங்களும்வேணிப்புனிதவிப்பொருளையெல்லா
நின்வண்ணக்கோயிலுக்குநினதடியவர்க்கும்வேண்டி
நன்வண்ணம்புரிவனீங்குநமருள்செய்வையென்றான். (26)

நெடியநான்முகனுங்காணுநின்மலாபோற்றியேற்றுக் [ற்றி.
கொடியனேகொடியனென்செய்வினைநெஞ்சிற்கொள்ளாய்போ
யடியனேன்பிழையைநன்மையாக்குவாய்போற்றிநீற்றின்
பொடியனேபுண்டரீகபுரத்திறைபோற்றி·போற்றி (27)

பற்பலவிதத்திலோதிப்பணிந்தனன்பரிவுற்றேங்கி
நிற்பவப்பொழுதெம்மையனிறையருட்பெறுமாறுன்னி
யற்பகலாகவூணையின்றியுள்ளயர்வாணுகித்
தற்பமுமின்றியோர்பாற்றுயின்றனன்றணவாவன்பன். (28)

ஆபவேலையினேயெம்மானன்பன்றன்கனவிற்றோன்றி
நாயகநாய்கரேறேநண்ணியமுற்கம்யாவுந்
தூயதாங்கழியாத்தந்தோஞ்சொல்வண்ணம்புரிவையென்று
மேயவம்மொழிகேட்டாங்குவிழித்தனன்வியந்தான்மன்னே.

பொதியெலாநோக்கிநோக்கிப்பூரணவிறும்பூதுற்றுக்
கதியெலாங்கண்டதென்னக்களிப்பெனுங்கடலுட்டாழ்ந்து
நிதியெலாம்பெற்றதென்னநின்மலனருளைப்பெற்றுப்
பதியெலாநதியெலாநீள்பறம்பெலாமகன்றுசெல்வான். (30

கவுடதேயத்தின்பாற்போய்கழிப்பொதிமுற்றும்விற்றே
குவடெனநிதியங்கொண்டேகுலவுசோணாட்டிண்மேவித்
திவ்டாநீறணிந்தசந்திரகுப்தச்சீரோன்
கவடறுதருக்கள்போக்கிச்சினகரங்காணலுற்றான். (31)

கருப்பம்வாய்கிரகமத்தமண்டபங்கவின்மணஞ்செய்
திருப்பிறழ்ந்தண்டமேவுமண்டபஞ்சிகரியாதி
மருப்பெறுநறுமலர்ப்பூங்குழலெய்மோய்வதியுங்கோயில்
விருப்பினாவரணமாரைவிளங்கவேயியற்றுவித்தான். (32)

பையராவென்பிணாம்பரித்திடுபகவனுக்குச்
செய்யரவப்பொற்பூண்களைசிறப்புறப்பலவியற்றிப்
பைபரவிடைபாளோடுபெருமணித்தேரிலேறுந்
தெய்வநாயகனுக்கேற்றதிருவிழாக்குயிற்றினால். (33)

நேருறுவணிகன்றன்னைநேயம்வைத்தடிமைகொள்ளக்
காருறுகதியைமுற்கமாச்செய்தகாரணத்தாற்
பாரினிலைதனாலன்றேபயறணிநாதரென்று
தேருறுவோர்களியாருஞ்செப்புவர்நாமமம்மா. (34)

முப்பதின்மூன்றுகோடிவிபுதர்கள்முறையிற்போற்றத்
துப்பதினிறத்தெம்மானுக்கற்புதந்துலங்கும்வண்ணந்
தெப்பமதேறுகின்றவிழவெலாஞ்சிறப்பச்செய்து
செப்புறுமுப்பற்றின்றியடிமையிற்றேர்ந்துள்ளானால். (35)

கரும்பெனுமொழியாள்பாகன்கழலிணையிறைஞ்சியேத்தி
யிரும்பெனுநெஞ்சந்தீகாணிழுதெனவிளகிக்கண்ணீ
ரரும்பியேபாசநீங்கிடருமறைகடந்தஞானப்
பெரும்பதமுற்றானந்தப்பேரின்பமெய்தினால். (36)

சேரநாடாகிய மலைநாட்டின்கண் திவாகரபுரமென்னும் பதியில் வாழ்கின்ற வணிககுல சிரோன்மணியாகிய சந்திரகுப்தனென்னும்பெயரினையுடைய செட்டியாரானவர் சிவபக்தியுஞ் செல்வமுமிகுதியாயுள்ளவர். மிளகு வியாபாரஞ்செய்பவரிதின்மூலமாய் அனேகஞ்சிவதலந்தெரிசனஞ்செய்ய எண்ணங்கொண்டு மிளகுப்பொதியை யானைகள் மேலும் ஒட்டைகள் மேலும் வண்டிகள்மேலும் ஏற்றிக்கொண்டு அநேக சிவஸ்தலந்தெரிசனஞ் செய்துகொண்டு வந்தவர். இந்தப்பத்திராரணியம் வந்தபோது ஆயத்துறைச்சேவகர்கள் என்ன பொதியென்று கேட்டார்கள். அச்செட்டியார் காரியக்காரர் மிளகுப்பொதிக்குத்தீர்வைப்பணமதிகமென்றே பயறுபொதி யென்று அதற்குள்ள தீர்வை செலுத்திச் சென்றார்கள். விருத்தாசலம்போய் விற்குமளவில் என்னபொதியென்றார் மிளகு பொதி யென்றார். பொதியவிழ்த்துக்காட்டும்போது பயறாயிருந்தது. எல்லாப்பொதியும் பயறாயிருந்ததுகண்டு மிகவருத்தமடைந்து பழமலைநாதரிடம்போய் வணங்கி வருத்தப்பட்டிருக்குமளவில் என்ன காரணமென்று எங்குங்காலத்தில் கெட்டவிடத்திற்றேடுமென்று அசரீரி வசனஞ்சொல்ல அப்போதுகாரியஸ்தர்கள் பத்ராரணியத்தில் ஆயத்துறை வரிக்காகப் பயறென்று சொன்னோமென்றார். அப்படியானால் அங்கே போவோமென்று பத்ராரணியம் புகுந்து ஸ்வாமியைக் கண்டு

வணங்கி இப்பொதிகள் மிளகானால் உம்முடைய ஆலயத்திற்கும் உமது அடியவர்கட்குஞ் சிலவாக்கிவிடுகிறேனென்று வருந்தி நித்திரைசெய்யு மளவில் அவர்கள் கனவில் பரமசிவனெழுந்தருளி மிளகாய்த்தந்தோமெ ன்றார். அவர்கள் கவுடதேயஞ்சென்று விற்று இங்குவந்து சிவாலயங் கட்டிவைத்துத்திருவிழாச்செய்து தெப்பத்திருவிழாவுஞ்செய்து திருவரு ளால் ஞானம்பெற்றுப்பேரின்ப மடைந்தார். ஆகையால் வணிகேச னென்றுந்திருநாமம் ஐயனுக்குண்டு.

முற்றும்.

---

# முனிவர்பூசனைப் படலம்.

---

நறுமலர்க்குழலுயகிநாயகன்றனைக்
குறிகொளுந்தனபதியெனும்வணிகர்தங்கோமான்
நறியைமுற்கமாகியகதைகட்டுரைதந்து
மறவர்பூசித்தமுறைமையைப்புரிந்தவாறறைவாம்.

அன்பினுக்கெளிதாகியவருட்கடலன்னான்
முன்பினித்தமான்மியமதைமொழிதரக்கேட்டே
பின்பெனப்படும்பாவையிற்படியிருடியர்க
ளன்புநெக்குருகிக்கரைகாண்கிலாதிருந்தார். (2)

துறவுபூண்டிடுமாதவர்யாவருந்தொழுதே
கறவையான்கன்றுகண்டெனவுருகிநீர்காலத்
தரையினித்தலப்பயறணிநாதனைச்சபரி
முறையியற்றிடவெண்ணினமொழிந்தருளென்றார். (3)

என்றுகூறியவிருடியர்க்கிறைவனுஞ்சூரவ
னன்றியம்பினீர்நானுமிஃதெண்ணினேனென்னத்
துன்றுமாதவரனைவருமொருங்குறத்துவன்றிச்
சென்றுகாண்டுமென்றெழுந்தனர்சிந்தைமிக்குவந்தே. (4)

அன்னமாதவரம்பரத்தாற்றையேயடைந்து
*கன்னமாம்விழிமாலையன்பதிபலகண்டு

---

* கன்னமாம்விழி—பாம்பு.

மன்னுபாபதிசெய்யதாட்டாமரைவணங்கி
யென்னமாதவமியற்றினமோவெனவியைந்தார்.

நதியணிந்திடுநாயகன்றிருவடித்துணையே
கதியெனக்கொளுமுனிவரரனைவருங்கண்டு
நிதியின்வைப்பினைமுனிவரர்நேர்ந்தனர்நேர்ந்திப்
பதியிதாமெனப்பாளையமிறங்கினர்பரவி.

துதிப்பரோர்சிலர்பாடுவரோர்சிலர்துள்ளிக்
குதிப்பரோர்சிலர்பரவுவரோர்சிலர்குழுவோ
டதிப்பரோர்சிலரிப்பதிப்பெருமைகளனைத்து
மதிப்பரோர்சிலர்வழுத்துவரோர்சிலர்மகிழ்ந்தே.

இன்னவாறுகாண்டபமாந்தடங்கரையெய்திச்
சொன்னசங்கற்பம்விதித்திடுவிதிமுறைதோய்ந்து
மின்னயம்பெறுநீறொடுகண்டிகைவேய்ந்து
நன்னயம்பெறுகடன்முறைபுரிவனநயந்து.

மன்னுறுஞ்சபரிக்குவேண்டுனவெலாம்வரித்துச்
சொன்னநான்மறைச்சுருதியிற்சொற்றிடும்வண்ண
முன்னமாவரணத்தினைமுறைவலம்வந்து
பன்னகப்பணிபூண்டவன்முன்படிபணிந்தே.

கடுக்கைசூடியவேணியோன்றன்னுருக்காணு
வுடுக்கைநாயகற்கபிடேகத்தையோர்ந்து
யடுக்கையாகியவெட்டருந்தயிலமேயாதி
மடுக்கும்பாளிதச்சாந்தமீறுகவேவாய்ப்ப.

வாசஞ்சேர்திருமஞ்சனமந்திரத்தாட்டி
வீசஞ்சாலிகைக்கண்ணிகைபணியெனவேய்ந்தே
யோசஞ்சார்தருபன்மலரருச்சனையுஞற்றி
நேசஞ்சார்தரவருக்கத்தின்பலநிவேதித்து

கமழ்நறும்புகையாதியவட்டமங்கலங்க
ளுமிழ்சுடர்ப்பளிதத்தொளிகாட்டியொன்பானி
னமவெனப்பணிந்தக்கமஞ்சையுநவின்று
தமதுளங்களிகூர்ந்திடத்துதிசெயச்சமைந்தார்.

## வேறு.

சிறியவருணர்ச்சியுள்ளேதேர்ந்தவர்தம்மைக்கண்டு
பிறியமாம்வணக்கமில்லையென்பதுபிழையுறுமே
நிறுவினமுளத்தைமேலோரிரங்குறுநெறிபொய்யாமோ
மறிமழுக்கரம்படைத்தவள்ளலேமலர்த்தாள்போற்றி. (13)

தோட்டியற்கடுக்கைசூடுந்தோன்றலேயெண்ணமெல்லாங்
கூட்டிவைத்திவையென்னக்குறையையாரிடஞ்சொல்வேமா
னூட்டிதண்டள்வும்பார்ப்பதுன்குணமாதலாலே
பாட்டினைப்பாராதிங்கணிருப்பையோபரமபோற்றி. (14)

என்பனபலவும்பன்னியிறைஞ்சினோர்க்கிரக்கங்கூரப்
பொன்பலவாகச்சூடும்பொலிவைப்போன்மதலைபூண்ட
முன்பன்வெள்விடைமேற்றோன்றிமுன்வரமிகவுநல்கிப்
பின்பினவ்விலிங்கத்துற்றான்பெற்றனர்பெற்றியோரே. (15)

விடைபெற்றமுனிக்குழாங்கண்மேதக்கவரங்கள்பெற்றே
கொடைபெற்றோமென்றுவந்துதம்முழிக்குறுகினாரால்
விடைபெற்றநெடியமாலுமெண்கமலத்தினானுந்
தடைபெற்றோமென்றுநெஞ்சஞ்சமழ்ப்பொடுமேத்தெடுப்ப( )

ஆதலாலித்தலத்தின்பெருமைகளனைத்துஞ்சொல்ல
வேதனான்முகன்மாலேனுமிற்றெனவிளம்பற்பாற்றோ
காதலாற்கற்றோர்கேட்டோர்கருதினோர்வரைந்தோர்பெற்றோ
ரோதலாப்பொருளையெய்தியுண்மையின்வாழ்வரம்மா. (17)

வேதமோங்குகவேள்வியுமோங்குக
மாதமாதமும்மாரியுமோங்குக
தீதகன்றசிறப்பும்வளங்களுங்
காதல்பெற்றவறமுங்கதிக்கவே

ஆகத்திருவிருத்தம் 825.

முற்றும்.